86

27 MAY 1938

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 7

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 4, 5

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 முஹற்றம், ஸபர்௴
1936௵ ஏப்ரல், மேமீ

1. அல்குர் ஆன் ... 97
2. அல்ஹதீது ... 99
3. இஸ்லாமியப் பிரசாரம் ... 101
4. இஸ்லாமிய சமத்துவம் ... 105
5. இந்திய முஸ்லிம்களின் கேவல நிலைமைக்குக் காரண மென்ன? ... 107
6. மௌலானா வித்தீகியின் அரிய பிரசங்கங்கள் ... 110
7. யவ்முந்நபீ ... 138
8. காதியானி "பித்னா" ... 139
9. முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன? ... 140

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,, 4	0	0
தனிப் பிரதி ...	,, 0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

27 MAY 1936
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1355 முஹற்றம், ஸபர் மீ 1936 ளு ஏப்ரல், மே மீ	இதழ் 4, 5

அல் குர்ஆன்

நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையவர்கள் இன்னும் நல்லகாரியம் செய்பவர்கள் ஆகியவர்களுடன் இருக்கிறான்.

—திருகுர்ஆன்.

சோதரீர்! இந்த ஆயத்தானது திருகுர்ஆனின் ஸூரத்து நஹ்லிலுள்ளது. இதன் அர்த்தம் யாவருக்கும் விளங்கக்கூடிய முறையில் மிகத் தெளிவாகவே இருக்கிறது. ஆதலின் இதற்குப் பிரமாதமாக விரிவான வியாக்கியானம் எதுவும் அவ்வளவு அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. சுறுங்கக்கூறுமிடத்து, "பயபக்தியுள்ளவர்களை அல்லாஹுசுப்ஹானஹு வதஆலா ஆதரிப்பான்" என்பதுதான் இந்த ஆயத்தின் சாரம். பயபக்தியுள்ளவர்கள் யார்? நல்லகாரியம் செய்பவர் யார்? அவர்களை அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா எப்படி ஆதரிக்கின்றான் என்ற விஷயங்களைக் கவனிப்பதற்குமுன், இந்த ஆயத்து சம்பந்தமாக உண்டாகிற ஒரு சிறிய சந்தேகத்தை இங்கு நிவர்த்திப்பது அவசியமாக இருக்கிறது. தாடி வைத்து, ஜுப்பா போட்டு, தலைப்பாகை கட்டி, ஐந்து நேரமும் மஸ்ஜிதுக்குச் சென்று தொழுகையை நிறைவேற்றி, பொய் சொல்லாமலும், வஞ்சிக்காமலும், ஏமாற்றாமலும் இருந்துவருகிற ஜனங்கள் செய்ய முற்படும் காரியம் துலங்குவதில்லை; இவைகளைச் செய்யாமல் சதா பாவத்தில் மூழ்கி தடபுடல் பேச்சுகளும் ஆடம்பர உடைகளுமுள்ளவர்கள் தொட்டகாரியம் துலங்கி நாளுக்குநாள் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். ஆகவே, வெளிக்கு நல்லோர்களாக இருப்பவர்களுக்கு ஆண்டவனின் சோதனையும், அயோக்கியர்களாக இருப்பவர்களுக்கு அவனது அருளும் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், திருக்குர்ஆனிலுள்ள மேற்கண்ட ஆயத்து இதற்குமுற்றிலும் நேர் மாறாக இருக்கிறதே? இதற்குக் காரணமென்னவென்று சிலருக்குச் சந்தேகமுண்டாகலாம். மார்க்கத்தை அறியாத சில பாமரர்களும், பணச்செருக்கு கொண்டு தலை கிறுகிறுத்து மெய்மறந்து திரியும் சில தனவந்தர்களும் இவ்விதமாகவேகூறிவருகிறார்கள் என்பதிற் சந்தேகமில்லை. எனவே, அல்லாஹுதஆலாவின்

துணை எவ்விதம் என்பதையும், அவனது அருள் எவ்விதமென்பதையும் சற்று நிதானித்துப் பார்ப்பவர்களுக்கு விஷயம் புலனாகாமற் போகாது. ஒருவன் பசிப்பிணியால் வாடுதல் அல்லது தரித்திரனாக இருத்தல் அல்லது உடுத்த உடை கிடைக்காமல் தவித்தல்போன்ற வறுமையில் பீடிக்கப்பட்டிருந்தால் அவன்பால் அல்லாஹ்வின் அருள் என்னும் கிருபை இல்லை என்று கருதுவது மூடத்தனமேயாகும். ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் மூன்றாவது வேதத்தைக்கொண்டுவந்த முக்கிய ரஸூல்மார்களில் ஒருவர் என்பதும், மிகவும் முக்கியமான நபிமார்களில் ஒருவர் என்பதும் முஸ்லிம்களின் நம்பிக்கை. கிறிஸ்துவ சகோதரர்கள் அவரைக் கடவுளின் புதல்வரென்றும் (நஊதுபில்லாஹ்) கூடக்கூறி மிகவும் முக்கியமான அந்தஸ்தையும் மரியாதையையும் அளித்துவருகிறார்கள். எனவே, உலகத்திலுள்ள ஏறக்குறைய 200-கோடி ஜனங்களில் முஸ்லிம் கிறிஸ்துவர் ஆகிய இரண்டு சமூகத்திலுமாகச் சேர்ந்து மொத்தம் 120-கோடிக்கு அதிகமான ஜனங்கள் அவர்களை மிகவும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் கொண்டாடுகின்றனர். யூதர்களைத் தவிரவுள்ள இதர ஜனங்களும்கூட அவர்களை நபியென்று ஒப்புக்கொண்டு விசுவாசிக்காவிட்டாலும் அவர்களது உபதேசங்களைப் பொன்னேபோல் போற்றுகின்றனர். இப்படிப்பட்ட மகான் ஈஸா (அலை.) அவர்களுக்கு ஆண்டவனது அருள், அவனது கிருபை, தயை ஆகியவைகள் இல்லை என்று எவராவது கூற முடியுமா? அவர்கள் உலகத்திற்கு அருளைக் கொண்டுவந்ததாகப் பல்கோடி மக்கள் நம்பியும் கூறியும் வரும்போது இதனை மறுத்துக் கூற எவரும் துணியார். ஆகவே, உலகம் போற்றும் இப்பெரியார் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டவர். உடுத்த உடைக்கும்கூடக் கஷ்டப்படவேண்டிய நிலைமையிலிருந்தவர். எனவே ஒருவர் தரித்திரதசையில் இருந்தால் அவருக்கு ஆண்டவனின் அருள் இல்லை, சகாயமில்லை, துணை இல்லை என்று நினைப்பது மூடத்தனமேயன்றி வேறன்று என்பது இந்த உதாரணத்திலிருந்து தெரியவருகிறது.

ஒருவர் நோயால் பீடிக்கப்பட்டுக் கஷ்டசங்கடங்களை அனுபவிப்பாராயின் அவர் ஆண்டவனின் அருளுக்குப் புறம்பானவர் என்று கருதவும் இடமில்லை. ஹஜ்ரத் அய்யூப் (அலை.) அவர்கள் ஆண்டவனின் நபியாக இருந்தார்கள். பைபிள் இவரை யோபு என்றழைக்கிறது. இவரைப் பார்க்கினும் அதிகமாக வியாதியால் பீடிக்கப்பட்டுக் கஷ்ட சங்கடத்தை அனுபவித்தவர் இத்தரணியில் இதற்குமுன் வேறு எவருமிருந்ததில்லை. இனிமேலும் இருக்கப் போவதில்லை. ஆகவே, இவ்வுலக ஜீவியத்தில் தரித்திரம், வருமை, நோய், சஞ்சலம் முதலியவைகளை அனுபவிப்பது பயபக்தியுள்ளவர், பயபக்தி இல்லாதவர் ஆகிய எல்லோருக்கும் பொதுவான விஷயமேயாகும். எனவே, ஒருவர் அனுபவிக்கும் இன்பம் துன்பம் ஆகியவைகளைப் பார்த்து அவரை நல்லோரென்றும் தீயோரென்றும் நிதானிக்க முடியாது. இற்றை நாளில், “ஆண்டவன் என ஒருவன் உளனோ” என்று சந்தேகிப்பவர்களும், ஆண்டவன் கிடையாது என்று பகிரங்கமாகக் கூறுபவரும் மலிந்துவிட்டனர். ருஷியா தேசத்திலோவென்றால் கிறிஸ்துவக் கோவில்களும் மஸ்ஜிதுகளும் பள்ளிக்கூடங்களாகவோ, தொழிற்சாலைகளாகவோ, அரசாங்கக் காரியாலயமாகவோ மாற்றப்பட்டுவிட்டதாகத் தெரிகிறோம். அங்கு மதப்பிரசாரம் கண்டிப்பாகத் தடுக்கப்பட்டு, மதத்திற்கு விரோதமான போராட்டம் பலமாக நடந்துகொண்டிருக்கிறது. இப்போராட்டத்தை அங்குள்ள பொது ஜனங்கள் மட்டுமின்றி அரசாங்கமே தலைமை வகித்துச் செய்துவருகிறது. ஆனால், அவ்வரசாங்கத்திற்குத் தான் தற்போது உலகிலுள்ள சகல அரசாங்கமும் அஞ்சுகின்றன, நடுங்குகின்றன. படைப் பெருக்கிலும், ஆயுதப் பெருக்கிலும் அவ்வரசாங்கத்திற்கு ஈடாக மற்றைய அரசாங்கத்தை ஒப்பிட்டுக் கூறுவது இயலாதுபோல் தோன்றுகிறது. ஆகவே, அவர்களிடம் ஆளும், பணமும் அதிகமிருப்பதால் அவர்களுக்கு தெய்வானுக்கிரகம் அதிகமிருக்கிறது என்று நிதானித்துக் கொள்வதா? அன்று, அன்று. ஆண்டவையின் அருளின் முன் பணமும், பொருளும், பொன்னும், மண்ணும் ஒரு அற்பவஸ்துவாகக் கூட இல்லை. மேலும், இவ்வுலக ஜீவியமானது மிகவும் குருகிய வாழ்க்கையுள்ளதாக இருக்கிறது. மறுஉலக வாழ்க்கைதான் மனிதனுக்குப் பிரதானமானது. மறு உலக வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களைத் தேடுபவனே புத்தியுள்ளவனாவான். எனவே பயபக்தியுள்ளவர்கள் இவ்வுலக ஜீவியத்திற்கு அனுகூலமாகவுள்ள பொன்னையும், பொருளையும், மண்ணையும், பெண்ணையும் பெரிதென மதிக்கமாட்டார்கள்.

இது அவர்களுக்குச் சித்தியாகுவதையும் சித்தியாகாதிருப்பதையும் அவர்கள் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள். அவர்களுடைய பிரதான நோக்கமெல்லாம் மறு உலகத்தைச் சார்ந்ததாகவே இருக்கும். மறு உலக வாழ்க்கையை அடையவேண்டுமாயின் அவ்வல்லோனின் அருளும், தடையும் துணையும்தான் இன்றியமையாதவை. அவைகள் கிடைக்க வேண்டுமாயின் அவன் இட்ட கட்டளையின்படி நடப்பதே சிறந்த வழியாகும். அதாவது அவ்வாண்டவன் ஏவிய காரியங்களைச் செய்வதும், விலக்கிய காரியங்களைச் செய்யாதிருப்பதுமே சிறந்த வழியாகும். இக்காரியங்கள் யாவை என்பதை குர்ஆன் ஹதீது ஆகியவைகள் நமக்கு இனியில்லாவண்ணம் எடுத்துக் கூறி இருக்கின்றன. ஆகவே, பயபக்தியுள்ளவர்கள் குர்ஆன் ஹதீதைப் பின்பற்றி அவ்வாண்டவனின் அன்பையும் அருளையும் பெற அருகதையுள்ளவர்களாகி விடுகின்றனர். அவன் தனது அன்புக்கும் அருளுக்கும் உரிய அடியார்கள்பால் கிருபை செய்து விசேஷமான சன்மானங்களை அளிப்பதெல்லாம் மறு உலக வாழ்க்கையிலேயே இருக்கின்றனவாதலால், இவ்வுலக வாழ்க்கையைக் கவனித்து நாம் அருளை நிர்ணயிக்க முடியாது.

மறு உலக வாழ்க்கையை மறந்து இவ்வுலக மாயையில் சிக்கியவர்கள், இவ்வுலகில் சாமான்யர்களால் மதிக்கப்படுகின்ற பொன்னையும் பொருளையும் மண்ணையும் பெண்ணையும் தேடுவதிலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி, அதனை யடைவதற்குத் தங்களாலான சகல முயற்சிகளையும் செய்கின்றனர். இம் முயற்சியில் சிலர் வெற்றி பெறுவதுமுண்டு தோல்வியுறுவது முண்டு. வெற்றி பெற்றவர்கள் மறு உலகத்தை இழந்துவிட்ட போதிலும் இவ்வுலகில் சொற்ப காலத்திற்கேனும் சுகமாக இருப்பதுபோல் பிறருக்குக் காண்பித்துக் கொள்ள முடியும். ஆனால், தோல்வியுற்ற கனவான்களுக்கு இதுவும்கூட இல்லை. அதாவது, அவர்கள் அவ்வுலகத்தை இழந்ததுடன் இவ்வுலகத்தையு மிழந்து விட்டனர். எனவே, புத்திசாலியாக வுள்ளவர்கள் நிலையற்றதும், நிச்சயமற்றதுமான இவ்வுலகத்தையடைய முயற்சிக்க மாட்டார்கள். இதற்கிணங்க பயபக்தி யுடையவர்களும், நன்மையான காரியங்கள் புரிந்து வருபவர்களும் இவவுலகத்திற்காக எம்முயற்சியும் செய்யமாட்டார்கள். ஆனால் தங்களுக்கு எந்த அளவிற்குத் தேவையிருக்கிறதோ அந்த அளவிற்கு இவ்வுலகச் சாதனங்களைத் தேடிக் கொண்டு பெரும்பாலான முயற்சிகளை அவ்வுலகத்திற்காகவே ஈடுபடுத்துவார்கள். இதனை அவர்கள் அடையவும் செய்வார்கள். ஏனெனில், அல்லாஹுதஆலா மேற்கண்ட வேத வசனத்தில் அவர்களுக்கு இவ்விஷயத்தை வாக்களித்திருக்கிறான். இது சம்மந்தமான இன்னும் பல அரிய விஷயங்களை எழுத முடியும். ஆயினும் விரிவஞ்சி விடுத்தனம். றஹ்மான் கிருபை செய்தால் இன்ஷா அல்லாஹ் இனி ஒரு சமயம் மறுபடியும் இதனைக் குறித்து எழுதுவாம்.

அல்ஹதீது

ஒரு நாளன்று எமன் வாசியொருவர் எம்பெருமானார் நபிகட்திலகம் (ஸல்.) அவர்கள் சமூகம் வந்து அல்லாஹ் உடைய ரஸுலே! யான் எப்பொழுதாகிலும் ஒரு தகுதியற்ற மனிதர் நல்ல அந்தஸ்திலிருப்பதைப் பார்ப்பேனாகில் என் மனம் அளவற்ற துக்கசாகரத்தில் மூழ்கி விடுகிறது; என் தலைதொடுத்து கால்வரை கோபாக்கினி பொங்கியெழுகிறது. இருந்தாபோல் அல்லாஹ்வின் விதிகற்பனை அந்த மனிதனுடன் எதற்காக இவ்வாறு ஏற்படுகிறது? என்னும் எண்ணமும் உண்டாகி விடுகிறது எனக்கூறினர். அதற்கு நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், விதிகற்பனையின் மீது தோஷங் கூறுவது புத்திசாலித்தனமான காரியமாக மாட்டாது; உலகத்திலுள்ள மனிதர் யாவரும் ஒரே நிலைமையிலிருப்பார்களாயின் உலகின் ஒழுங்கு முறை சீர்குலைந்ததாகிவிடும்; ஆதலால்தான் அல்லாஹ்தஆலா சிலரை சீமான்களாகவும் சிலரை நடு அந்தஸ்திலும், சிலரை ஏழையாகவும் வைத்து சிலருக்கு ஐசு

வரியங்களைக் கொடுத்திருக்கிறான் என்றால் சிலரை மனோநிம்மதியோடு வாழும்படி செய்திருக்கிறான். இன்னும் சிலருக்கு புஜபலபராக்கிரமத்தைக் கொடுத்திருக்கிறானென்றால் சிலருக்கு கலப்பற்ற நிர்ணயம் பக்தி அன்பு இவைகளை அளித்திருக்கிறான். ஆகவே, இவைகளின் இரகசியத்தை மானிடன் அளந்து பார்ப்பது கஷ்டமான காரியமாகுமென அறிவித்து விட்டு, "எதுபோழுது உங்களிலோருவன் தன்னை விட ஐசுவரியத்தில் மேலாக இருக்கும் ஒருவனை நோட்ட மிடுவோனாகில் அது பொழுது தன்னைவிட ஐசுவரியத்தில்கம்மியாக இருப்பவனை அவன் நோட்மிட வேண்டியது அவசியமாகும்" என அறிவித்ததாக ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஒரு நாளன்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் முன்னிலையில், மனிதர்களில் தகுதியுள்ளவர்களாக் இருந்து யாசகம் புரிபவரைப்பற்றியும், ஜனங்களை வஞ்சித்து ஏமாற்றமாக யாசகம் கேழ்ப்போரைப் பற்றியுமுள்ள தூஷணைகள் நடைபெற்றது. அதுபொழுது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், "எவன் ஏமாற்றமாக மானிடர்களிடம் ஒருவஸ்துவைக் கேட்கிறானோ அவன் நிச்சயமாக நெருப்பைத் தேடிக் கோண்டிருக்கிறான். ஆதலின் அவன் அந்த நெருப்பின் மிகுதத்தையாகிலும் கம்மியையாகிலும் தேடிக் கோள்ளட்டும்" என அறிவித்ததாக ஹஸ்ரத் ஸஅதுப்னு ரபீஉ (ரலி.) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் சாலிஹ் ஜஸாயிரீ (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால், நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது இத்திருவாக்கியமானது இரவு பகலாய் ஜனங்களை வஞ்சித்து சம்பாத்தியம் செய்து காசு பணங்களைச் சேகரித்துக் கொள்பவர்களுக்கும், மார்க்கத்தின் திரைமறைவில் உலக காரியாதிகளைப் பூர்த்திச் செய்துகொள்ள விரும்புவர்களுக்கும் தக்க உணர்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறது எனக் கூறியிருக்கிறார்கள்.

ஒரு நாளன்று ஒரு மனிதன் ஹஸ்ரத் செய்யிதுனா உமர் பாரூக் (ரலி.) அவர்களது வாசற்படியண்டை வந்து சுவால் செய்தார். உடனே ஹஸ்ரத் அவர்கள் அம்மனிதனுக்கு வயிறு நிரம்ப சாப்பாடும், ஐந்து திர்ஹம் காசும் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். சுமார் 1 மணிக்குப்பின் அந்த மனிதன் வேறு ஒருவருடைய தலைவாசலுக்குச் சென்று தான் பட்டினியுடனிருப்பதாக சப்தமிட்டுக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் அவர்கள் அவனைத் தெரிந்து கொண்டு பெரும் கூட்டத்தில் அவனை விசாரித்து தாழ்மைப் படுத்தினார்களென ஹஸ்ரத் அவர்களின் சரித்திரத்தில் வரையப்பட்டிருக்கிறது.

ஒரு நாளன்று நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் நற்கருமங்கள் புரிவதின் மேன்மைகளை எடுத்துக்கூறி வருவதற்கிடையே "நற்கருமங்கள் புரிந்து கோண்டுவரும் ஒருவன் திடுகூறாய் வியாதிப் பட்டு விடுவோனாகில், அவன் சுவாத்தியமாக இருந்து நல்ல கருமங்களை செய்வதற்காக கோடுக்கும் கூலியை அவன் வியாதிப்பட்டிருக்கும் காலத்திலும் அல்லாஹுதஆலா கோடுக்கிறான்" என நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக ஹஸ்ரத் ஸப்வான் பின் ஸுஹைல் அவர்களால் ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அல்லாமா சாலிஹ் ஜஸாயிரி (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால் உண்மையைத் தேடுபவன் தன் மனோ விருப்பம் அபிலாஷை முதலியவைகளை விட்டு அல்லாஹ்தஆலாவின் விருப்பத்தைத் தேடுவதற்காக தனது முழுபலத்தையும் அர்ப்பணஞ் செய்து விடுவானாகில் அல்லாஹ்த ஆலா அவனை தனது சொந்த அடியார்களில் சேர்த்து தனது கிருபையின் வாசற்படியைத் திறந்துவிட்டு விடுகிறான். இவ்வாறான நல்லடியார்கள் விஷயமாய், அவர்கள் வியாதிப்பட்டு விடுவார்களாயினும் அவர்களின் வியாதி காலத்திலுங்கூட அல்லாஹ்தஆலா அவர்களுக்கு நற்கூலி அளிக்கிறான் எனத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது இந்த அறிவிப்பானது, சதாவும் அல்லாஹ்த ஆலாவை மறந்து மானிடன் மீது எவ்வாறான கடமைகள் ஏற்பட்டிருக்கிறதென்பதை கவனியாது அலட்சியமாக நடந்து கொள்பவர்களுக்கு தக்க உணர்ச்சி உண்டாக்கி வைப்பதாக விருக்கிறது. ஆகவே, அல்லாஹ்தஆலா நம்மனைவருக்கும் சாலிஹான நற்கருமங்கள் புரிவதற்கான நல்லுதவி கட்டளை புரிந்து மிருகத்தனமான வாழ்க்கையின் கஷ்டத்தை விட்டுக் காப்பாற்றி வைப்பானாக.

இஸ்லாமியப் பிரசாரம்

இக்காலத்தில் மதப்பிரசாரம் வெகுமும்முரமாக நடந்துவருகின்றது. கிறிஸ்துவர், புத்தர், ஜைனர், சீக்கியர், ஆரியர், முஸ்லிம் ஆகிய பற்பல சமூகத்தாரும் தத்தம் மதத்தைப் பிரசாரம் செய்வதில் முனைந்து நிற்கின்றனர். மதத்தின்மீது நம்பிக்கையில்லாத நாஸ்தீகர்கள், நிரீஸ்வரவாதிகளும்கூட தங்கள் திட்டத்தை மிகப் பலமாகப் பிரசாரம் செய்கின்றனர். எனவே, பிரசார உலகம்தான் தற்போது மிகச் சுறுசுறுப்பாக இருந்து வருகிறது எனக்கூறலாம். இந்தப் பிரசார வேலைக்குச் செலவிடப்படும் தொகையைக் கோடிக்கணக்கில் எழுத வேண்டுமேயன்றி லக்ஷக்கணக்கில் எழுதும் காலம் மலையேறி விட்டது. இந்தப் பிரசார வேலையின் நோக்கம் யாது? இதன் பலன் என்ன என்பதைக் கவனிப்போமாயின் இவைகளுக்குப் பொதுவான ஒரு லக்ஷியம் இருப்பதாகத் தெரியவில்லை. நாடு பிடிக்க ஆசை கொண்டவரும் மதப்பிரசாரத்தை எடுத்துக் கொண்டனர். பணந்திரட்ட எண்ணங்கொண்டவரும் மதப்பிரசாரத்தை எடுத்துக்கொண்டனர். கீர்த்தி, பெருமை ஆகியவைகளைச் சம்பாதிக்க விரும்புபவரும் மதப் பிரசாரத்தை எடுத்துக் கொண்டனர். தங்களது பகைவரை அழிக்க விரும்புபவருக்கும் இந்த மதப்பிரசாரம்தான் பெரும் கருவியாகஇருந்து வருகிறது. அம்மம்ம! மதப் பிரசாரத்தின் அந்தரங்கக் கருத்து வெவ்வேறு விதமாக இருந்து வருகிறது. எதுஎப்படியிருந்தாலும் இருக்கட்டும். ஆனால், மார்க்கச் சட்டப்படி மதப்பிரசாரம் செய்யக் கடமைப்பட்டவர்கள் முஸ்லிம்கள் மாத்திரமேயாவர். பிறஜாதியாரிடம் மதப்பிரசாரம் செய்யவேண்டுமென கிறிஸ்துவ மதத்தில் கூறப்பட்டில்லையாயினும் தங்களது பல்வேறு நோக்கங்களை அடைவதற்காக அவர்கள் தங்களில் மதப்பிரசாரத்தையும் முக்கிய அம்சமாக சேர்த்துக் கொண்டார்கள். எனவே, இற்றைக்கு அந்த மதமும் பிரசாரமதமாக மற்றவர்களால் கருதப்படுகிறது. எனவே, பல்வேறு நோக்கங்களின் பேரில் பலரும் இப்பிரசார வேலையைத் தூக்கிக் கொண்டதால் அவர்களனைவரும் இதில் பூரண வெற்றியடைந்தார்கள் என்று கூறமுடியவில்லை. இன்றைக்கு ஒருவர் தமது வாக்கு சாதுர்யத்தால் பொது ஜனங்களை ஏமாற்றித் தமது மதத்தில் அவர்களைச் சேர்த்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். நாளைக்கு இந்தப் பிரசாரத்தின் உண்மை வெளிக்கு வராமல் மறைக்கப்பட்டுப் போவதில்லை. ஆதலின், இன்றைக்கு ஒரு மதத்தைத் தழுவுபவர்கள் நாளைக்கு அதனை விட்டு வெளியேறி விடவேண்டிய நிலைமையுமேற்பட்டுவிடுகிறது. இதற்கேற்ப ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள சுதேசிகளிடம் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் எத்தனையோ திரவியங்களைச் செலவுசெய்து மதப்பிரசாரம்செய்து பல்லாயிரம்பேர்களென்ன லக்ஷக்கணக்காண சுதேசிகளைக் கிறிஸ்துவர்களாக்கி விட்டனர். சுதேசிகளல்லாமல் மற்றைய சாமான்ய மனிதர் செல்ல முடியாத அடர்ந்த காடு வனங்களுக்கும், கொடிய மிருகங்கள் வாழும் ஆரண்யங்களுக்குள்ளுங் கூட கிறிஸ்துவ மிஷனரிகள் சென்று தங்கள் மதத்தைப்பிரசாரம்செய்கின்றனர். ஆயி

னும் அவர்களது பிரசாரவேலை அவர்கள் மதத்திலேயே இயற்கையாக அமையாமல், தாங்களாகவே அமைத்துக் கொண்டிருப்பதால் அதில் பல கஷ்டங்களும் இடையூறுகளும் ஏற்பட்டுவிடுகிறது. இதனால் அச்சுதேசிகளில் அநேகர் அம்மதத்தை விட்டு மாறி பிறமதம் தழுவவேண்டிய தேற்பட்டுவிடுகிறது. ஆனால், இஸ்லாம் மதம் இயற்கையிலேயே பிரசாரமதமாக ஏற்பட்டிருப்பதால் இதற்காகத் தனிப்பட்ட பிரசாரசபையோ அல்லது அரசாங்க ஆதரவோ இல்லாமல் தானாகவே பெருகிவருகிறது. இஸ்லாம் மதத்தைத் தழுவிய ஒவ்வொரு முஸ்லிமும் அம்மதத்தின் பிரசாரகரனாகிவிடுகின்றான். மதப்பிரசாரம் செய்வதற்கு இஸ்லாம் ஒரு வர்க்கத்தாரை மட்டிலும் குறிப்பாக ஏற்படுத்தவுமில்லை, அவர்களுக்கு ஒரு வரையறையை ஏற்படுத்தவுமில்லை. ஆதலின், இஸ்லாத்தின் பிரசாரவேலை எங்கும் வெற்றியுடனும் ஜெயத்துடனும் முன்னேறி வருவதுடன் வெகுதுரிதமாக உலகமெங்கும் பரவிவருகிறது. இதனால்தான் தென் ஆப்பிரிக்காவில் கோடிக்கணக்கான மூலதனத்துடனும், பல நிபுணர்களின் திட்டத்துடனும் நடைபெற்றுவரும் கிறிஸ்துவப் பிரசாரம் தோல்வியடைந்து, கிறிஸ்துவமதத்தைத் தழுவியுள்ள சுதேசிகளும்கூட அதனை விட்டுவிட்டு இஸ்லாத்தைத் தழுவி வருகின்றனர். இவ்வுண்மையை கிறிஸ்துவ மிஷனரிகளின் மகாநாடு ஒப்புக்கொண்டுமிருக்கிறது.

இஸ்லாத்தின் பிரசாரசபை என்று தனிச்சபை ஒன்றில்லாததால் இஸ்லாத்தின் புதல்வர்கள் ஒவ்வொருவரும் பிரசாரகராகவே இருந்து வருவதுடன், இஸ்லாத்தின் பிரசாரத்திற்குத் தம்மால் எதைச் செய்யமுடியுமோ அதனைச் செய்தும் வருகின்றனர். இம்முறையில் நமது இந்திய முஸ்லிம்களும் தங்கள் கடமையைச் செய்வதில் பின்வாங்கியவர்களாக இல்லை. இவர்கள் இந்தியாவில் மட்டுமில்லாமல் இந்தியாவிற்கு வெளியிலும் பரவி தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள். இந்தியாவுக்கு வெளியில் இஸ்லாமியப் பிரசாரம் செய்யும் இந்திய முஸ்லிம்களில் மீரட் மௌலானா ஹிஸ் ஹோலினஸ் அல்லாமா முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீக்கி அவர்கள் குறிப்பிட்ட ஒரு ஸ்தானத்தை வகித்து வருகிறார்கள். இவர் சமீபகாலத்திற்குமுன் தென் ஆப்பிரிக்கா முதலிய பல பிரதேசங்களுக்கும் சென்று இஸ்லாமியப் பிரசாரம் செய்து வெற்றியுடன் தாய் நாடு திரும்பியதும், ஜப்பான் தேசத்தில் இஸ்லாமியப் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் சில தினங்களுக்குமுன் தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்திற்குப்பின் நாகை துறைமுகத்தில் கப்பலேறியதும் நமது தென்னாட்டு முஸ்லிம்களுக்குத் தெரியாத விஷயமன்று. ஜப்பானில் மௌலானா அவர்களது இஸ்லாமியப் பிரசாரவேலை வெற்றிபெற இறைவன் அருள் புரிய வேண்டுமென நாம் எல்லோரும் துஆச்செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படி துஆச் செய்வதும்கூட இஸ்லாமியச் சட்டப்படி மார்க்கப் பிரசாரமேயாகின்றது. மௌலானா அவர்கள் தனிப்பட்ட முறையில் வெளிதேசம் சென்றாலும் ஆங்காங்கு ஸ்திரமான பிரசாரசபைகள் இருக்கவேண்டும் என்ற அவசியத்தை யுணர்ந்து தென் ஆபிரிக்கா, கிழக்காப்பிரிக்கா, இலங்கை, மலாயா முதலிய நாடுகளில் பல ஸ்தாபனங்களை நிறுவி வைத்திருக்கிறார்கள். எனவே, கிழக்காப்பிரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட பிரசார சபையின் வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்காகவும் அச்சபைக்கு உபயோகமுள்ள ஊழியராக இருப்பதற்காகவும் மௌலானா அவர்கள் தமது சிஷ்யர்களில் ஒருவராகிய மௌலானா ஆரிபுல்லா சாகிப் அவர்களை கிழக்காப்பிரிக்கா செல்லும்படி கட்டளையிட்டு,

அக்கட்டளைக்கேற்ப அவர்கள் கொழும்பு மார்க்கமாக கிழக்காப்பிரிக்கா செல்ல இவண் சென்னைக்கு விஜயம் செய்து நம்து ஹி. இ. சங்கத்தின் விருந்தினராக இருந்த விபரம் நேயர்களுக்குத் தெரிந்ததேயாகும். இதுமட்டிலுமில்லாமல் இந்தியாவிற்குள்ளும் இஸ்லாத்தின் ஜோதி பரவுவதற்காக மௌலானா அவர்களது சகாக்களும் சிஷ்யர்களும் வட இந்தியாவின் பல மாகாணங்களிலும் பிரசாரவேலைகளைச் செய்துவருகிறார்கள். நமது தமிழ்நாட்டிலும் இப்பிரசாரவேலையைச் செய்வதற்கெனப் பிரத்தியேகமாக பிரசாரகர்களை நியமித்திருப்பார்கள். ஆயினும், நமது சங்கம் செய்யும் அரியவேலைகளையும், இதுவரை ஆற்றி இருக்கும் மகத்தான சேவைகளையும் மௌலானா அவர்கள் நேரில் அறிந்திருப்பதால் தமிழ்நாட்டுப் பிரசாரத்திற்கெனப் பிரத்தியேகமாக பிரசாரகர்கள் தேவையில்லை என்று கூறிவிட்டுச்சென்றதுடன் தங்களது பிரசாரமுறை திட்டங்களையும் நமக் கறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது நமது நாட்டில் இப்பிரசாரவேலையை நாமாகவேசெய்து கொள்ள வேண்டிய திருக்கிறதென்பதை நண்பர்களுக்கறிவித்துக் கொள்கிறோம். இந் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டே நமது சங்கத்தார் தமிழ்நாட்டில் பிரசாரவேலையைத் தொடங்கி இருக்கிறார்கள். நமது அரிய மாசிகையான ஹி. இ. -ம் நமது சங்கத்தலைவர்களில் ஒருவரான மௌலானா மௌலவி அஹ்மது ஸயீது சாகிப் அவர்களை ஆசிரியராகக்கொண்ட ஸைபுல் இஸ்லாமும் இத்துறையில் முனைந்து வேலை செய்து வருகின்றது.

நம்முடைய இப்பிரசார வேலையில் நமக்கு றஹ்மான் வெற்றியளிப்பான் என்பதற்கான பல அறிகுறிகள் நமக்குத் தென்படுகின்றன. இந்தியாவிலுள்ள பெரும்பான்மைச் சங்கத்தினரான ஹிந்துக்களிலுள்ள தீண்டாதார்கள் ஹிந்துமதத்தில் தங்களுக்கு விமோசனம் இல்லை என்பதை யுணர்ந்து அந்த மதத்தைவிட்டு விலகிக்கொள்ள முடிவு செய்திருக்கின்றனர். இவ்வாறு மதத்தை விட்டு விலகி வரும் தீண்டாதார்களுக்கு, பிரபல மேதாவியான டாக்டர் அம்பெத்கார் தலைமை வகித்து அவர்களை ஹிந்து மதத்திலிருந்து விலகும்படிச் செய்து வருகிறார். நமது தமிழ் நாட்டிலும் சுயமரியாதை போன்ற இயக்கங்கள் தீண்டாதார்களை ஏற்கனவே தட்டி எழுப்பிவிட்டிருப்பதால் டாக்டர் அம்பெத்காரின் இவ்வழைப்பை தமிழ் நாட்டுத் தீண்டாதார்களும், மலையாளத்துத் தீண்டாதார்களும் ஆதரித்து ஹிந்து மதத்திலிருந்து விலகிவிட வேண்டுமென முடிவுசெய்து அதற்கான பிரசாரத்தை தங்களுக்குள் மும்பரமாக செய்துவருகிறார்கள். ஆகவே, நமது தமிழ் நாட்டில் நாம் அதிகப் பிரயாசை எடுத்து அவர்களுக்கு இஸ்லாத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறுவது அத்துணை சிரமமன்று. இஸ்லாத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள முன்வரும் சகோதரர்களுக்கு இஸ்லாத்தைப் போதிப்பதும், இஸ்லாத்தைத் தழுவுபவர்களை ஆதரித்து அவர்களை நாம் சமத்துவமாக நடத்துவது மட்டிலுமே இந்த நேரத்தில் மிகவும் அவசியமான வேலையாக இருந்து வருகிறது. இதற்கென நமது சங்கத்தார் இஸ்லாமியப் பிரசாரகர்களை நியமித்திருப்பதும், அவர்கள் பல இடங்களுக்கும் சென்று இஸ்லாமியப் பிரசாரங்கள் செய்துவருவதும் யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும். ஆனாலும், நமது நாட்டிலுள்ள முஸ்லிம் சகோதரர்களும் இதில் சிரத்தை எடுத்து தங்கள் கிராமங்களிலுள்ள தீண்டாதார்களுக்கு வேண்டிய விஷயங்களைக் கூறி அவர்களுக்கு இஸ்லாம்மதத்தைப்பற்றி அறிவிப்பதுடன், ஏனைய முஸ்லிம்களும் அவர்களை ஆதரித்து உதவிபுரியும்படி தூண்ட வேண்டும். இப்பிரசார வேலைக்குப்

பணம் தான் பிரதானம் என்பதில்லை. பணமுள்ளவர்கள் பணங்கொடுத் துதவலாம். செல்வாக்குள்ளவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கலாம். ஆலிம்கள் மார்க்க விஷயங்களை எடுத்துக்கூறலாம். இவ்வண்ணம் ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்கியன்றவரை உதவிபுரிதல் வேண்டும். எனவே எல்லோரும் இஸ்லாமியப் பிரசாரகர்களேயாவர். ஆதலின், இப்புனிதவேலையை ஆலிம்கள்தாம் செய்யவேண்டுமென்றோ அல்லது சங்கங்கள் தான்செய்யவேண்டு மென்றோ முஸ்லிம் பொது ஜனங்கள் இருந்துவிடாமல் எல்லோரும் செய்யக்கூடிய பொதுவான வேலையில் ஒருவருக் கொருவர் ஒத்துழைக்கும்படியாகவும், தனிப்பட்டவர்கள் செய்யக்கூடிய பிரத்தியேகமான கடமைகளைச் செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்கிறோம். இது சமயம் முஸ்லிம்கள் கண் விழித்துச் சிறிது பிரயாசை எடுத்துக் கொள்வார்களாயின் இதனால் புண்ணியமும் கண்ணியமும் இறைவனிடம் ஏற்படுகிற விஷயத்தைத்தவிர்த்து இந்திய ராஜீய உலகிலுங்கூட பெரிய மாறுதலை நாம் ஏற்படுத்திவிடலாம். இதுவரை முஸ்லிம்களை அலக்ஷியம் செய்துவரும் இந்து சகோதரர்கள் இனி அப்படி இருந்துவிடாமல் கௌரவமான சமாதானத்திற்குத் தாங்களாகவே முன் வந்துவிடுவர்.

முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாமியப் பிரசார வேலையை 13-நூற்றாண்டுகளாகச் செய்து பழகி இருக்கிறோம். சகோதரத்துவம் சமத்துவம் என்பது நமக்குப் புதிய விஷயமன்று. ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு உபகாரம் செய்வது நமக்குப் பழைய பாடம். நாம் நமது பழைய பாடத்தை மறுபடியும் ஞாபகப் படுத்திக்கொள்வதைத் தவிர நமக்கு இதனால் பிரமாதமான கஷ்ட நஷ்டமொன்றும் ஏற்பட்டு விடுவதில்லை. இஸ்லாத்தைத் தழுவியவர்களையும் இஸ்லாத்தில் இருக்கிற பூர்வீக முஸ்லிம்களையும் அன்பாகவும் பட்சமாகவும் நடத்தி அவர்களுக்குள் பூரண சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்த முயற்சிப்போமாக. சகோதரத்துவம் ஏற்பட்டுவிடுமாயின் அப்புறம் இப்பிரசாரவேலையில் எத்தனைசெலவேற்படுவதாயினும் நமது சமூகம் தாராளமாகக் கொடுத்துதவத் தயாராக இருக்கிறது. எத்தனையோ லக்ஷக்கணக்கான திரவியங்களை நமது சகோதரர்கள் தனிப்பட்ட முறையில் தான தர்மம் ஈவதில் செலவு செய்கிறார்கள். இந்நிலைமையில் நமது நாயகம் அவர்கள் தங்கள் உயிரினும் அருமையாக மதித்து தங்கள் வாணாள் முழுவதிலும் ஒய்வின்றி பார்த்துவந்த இஷாஅத்தே இஸ்லாம் சேவைக்கு நமது சோதிரர்கள் பண உதவி செய்யப் பின்வாங்குவார்களென்று நினைப்பதற்குக் காரணமே இல்லை. ஆகவே புதிய முஸ்லிம்களை நமது சகோதரர்கள் ஆதரித்து உதவிபுரியத் தயாராக இருக்கிறார்கள். ஆதலின், தீண்டப்படாத சகோதரர்கள் ஹிந்து மதத்தை விட்டு எந்தக்காரணத்திற்காக விலகினார்களோ அதே காரணத்தால் பின்னும் பின்னும் தங்களுக்குக் கஷ்டத்தையும் சஞ்சலத்தையும் விளைவிக்காத மதத்தை நன்கு ஆராய்ந்து பார்த்து தக்க மதத்தைத் தழுவிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். இப்பொழுது தற்காலிகமாக தங்களது சுயநலத்தை முன்னிட்டுச் சில மதவாதிகள் தீண்டாதாருக்குச் சமத்துவத்தை, சகோதரத்துவத்தை, செல்வத்தைக் கொடுப்பதாகக் கூறுவர். இப்படிப் பட்ட கூட்டத்தார் தங்களது சுய நலத்திற்காக இப்பொழுது நடிப்பதை யதார்த்தமானதென்று தீண்டாதார்கள் நம்பி மோசம் போக வேண்டாமென்று எச்சரிக்கை செய்கின்றோம். அவர்கள் தங்களது நோக்கம் பரிபூரணமாக நிறைவேற வேண்டுமாயின் அது இஸ்லாம் மதத்தைத் தழுவுவதால் மாத்திரம் நிறைவேறுமேயன்றி வேறு எதனாலும் நிறைவேறாதென்பதைத் தீண்டாதார்கள் உணருவார்களாக.

இஸ்லாமிய சமத்துவம்

"தீண்டாதார்கள் ஹிந்து மதத்தை கை விடக்கூடாது. அவர்களை நாம் எங்களின் திலகங்களாக ஆக்கிக்கொள்வோம்'' என்று பண்டிதர் மாளவியா வாய்வேதாந்தம் பேசுகின்றார். இதற்குமுன் இவருடைய மூதாதையர் இந்தத் திலகத்தைத் தீட்டிக்கொண்டிருந்தார்களா? அவர்கள் தீட்டிய இத்திலகங்களை இப்பொழுது மாளவியாஜீ தீட்டிக்கொள்ளப்போகிறாரா என்று வினவுகின்றனம். அவர் பிறர் மெய்ப்பிப்பதற்காக வேண்டி பிரசங்க மேடையில் எப்பொழுதேனும் ஒரு சமயம் இந்தத் தமாஷைக் காண்பித்துவிட்டாலும் அவர் தமது இல்லம் சென்று கங்கா ஜலத்தினால் ஸ்நானம் செய்து தம்மை சுத்தி செய்துகொள்ளமாட்டாரா? அவர் தமது வாணாள் முழுவதிலும் ஒருமுறையேனும் அசூயை அழுக்கு முதலியவைகளில்லாமல் சுத்தமாக இருக்கிற ஒரு சக்கிலியனுடன் ஒரு மண்டபத்திலமர்ந்து சமபந்தி போஜனம் அருந்தி இருக்கிறாரா? என்று வினவுகின்றோம்.

இவ்விதமான பெருமை இஸ்லாத்திற்குத்தானிருக்கிறது. சொல்லுவதுபோல் காரியத்தில் செய்து காண்பிக்கும் தன்மை இஸ்லாத்தில் மட்டுந்தானிருந்துவருகிறது. நம்முடைய இந்த தாவாவை மெய்ப்பித்துக் காண்பிப்பதற்கு இந்தியாவிற்குள்ளிலேயே ஆயிரக்கணக்கான பிரத்தியக்ஷ சாக்ஷியம் இருந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவிலும் நூற்றுக்கணக்கான வலிமார்கள் இருக்கின்றனர். இவர்களில் ஆரம்பத்தில் முஸ்லிம் அல்லாதாராக இருந்து பின்னர் இஸ்லாத்தைத் தழுவி இறைவனை வணங்கியபின் இறைவனின் கிருபையால் வலித்தனம் பெற்றவர்கள் அநேகர் இருக்கின்றனர். அவர்களுடைய பூத உடலம் அடக்கப்பட்ட இடம் இன்று கணக்கற்ற மதாபிமானிகளால் போற்றப்படத் தகுந்ததாக இருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த ஸாதாத்துமார்களும், பெரியார்களும், மகான்களும் அவ்வலிமார்களின் கையை முத்தமிட்டிருக்கிறார்கள். இப்பொழுதும் முத்தமிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வுண்மையை உணர விரும்புவோர் இஸ்லாத்தில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இதற்குமுன் சக்கிலியாகவும், சாம்பானாகவும், பறையனாகவும் இருந்து பல நூற்றாண்டுகளாக ஹிந்துக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டுக் கிடந்தவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட முஸ்லிம்கள் நம்மில் எண்ணத்தொலையாத அத்தனைபேரிருக்கின்றனர். இன்று அந்த நௌமுஸ்லிம்களுக்கும் நாற்பது தலைமுறைகளாக முஸ்லிமாக இருந்துவருபவர்களுக்குமிடையில் எள்ளத்தனை வித்தியாசம் காண்பிக்கப்படுவதாக ருஜூப்பிக்கக் கூடியவர் எவருமுளரோ?

இந் நிலைமையில் பண்டிதர் முஸ்லிம்கள்மீது குற்றங் கூறுவதால் ஹிந்துக்களில் மனமாற்றமுண்டாகி விடுமா? அல்லது அவர் தாம் சொல்வதையாகிலும் செய்து காண்பிக்க முன்வருவாரா என்று அறைகூவி அழைக்கிறோம். தீண்டாதார்களிடம் உறவின் முறைகொண்டாடுதல், அவர்களுக்காக கோடிக்கணக்கான திரவியங்களைத் திரட்டிவிடுவேன், அவர்களுடைய பாதத்தின் மண்ணை எடுத்து எனது நெற்றியில் திலகமிட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், என்று முகஸ்துதி பேசுதல் முதலியவைகளின் மூலமாக பண்டிதர் தற்காலிகமாக அவர்களை ஏமாற்றி வெற்றிபெற்றுவிடலாம். ஆனால், எதிர்காலத்திலும் அவர்களை ஏமாற்றும் விஷயத்தில் அவர் எங்ஙனம் வெற்றி பெற முடியும்? இவருடைய இந்த ஜகஜால வித்தைகளெல்லாம் மின்னொளியைப்போல் பிரகாசித்துக்கொண்டு உலகத்தின் முன்னிலையில் வந்து இவரது நிலைமையைப் பகிரங்கப்படுத்திவிடுமன்றோ?

பண்டிதர் மாளவியாவை அந்தரங்க நோக்குடன் கவனித்துப் பார்க்கும் பக்ஷத்தில், அவர் ஹிந்துக்களின் இருதயமாகவும், ஹிந்து சமூகத்தின் பேசும் பாவையாகவும் இருக்கிறார் என்பதைக் கண்டுகொள்ளலாம். ஹிந்துக்களை அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிற ஒருவர், பண்டிதரை உணர்ந்து கொள்வதோடு அவரது சரித்திரத்தை மட்டிலும் படித்தால் போதுமானது. இஃது ஹிந்து சமூகம் முழுவதையும் படித்தது போலாகிவிடும். ஹிந்து சமூ

கத்தை ஒருவர் இன்றுவரை உணர்ந்துகொள்ள முடியவில்லை என்றால் அவர் பண்டிதர் மாளவியாவையும் உணர்ந்து கொள்ளவில்லை.

இந்தப் பண்டிதர்தான் சிவில் சட்டமறுப்புச் செய்யக்கூடாதென்று பார்டோலியில் காந்திஜீயிடம் தமது செல்வாக்கை உபயோகித்தவர். காங்கிரஸின் சுதந்திர இயக்கம் வெற்றி தோல்வி என்ற தராசில் நிறுக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம் காந்திஜீ தமது ஆயுதத்தைக் கீழே வைத்துவிட்டு சுதந்திர இயக்கம் என்ற கப்பலை மூழ்கடித்துவிட்டார். கொஞ்சகாலத்திற்குப் பிறகு காந்திஜீ தமது தவறை ஒப்புக்கொண்டு "நான் உண்மையாகவே ஹிமாசலம் போன்ற அவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன்" என்று வாய்விட்டுக்கூறி இருக்கிறார். ஆனாலும் பண்டிதர் மாளவியா சுதந்திர இயக்கத்திற்கு இவ்வளவு பெரிய விரோதியாக இருந்தும் ஹிந்துக்களிடத்தில் அவர் பூஜிக்க தகுந்தவராகவும், தேசவிடுதலையின் துவஜத்தை நாட்டுபவராகவுமே இருந்து வருகிறார்.

இது மட்டுமா? இந்தியா சட்டசபையைக் கைப்பற்றுவதற்காக பண்டிதர் மாளவியா காங்கிரஸ் மகாசபையை பகிரங்கமாக எதிர்த்தார். அதில் அவர் வெற்றி பெறாமல் தோல்வியுற வேண்டிய தேற்பட்டாலும் அவர் ஹிந்துக்களிடத்தில் வழக்கம்போல் பூஜிக்கத் தகுந்தவராகவே இருந்து வருகிறார்.

இவ்விஷயம் முஸ்லிம்களாகிய நமக்கு அநேகம் பாடங்களைக் கற்பிக்கின்றது. ஹிந்துக்களில் பற்பலவிதமான வகுப்பினரிருக்கின்றனர். அவர்களுக்குப் பலவிதமான பாட்டைகளுமிருக்கின்றன. அவர்களில் சிலர் காங்கிரஸ் வாதியெனவும் தேசிய வாதியெனவும் சொல்லப் படுகின்றனர் என்றால், வேறு பலர் பகிரங்கமாக வகுப்புவாதிகளாக இருந்து வருகின்றனர். ஒரு கூட்டத்தார் வெளிக்கு அரசாங்கத்துடன் ஒத்துழைப்பவர்களாக இருந்தால் மற்றொரு கூட்டத்தார் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது அடிமைத்தனம் என்று கருதுகின்றனர். மாளவியா கூறுவது ஒன்றாக இருந்தால் காந்தி கூறுவது மற்றொன்றாக இருக்கிறது. இவ்விரு வருக்குமிடையில் எடுவானுக்கும் படுவானுக்குமி டையிலுள்ள வித்தியாசமிருந்து வருகிறது. இவ்விருவகுப்பினருக்கு மிடையில் ஏறக்குறைய வானத்திற்கும் பூமிக்கு மிடையிலுள்ள வித்தியாசமிருக்கிறது. ஆனால், இவ் வித்தியாசங்களனைத்தும் வெளிக்கு மட்டிலும் தான். திரைக்கப்பால் எல்லோரும் ஒன்றே. எல்லோருடையவும் நோக்கமும் ஒன்றே. எவ் விதத்திலேனும் "ஹிந்து ஆதிக்கம்" ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே பிரச்சினைதான் அவர்களின் முன்னிலையில் இருந்து வருகிறது.

முப்பத்து மூன்று கோடி தேவர்களும், 22 கோடி பூசாரிகளும் இருக்கிற அவ்வளவு வித்தியாசமுள்ள இவ்வகுப்பினரில் கடவுள் ஒருவனுளன் என்று ஒப்புக்சொள்கிற ஆரியனும் ஹிந்துதான். கடவுள் இல்லை என்று கூறுகிற ஜைனனும் ஹிந்துதான். தேவ சமாஜியும் ஹிந்துதான். ஆஸ்திகனும் ஹிந்துதான், நாஸ்திகனும் ஹிந்துதான். அத்வைதியும் ஹிந்துதான், துவைதியும் ஹிந்துதான். நான்கு வேதங்களேயும் கடவுள் வாக்கியம் என்று ஒப்புக்கொள்பவனும் ஹிந்துதான், அவைகளை வெறும் கட்டுக் கதை என்று மதிப்பவனும் ஹிந்துதான். 18 புராணங்களையும் ஒப்புக்கொள்பவனும் ஹிந்துதான், அவைகளைப் பொய் மூட்டை என்று கூறுபவனும் ஹிந்துதான். இவ்வளவு வித்தியாசங்களுள்ள இச் சமூகத்தாரில் "ஆரிய ராஜியம்" ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக இத்துணை ஒற்றுமை? ஆனால் முஸ்லிம்களிலோ எத்தனை பிளவு? இவர்களது கடவுளும் ஒன்று, றஸூலும் ஒன்று, குர்ஆனும் ஒன்று, கிப்லாவும் ஒன்று. புத்தியுள்ளவர்களே! நன்கு கவனித்துப் பாருங்கள்.

முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கு மிடையில் இவ்வளவு வித்தியாசமிருக்க வேண்டிய நியாயமென்ன? ஹிந்துக்கள் பல நூற்றாண்டுகளாக வீழ்ச்சியடைந்தபின் மறுபடியும் துளிர்க்க ஆரம்பித்திருக்கின்றனர். ஆனால், முஸ்லிம்களோ பல நூற்றாண்டுகளாக தலை தூக்கி இருந்து வீழ்ச்சியடைந்திருக்கின்றனர். ஆனால், இந்தப் படுக்கை இன்னும் எத்தனை காலத்திற்கு இருக்கமுடியும்? நாம் சில சமயங்களில் நமது பழைய பாடத்தை நினைத்துக் கொள்கிறோம். மறந்துவிட்ட பாடத்தைத் திரும்பவும் ஞாபகப்படுத்திக்கொள்கிறோம்.

சமூக வித்தியாசங்களை அழிப்பதும், ஏக சமூகத்தை ஸ்தாபிப்பதும் இப்புவியில் இஸ்லாம் என்ற ஒரே திட்டம்தான். இத்திட்டம் கருப்பர், வெள்ளையர் என்ற வித்தியாசத்தை ஒழித்து ஏழை பணக்காரன், உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்ற பாகுபாட்டை இல்லாமலாக்கி, எஜமானன் அடிமை என்ற பேதத்தைத் தொலைத்து எல்லோரையும் ஒரே வரிசையில்

கொண்டுவந்து நிறுத்திவிட்டது. இந்த ஐக்கியத்தை - ஏகத்துவத்தை - சமூக ஒற்றுமையை இறைவன் முஸ்லிம்களுக்கு ஒரு அருட்பெருங்கொடையாக அளித்துள்ளான். இந்த ஒற்றுமைத் திட்டமானது ஹஜ்றத் உமர்பாரூக் (றலி.) அவர்களது கம்பீரத்தின் உருவமாகத் தோன்றிற்று. அதனை ஹஜ்றத் உமர் பாரூக் (றலி.) அவர்கள் உலகினுக்கு மெய்ப்பித்தும் காட்டினார்கள். அதாவது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது மின்பரின்மீது ஹஜ்றத் உமர்பாரூக் (றலி.) அவர்கள் நின்றுகொண்டு பாரசீக அரசாங்கமும், கிஸ்றுவின் சக்கிராதிபத்தியமும் ஒரு முஸ்லிமுடைய ரத்தப்பழிக்குக் கிரயமாகவோ அல்லது ஒரு முஸ்லிமுடைய உயிருக்கு பதிலாகவோ இல்லை என்று கம்பீரமாகக் கூறி அதனை கிரியாம்சையில் செய்துங் காட்டினார்கள். ஆவோ! நாம் ஒரு காலத்தில் எவ்வாறு மதிக்கப்பட்டிருந்தோம். இன்று நாம் எவ்வாறு மதிக்கப்படுகின்றோம்? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வளவு உயர்வான அந்தஸ்திலிருந்த நாம் இவ்வளவு தாழ்மையான நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் நமக்குள்ளிருந்த சமூக ஒற்றுமையைக் குறைத்துக்கொண்டதேயாகும். முன்னோர்கள் சென்று கொண்டிருந்த சமூக ஒற்றுமை என்ற ராஜபாட்டை எது? அவர்கள் வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கண்ணியமாக இருந்து கொண்டிருந்த தற்குக் காரணம் யாது? அல்லாஹ்வின்பாலும் அவனது றஸூல் நாயகத்தின்பாலும் உண்மையோடுங் கூடிய "இஷ்கு" என்னும் காதல் தான் அவர்களை உச்சஸ்தானத்தில் கொண்டு வந்தது. அந்த 'இஷ்கு' என்னும் காதலானது நெருப்புக்குன்னமேயாகும். அதில் பிரவேசிப்பவர்கள் உள்ளத்தில் உறைந்து கிடைக்கும் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்ற மூவாசைகளையும் அது தொலைத்து, மனிதனிலுள்ள சகல ஆசூயைகளையும் அழித்துவிடுகிறது. மனிதனுடைய உள்ளமானது இஸ்லாம் என்ற சூரியன் உதயமாகுவதற்கான கீழ்த்திசையாகி விடுகிறது. மனிதனிலுள்ள சகல பலஹீனங்களும் தெய்வீக சக்தியால்மாறு தலடைந்து விடுகின்றன. அப்படிப்பட்டவர்கள் கூறும் "அல்லாஹு அக்பர்" என்ற ஒவ்வொரு முழக்கமும் கோட்டைகளின் சுவர்களைத் தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்தன. 'லைலா' என்பவள் வசித்துக் கொண்டிருந்த தெருவிலுள்ள நாயும்கூட அவள் மீது காதல் கொண்டிருந்த மஜ்னூவுக்குப் பிரியமுள்ளதாக இருந்தது. இதுபோல எவருக்குத் தனது எஜமான்மீது பிரியமிருக்குமோ அவருக்கு அவரது உம்மத்திலுள்ள ஒவ்வொரு நபரின் மீதும் பிரியமிருக்கவேண்டும்

இந்திய முஸ்லிம்களின் கேவல நிலைமைக்குக் காரணமென்ன?

இந்திய முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் கேவல நிலைமைக்கும் தாழ்ந்த அந்தஸ்திற்கும் முக்கிய காரணம் அவர்கள் சர்க்கார் உத்தியோகங்களைத் தங்களது ஜீவியத்தின் முக்கிய லக்ஷியமாகக் கொண்டிருப்பதுதான். தற்காலமுள்ள போதனாமுறைத் திட்டத்திலுள்ள கெடுதல்களைப்பற்றி விவரித்துக்கூற வேண்டியதில்லை. ஆபீஸ்களிலுள்ள கிளர்க்கு உத்தியோகங்களுக்கு ஆட்களை உற்பத்தி செய்வதுதான் நமது காலேஜ்களின் அந்தஸ்தாக இருக்கின்றது. உத்தியோகப் பதவிகள் சொற்பமேயாகும். ஆகையால், படித்தவர்களுக்கெல்லாம் உத்தியோகம் கொடுக்கமுடியாது. எனவே, படித்த நமது வாலிபர்களிற் பெரும்பாலர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அகப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்குக் கைத்தொழில் முதலிய வித்தைகளில் பயிற்சி கொடுக்கப்படாததால் அவர்கள் கடைவைத்து வியாபாரம் செய்வதைத் தங்களது அந்தஸ்திற்கு விரோதமாகக் கருதுகின்றனர். ஆதலின், அவர்களது கஷ்டம் இன்னும் அதிகமாகப் பெருகிவிடுகிறது; தங்களது வாணாள் முழுவதிலும் அவர்கள் பட்டினியும் பசியுமாக இருந்து திண்டாடுகின்றனர்.

அரசாங்க உத்தியோகங்களிலுள்ள ஆசையானது முஸ்லிம்களை ராஜிய விஷயங்களில்

மிகவும் பிற்போக்காக்கிவிட்டது. அவர்களில் சுயநல உணர்ச்சி அதிகமாகிவிட்டது. சமூகம் என்ற என்ஜினில் கெட்டுப்போயுள்ள சக்கரத்தைச் சீர்திருத்தி அதனை ஒன்று சேர்க்க வேண்டும் என்ற கவலை அவர்களுக்குக் கொஞ்சமும் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்தியாவில் வகுப்புக்கலகங்கள் மதத்தின் பெயரால் செய்யப்பட்டாலும் நன்கு ஆழ்ந்து கவனிக்குமிடத்து அவைகளுக்குள், வயிற்றுப் பிழைப்புக்கான பிரசினை மறைந்திருப்பது தெரிய வரும். அரசாங்க உத்தியோகத்தை அடைய வேண்டும் என்ற ஆசையை விட்டுவிட்டு கைத்தொழில் வர்த்தகம் ஆகியவைகளின் மூலமாக பசிப்பிணியை விட்டு விடுதலையடையாதவரையில் இந்தியாவில் வகுப்புக்கலகங்களுக்கு ஓய்விருக்கவேமாட்டாது; முஸ்லிம்களுக்கு தேசிய ராஜீய விஷயங்களில் செல்வாக்கும் மதிப்பும் இருக்கவுமாட்டாது.

சென்ற காலங்களில் முஸ்லிம்கள் அதிக உன்னத ஸ்தானத்திலிருந்தனர். அதற்குக் காரணம் அவர்கள் சர்க்கார் உத்தியோகங்களில் அமர்ந்திருந்தனர் என்பதல்ல; அவர்களது நம்பிக்கை அத்துறையில் ஈடுபட்டிருக்கவுமில்லை. முஸ்லிம்கள் ராஜியாதிபாரம் செய்து கொண்டிருந்தகாலத்திலும் கூட உத்தியோகப் பதவிகளைப் பெரும்பாலும் முஸ்லிமல்லாதார்களே ஏற்றுக்கொண்டிருந்தனர். முஸ்லிம்களுக்கு அக்காலத்தில் அவர்கள் புஜபலத்தின் பேரிலும் வியாபாரத்தின் பேரிலும் பெருமை ஏற்பட்டிருந்தது. அறபியர்களின் மரக்கலங்கள் உலகம் முழுவதிலும் சுற்றிவந்து கொண்டிருந்தன. முஸ்லிம்களிடம் தரித்திரம் என்பதிருக்கவில்லை. அவர்கள் நிம்மதியாகத் தங்கள் சமூக முன்னேற்றத்திற்கான அநேகம் புதிய ரஸ்தாக்களை உண்டாக்கிக் கொண்டிருந்தனர். மனிதனுக்குத் தரித்திர முண்டாகிவிடுமாயின் அவனது செயற்திறமையும்கூடச் சேர்ந்து அழிந்துவிடும். அவனுடைய உரோஷமும், சுயநம்பிக்கையும் நீங்கிவிடுகின்றன. இவ்விஷயத்தை எவரும் மறுக்கமுடியாது. "தரித்திரம் மனிதனைக் குப்ரின் பக்கல் சேர்த்துவிடுகிறது" என்பது நாயகவாக்கியம். சில ரூபாய்களுக்காகத் தனது ஈமானை விற்றுவிடுவதற்கு மனிதன் தயாராகியும் விடுகின்றான்.

இந்திய முஸ்லிம்கள் இழந்துவிட்ட தங்களது கௌரவத்தை மறுபடியும் அடைய விரும்புவார்களாயின் அவர்கள் சுயநம்பிக்கையும் தங்களது கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தையும் தங்கள் இருதயங்களில் மறுபடியும் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இது நிறைவேறவேண்டுமாயின் முஸ்லிம்கள் தங்களுக்கேற்பட்டிருக்கும் தரித்திர நிலைமையைப் போக்கிப் பசிப்பிணியைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். சர்க்கார் உத்தியோகப் பதவிகளை அடையவேண்டுமென்ற எண்ணத்தைத் தங்களது மனத்தை விட்டகற்றி விடவேண்டும்.

முற்காலத்தில் முஸ்லிம்கள் தங்களது ஜீவனோபாயத்திற்காகச் சர்க்கார் உத்தியோகம் பெறுவதை முக்கிய லக்ஷியமாகக் கொள்ளவில்லை. ஆதலின், அவர்களது மனோதைரியம் மிகவும் உயர்ந்திருந்தது. அவர்கள் வீரர்களாகவும் உறுதியுள்ளவர்களாகவும், சத்தியத்தை நிலைநிறுத்துபவர்களாகவும், ராஜாதிராஜர் முன்னிலையிலும்கூடத் தங்களது தலையைச் சாய்க்காதவர்களாகவும் இருந்தனர். இவர்களுள்ளத்தில் சர்க்கார் உத்தியோகத்தின் மதிப்பு எம்மாத்திர மிருந்ததென்பதை அடியிற்கண்ட சம்பவத்திலிருந்து யூகித்துத் தெரிந்து கொள்ளலாம்:—

ஹஜ்ரத் அபூஅப்துல்லா ஸுப்யான் தௌரீ (றஹ்.) அவர்கள் ஹிஜ்ரீ முதலாவது நூற்றாண்டிலுள்ள பிரபல அறிஞரும் ஞானியும் தெய்வபக்தி நிறைந்த பெரியாருமாவார். அக்காலத்திலுள்ள பிரபல அறிஞர்களெல்லோரும் இவரது சிஷ்யர்களாக இருந்தவர்கள் என்று கூறுவது மிகையாகாது. ஒருமுறை அப்பாஸிய்யா வம்சத்து கலீபாவான மஹ்தீ என்பவர் அவரைத் தமது தர்பாருக்கு அழைத்தார். அதற்குச் சமீப காலத்திற்கு முன்னர்தான் அப்பாஸிய்யா வம்சத்து அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. புதிய அரசாங்கத்தின் மதிப்பையும் கௌரவத்தையும் வல்லமையையும் நாட்டில் ஸ்தாபிக்கவேண்டியதிருந்ததால் அப்பாஸிய்யா வம்சத்து கலீபாக்கள் அற்பசொற்ப காரியங்களுக்கும்கூடக் கடுந் தண்டனைகள் விதித்துக்கொண்டிருந்தனர். கலீபா மஹ்தீக்கு முன்னிருந்த கலீபா மிகக் கொடுமையாக நடந்து கொண்டிருந்ததால் அவர்மீது ஹஜ்ரத் சுப்யான் தௌரீ (ரஹ்.) அவர்கள் மிகவும் அதிருப்தியுள்ளவராக இருந்தார். அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த கலீபா மஹ்தீயையும்கூட நல்லவர் என்று கருதவில்லை. தவிரவும், தமக்குள்ள கல்வி அறிவின் காரணமாக அவர் அவ்வரசாங்கத்தில்

உத்தியோகப் பதவியை ஒப்புக்கொள்ளுவதாயின் அவருக்கு அது மிகவும் சுலபமாக இருந்தது. என்றாலும், தமக்குள்ள சுயேச்சையைக் கெடுத்துக் கொள்ளலாகாது என்ற எண்ணத்தால் உத்தியோகப் பதவியைத் துரும்பாக மதித்தார்.

எனவே, கலீபாவின் கட்டளைப்படி ஹஜ்றத் சுப்யான் தௌரீ அவரது தர்பாருக்குச் சென்றார். கலீபாவின் முதுகுப் புறத்தில் பிரபல தளகர்த்தரான ரபீஉ என்பவர் உருவிய வாளும் கையுமாக நின்று கொண்டிருந்தார். எவரேனும் கலீபாவிடம் மயிரிழை மரியாதைக் குறைவாக நடந்து கொண்டால் அந்த இடத்திலேயே அவரது தலையை வாங்கி விடுவதற்காகவே அந்தத் தளகர்த்தர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆகவே, ஹஜ்றத் சுப்யானு தௌரீ அரச தர்பார் ஒழுங்கை அலக்ஷியம் செய்து ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைச் சந்திக்கும்போது ஸலாம் சொல்லிக்கொள்வதுபோல உரத்த சப்தத்துடன் கலீபாவுக்கு சலாம் சொன்னார். இவரது இந்நடத்தையானது தளகர்த்தரான ரபீஉக்குக் கோபமூட்டிற்று. கண்களிலிருந்து கனற்பொறி தெரித்தன. ஆனால், சுப்யான் தௌரீ (றஹ்.) அவர்கள் அதனைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யவில்லை. பிறகு கலீபாவுக்கும் சுப்யானு தௌரீ (றஹ்.) அவர்களுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடைபெற்றது:—

கலீபா:—தாங்கள் என்னையோ எனது தந்தையையோ நல்லவர்கள் என்று கருதவில்லை என்பதாக நான் கேள்விப்படுகின்றேன். இது உண்மையா?

சுப்யான் தௌரீ (றஹ்.):—முற்றிலும் உண்மையே. நான் ஒரு முஸ்லிம் என்ற முறையில் அக்கிரமஸ்தர்களை நல்லவர்கள் என்று சொல்ல முடியாது.

கலீபா:—தாங்கள் எனது தர்பாரில் அல்லவா இருந்து கொண்டிருக்கிறீர்கள்? தங்களை நான் தண்டிக்கச் சக்தியுள்ளவனு அல்லவா?

சுப்யான் தௌரீ (றஹ்.):—ஆம், சந்தேகமென்ன? தாங்கள் எனது தலையை வாங்கி விடமுடியும்.

கலீபா:—ஆனல், தங்களுக்குக் கொஞ்சமும் பயமில்லையே? இது என்?

சுப்யான் தௌரீ (றஹ்.):—இதற்குக் காரணமென்னவெனில், உம்மைப் பார்க்கினும் பெரிய அரசன் ஒருவன் உளன். அவன்தான் யாவருக்கும் பெரிய அதிபதி. சத்தியம் அசத்தியம் ஆகியவைகளைப்பற்றிச் சரியான தீர்ப்பளிக்கவல்லவன். தற்போது என் மீது உமக்கு எவ்வளவு அதிகாரமிருக்கிறதோ அதனைப்பார்க்கினும் அதிகமாகவே உம்மீது அவனுக்கு அதிகார மிருந்து கொண்டிருக்கிறது என்பது எனது நம்பிக்கை. இதுதான் யான் உம்மை யஞ்சாததற்குக் காரணம்.

உண்மை முஸ்லிம் ஒருவர் உள்ளத்திலிருந்து உண்மையோடுங் கூடிய இவ்வாக்கியங்கள் வெளிவந்ததைக் கேட்ட கலீபா மஹ்தீயின் உளம் நடுநடுங்கிற்று. கண்களிலிருந்து ஜலம் கொட்டிற்று. அரசரின் நிலைமையைப் பார்த்த தளகர்த்தர் ரபீஉ தமது இடைவாளை உறையிலிருந்து உருவிக்கொண்டு "இவர் தங்களது தர்பாரில் மரியாதைக் குறைவாக நடந்துகொள்கிறார், உத்தரவு கொடுத்தால் உடனே தலையை வாங்கி விடுகிறேன்" என்று கூறினர்.

கலீபா மஹ்தீ அந்தத் தளகர்த்தரை அதட்டி வாய் மூடச்செய்தார். ஹஜ்றத் சுப்யான் தௌரீ (றஹ்.) அவர்களது மன தைரியத்தையும், ஈமானையும் போற்றியதுடன் நான் தங்களை கூபாவின் காஜீ (நீதிபதி)யாக நியமிக்கிறேன் என்று கூறினர்.

ஹஜ்றத் சுப்யான் தௌரீ (றஹ்.) அவர்கள் அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கவில்லை. என்றாலும், கலீபா அதனை அங்கீகரியாமல் தனது லிகிதரை அழைத்து கட்டளை ஓலை எழுதுவித்து சுப்யான் தௌரீ (றஹ்.) அவர்களிடம் கொடுத்தார். இவர் தர்பாரை விட்டு வந்ததும் நேராக டைக்ரீஸ் நதிக்கரைக்குச் சென்று அரசர் கட்டளை எழுதப்பட்ட ஓலையைக் கிழித்தெரிந்து விட்டுத் தலை மறைவாக இருந்து கொண்டார். கலீபாவின் ஆட்கள் அவரை எவ்வளவோ தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு, அவருக்குப் பதிலாக வேறொருவர் கூபாவின் காஜியாக நியமிக்கப்பட்டார்.

மௌலானு ஸித்தீகியின் அரிய பிரசங்கங்கள்

மீரட், ஹிஸ் ஹோலினேஸ் மௌலானு மௌலவி அல்லாமா அல்ஹாஜ் ஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி காதிரி அவர்கள் இஸ்லாமிய பிரசார சேவையைச் சிரமேற்கொண்டு ஜப்பான் செல்லும் நோக்கத்தோடு இவண் சென்னைக்கு விஜயஞ் செய்து நம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் விருந்தினராக விருந்து சென்னையிலும் நம் தமிழ்ஜில்லாக்களின் சிற்சில இடங்களிலும் பினங், கோலாலம்பூர், கிள்ளான், சிங்கை முதலிய இடங்களிலும் பல அரிய சொற்பொழிவாற்றியது நமது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அப்பிரசங்கங்கள் நம் ஸை. இ. மூலம் அப்போதைக்கப்போது வெளிவந்திருந்தபோதிலும் அப்பிரசங்கங்கள் ஒருங்கே நம் மாசிகையில் பிரசுரிக்கப் பட்டுப் போமாயின் மிக சௌகரியமாக இருக்குமென அன்பர்களிலனேகர், வேண்டிக் கொண்டதற்கிணங்க, அவைகளை ஒன்றுதிரட்டி இவண் வெளியிட முன்வந்துளோம். மேன்மை தங்கிய மௌலானு அவர்களின் சுற்றுப் பிரயாணத்தில் நாம் ஈடுபட்டிருந்ததால் நமது மாசிகை குறிப்பிடப் பட்ட திகதிகளில் வெளியிடமுடியாதுபோனதற்கு வருந்துவதுடன் இன்ஷாஅல்லா அடுத்தமாசிகைகள் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் வெளிவந்துவிடுமென நண்பர்கட்கு தெரிவித்துக்கொள்கிறேம்.

கனம் மௌலானு அவர்கள், சைகோன் பிரபலவர்த்தகரும் லாண்டுலார்டும் ஆலிம்களின் அன்பருமான ஆலிஜனுப் அல்ஹாஜ் J. M. முஹம்மது இஸ்மாயீல் ருவுத்தர் அவர்கள் அழைப்புக்கிணங்க சைகோன் சென்று அவ்விடமிருந்து ஜப்பான் சென்றுகொண்டிருக்கிறுர்களென்னும் நற்செய்தியை நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேம்.

சென்னை ஆண்டர்சன் தெரு

மௌலானு அவர்கள் தங்கள் இந்தப் பிரசங்கத்தில், முஸ்லிம்களின் அஜாக்கிரதையைப்பற்றிக் கூறி, மனித வர்க்கம் நஷ்டத்திலிருக்கிறதென்பதையும், முஸ்லிம்களுக்கும், விக்கிரக ஆராதனைக்காரர்களுக்கு முள்ள தாரதம்மியத்தையும் கூறுகையில்,

"காலத்தின் பேரில் சத்தியமாக நிச்சயமாக மனிதன் நஷ்டத்திலிருக்கிறுன். ஆனல், விசுவாசங் கொண்டு நல்ல காரியங்களைச் செய்து, சத்தியத்தையும் பொறுமையையும் உபதேசம் செய்தவர்களைத் தவிர"

என்ற கருத்துள்ள அத்தியாயத்தை மௌலானு அவர்கள் திரு குர்ஆனிலிருந்து எடுத்தோதி குறிப்பிட்டதாவது:—

விசுவாசங் கொண்டு நல்ல காரியம் செய்து சத்தியத்தையும், பொறுமையையும் உபதேசித்தவர்களைத் தவிர மனித வர்க்கத்திலுள்ளவர்களனைவரும் நஷ்டத்திலிருக்கிறுர்கள் என்று இறைவன் நமக்கறிவித்திருக்கிறுன். திரு குர்ஆனில் "இன்ஸான்" அதாவது மனிதனைப் பற்றி விபரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மனிதன் என்றுல் யார் என்பதைப்பற்றிச் சற்று இங்கு கவனிப்போம். மனிதன் பேசுகிறுன் என்பதற்காகவா அவனுக்கு 'இன்ஸான்' என்ற பெயர் வந்தது? அல்ல; அல்ல. பேசுவது ஒன்றையே மனிதனுக்குரிய லக்ஷணம் என்று வைத்துக்கொண்டால் சினிமாக்களில் மனிதனுடைய பிரதிபிம்பம்கூட பேசுகின்றது; கிராம்போன்களிருக்கின்றன. இவைகளெல்லாம் பேசிக்கொண்டு தானிருக்கின்றன. பேசுவதற்காக மனிதனென்று கூறுவதாயின் உயிரற்றவைகளான இந்த வஸ்துக்களெல்லாம் மனிதன் என்றே ஏற்படும். அல்லது மனிதனுடைய உருவத்திற்காகவா அவனுக்கு 'இன்ஸான்' என்ற பெயர் வந்தது என்பதைக் கவனிப்போம். உருவத்தைக் கவனித்து மனிதனை நிதானிப்பதாயின், அபூஜஹ்லும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் ஒரேவிதமான மானிட உருவமுள்ளவர்களாக இருந்தனர்; இருவரும் குறைஷியர்தான்; ஒரே ஊரில் பிறந்தவர்கள் தான். ஆனுலும் கஅபாவுக்கு அபூஜஹ்லு சென்றுல் அங்குள்ள விக்கிரகங்களுக்கு சாஷ்டாங்கம் செய்கிறுன். நாயகம் (ஸல்.) அவர்கள் கஅபாவுக்குச் சென்றுல் அங்குள்ள விக்கிரகங்

கள் குப்புறக் கவிழ்ந்து இவர்களுக்கு சாஷ்டாங்கம் செய்கின்றன. எனவே, உருவத்தைக் கண்டு மனிதனை நிதானிக்க முடியாது என்பது ருஜுவாகிறது. ஆகவே, மனிதனென்றால் அதற்குரிய கருத்து இன்னதென்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

"இன்ஸான்" என்பதற்கு சரியான நமூனு நமது நாயகம் (ஸல்.) அவர்கள் தான் என்பதை அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா நமக்கறிவித்திருக்கிறுன். அவர்களுடைய அடிச்சுவட்டை ஏகதேசத்தில் எவர்கள் பின்பற்றி நடக்கிறார்களோ அவர்கள்தான் சரியான மனிதராக முடியும். உதாரணத்திற்காக உங்களுக்குப் பல விஷயங்களை எடுத்துக் கூறுகிறேன். காகமானது வஞ்சிக்கிறதில், திருட்டுத் தனத்தில் முதல்நம்பராக இருக்கிறது. மனிதனும் பிறரை வஞ்சித்து அகப்பட்டதை எல்லாம் அபகரித்துக் கொள்வானுயின் அவன் காக்கையின் தன்மையுள்ளவனுகி விடுகின்றுன். நாயானது தன்னுடைய இனத்தைக்கூடச் சேர்த்துக் கொள்ளாமல் தானே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள விரும்புகிறது. எனவே, அது பிறரையும் அனுபவிக்கவிடுவதில்லை; தானும் அனுபவிப்பதில்லை. இவ்வண்ணமாக மனிதன் மற்றவர்கள்பால் பொருமை கொண்டு தனக்குத்தான் எல்லாம் கிடைக்கவேண்டும் என்று கருதுவானுயின் அவன் நாயினும் கடையனுகவே இருக்கிறுன். குரங்கை எடுத்துக்கொள்வோம்: குரங்கானது பேராசைக்குப் பேர் போனதால் அது நல்லதோ தீயதோ எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறது. ஆகவே, மனிதன் பேராசைகொண்டு எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வானுயின் அவன் குரங்கைப் பார்க்கினும் கேவலமானவனுகி விடுகிறுன். எனவே, இவ்விதமான தீயகுணங்களை நாம் கைகொள்வோமாயின் நாம் மிருகங்களிலும் கேடாக மாறிவிடுகிறோம். அவ்வாறில்லாமல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுவோமானுல்தான் சரியான மனிதனுவோம். இனி நான் அசல் விஷயத்திற்கு வருகிறேன். இப்பிரபஞ்சத்திலுள்ள சகல மானிடர்களேயும் ஒரே உடம்பிலுள்ள உருப்புகளைப்போல் பாவிக்கவேண்டும். ஒரு உருப்புக்குக் கஷ்டம் வந்தால் அக்கஷ்டம் மற்றவர்களுக்கும் வந்தது போல் பாவிக்கவேண்டும். தீண்டாதார் என்று சொல்லப்படுபவர் அசுத்தமாக இருப்பார்களாயின் அவர்களைச் சுத்தி செய்வதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டும். அவர்களுடைய ஹிருதயத்தில் நம்மிடமுள்ள சற்குணங்களும் நன்னடத்தைகளும் பதியும்படி நமது செய்கையின் மூலம் செய்து காண்பிக்க வேண்டும். இதுதான் இஸ்லாத்தினுடைய அசல் நமூனுவாகும். ஜீவகாருண்யம் இஸ்லாத்தினுடைய பிரதான நோக்கமாக இருக்கிறது. மானிடர்கள் மட்டுமென்ன? மிருகங்களேயும் கூட ஹிம்சிக்கக் கூடாது என்று நபி பெருமானுர் (ஸல்.) அவர்கள் அருள் செய்திருக்கிறார்கள். என்னுடைய ஷெய்கு அல்லாமா அய்னுல் குலாத் அவர்களின் பீர் ஹஜரத் மூஸாஜீ அவர்கள் ஒருமுறை ஒரு மாட்டு வண்டியில் பிரயாணமானுர்கள். வண்டிக்காரன் மாட்டை அடித்தான். அடிக்க வேண்டாம் என்று தடுத்தார்கள். அவன் மீறி மறுபடியும் 2 முறை அடித்துவிட்டான். உடனே ஷெய்கு அவர்கள் வண்டியை விட்டு குதித்து விட்டார்கள். வண்டிக்காரன் வண்டியை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கி ஷெய்கு அவர்களை அடுத்து வண்டியை விட்டு இறங்கி விட்டதற்குக் காரணமென்ன வென்று பணிவாக வினவினுன். ஷெய்கு அவர்கள் மாட்டை அடிக்கிருயே என்று கூறினுர்கள். அதற்கு வண்டிக்காரன் மாட்டை அடித்தால் தங்களுக்கு என்ன? என்று கூறினுன். அப்பொழுது ஷெய்கவர்கள் மாட்டை அடித்தால் எனக்கென்னவென்று கேட்கிருய். இதோ எனது முதுகைப் பார். நீ அடித்த அடையாளமான தடிப்புகள் இருக்கிறது பார் என்று கூறி தங்கள் முதுகைத் திறந்து காண்பித்தார்கள். சவுக்கடியின் மூன்று தடிப்புகளிருந்தன. இதுதான் கிரியாம்சையில் நடைபெறும் தத்துவமாகும். இப்பொழுது ஐரோப்பா முழுவதும் உலக சமாதானத்திற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறது. ஆனுல், நபிபெருமானுர் (ஸல்.) அவர்கள் 1300 வருஷங்களுக்கு முதலிலேயே இந்தப் பிரசினையை வெகு சுலபமாகப் போதித்தும் கிரியாம்சையில் செய்தும் காண்பித்து விட்டார்கள். ஆகையால் எல்லோரும் எம்பெருமானுர் (ஸல்.) அவர்களை பின்பற்றி இகபர சாதனங்களை அடைவீர்களாக என்று கூறி முடித்தார்கள்.

திருவல்லிக்கேணி

நவ்வாப்மஸ்ஜித்

மௌலானு அவர்களது இன்றைய பிரசங்கத்தின்சாரம் புத்தியை அளவிடும் கருவி, என்பது

பற்றியே இருந்தது. மௌலானா அவர்கள்: "வானங்களையும் பூமிகளையும் சிருஷ்டிப்பதிலும், இரவும்பகலும் மாறிமாறிவருவதிலும் புத்தியுள்ளவர்களுக்குத் திருஷ்டாந்தங்கள் நிச்சயமாக இருக்கின்றன. (புத்தியுள்ளவர்களாகிய) அவர்கள் அல்லாஹ்வை, நின்றும், உட்கார்ந்தும் ஞாபகம் செய்வார்கள். இன்னும் படுத்துக்கொண்டு சிந்தனை செய்வார்கள். எங்கள் றப்பே! இவைகளை நீ வீணாகச் சிருஷ்டிக்கவில்லை. நீயே தூயவன். எங்களை நரக வேதனையைவிட்டுக் காப்பாயாக என்று பிரார்த்திப்பார்கள்" என்ற வேத வசனத்தை ஓதி ஆரம்பித்துக் கூறியதாவது:—

"உலமாக்களே! மஷாயிகுகளே! சகோதரர்களே! யான் இதற்குமுன் சென்னைக்கு வந்து சில பிரசங்கங்கள் செய்தேன் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும். அதுபோழ்து யான் ஒருமுறை மகரிபுத் தொழுகைக்கு இந்த மஸ்ஜிதுக்கு வந்தபோழ்து தொழுகைக்கு வந்திருந்த ஜனங்கள் தொழுது முடிந்தவுடன் தங்களுக்குச் சிறிது உபதேசம் புரியவேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டனர். நான் சற்றுநேரம் பிரசங்கம் செய்தேனாயினும், அவர்களது விருப்பப்படி பிரசங்கம் செய்ய முடியாமற்போனதைப்பற்றி உண்மையில் வருந்துகிறேன். ஆனால் இன்று அதனைப் பூர்த்திசெய்ய றஹ்மான் சந்தர்ப்பமளித்ததைப் பற்றி அவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

புத்திசாலி யார்?

"சகோதரர்களே! இத்தகைய ஊழியம் செய்வதற்கு றஹ்மான் நம்மைத் தெரிந்தெடுத்திருப்பதற்காக அந்த வல்லோனுக்கே நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். சகோதரர்களே! நாம் சில சமயங்களில் நம்மவரில் பலர் செய்யும் காரியத்தைப் பார்த்து, "அவர் என்ன மனிதரா? கழுதையா?" என்று கூறுவதுமுண்டு. அதாவது ஒருவர் செய்யும் காரியம் நமக்குப் பிடிக்காவிடில், நமது புத்திக்கு ஒத்ததாக இல்லாதிருப்பதன் காரணமாக நாம் அவரைக் குறித்து இம்மாதிரியான வாக்கியங்களை உபயோகிக்கின்றோம். இந்த வாக்கியங்களை நாம் மட்டுமில்லை, எல்லா ஜனங்களுமே உபயோகிக்கின்றார்கள். மனிதன் ஒவ்வொருவனும் தன்னை மிகுந்த அறிவாளியென்றும், புத்திசாலியென்றும் நினைத்துக் கொள்கிறான். தனக்கு பிடிக்காத காரியத்தை ஒருவன் செய்தால் அவனைப் பயித்தியக்காரன் என்றும் கூறிவிடுகிறான். உதாரணத்திற்காக வெகு தூரம் செல்ல வேண்டாம். என்னைப் புத்திசாலி என்று மதித்து எனது பிரசங்கத்தைக்கேட்க நீங்களெல்லோரும் கூடி இருக்கிறீர்கள். ஆனால் நான் பி. ஏ. வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தபோது என்னுடன் அதே வகுப்பில் படித்துக்கொண்டிருந்த எனது நண்பர் ஒருவர் மேனாடு சென்று இஞ்ஜினீரிங் வகுப்பில் படித்து பாஸ் செய்து தற்போது ஹைதராபாத்தில் உயர்தர உத்தியோகத்தில் இருந்து கொண்டிருக்கிறார். அதே வகுப்பில் படித்துக்கொண்டிருந்த என்னுடைய மற்றொரு நண்பர் ஒரு முறை அவரை சந்திக்க நேரிட்டபோது என்னைக் குறித்து விசாரித்தார். அப்பொழுது அவர் "அப்துல் அலீம் காலேஜில் இருந்த அதே பயித்தியத்தில்தான் இப்பொழுதும் இருகிறார்" என்று கூறினாராம்.

அவர் பின்னர் என்னை சந்தித்தபோது இவ்விஷயத்தை என்னிடம் கூறினார். அவர் அவ்வாறு என்னைப்பற்றிக் கூறியது என்பால் துவேஷங்கொண்டல்ல; என்மீதுள்ள அபிமானத்தினால்தான் என்னைப்பற்றி இவ்வாறு கூறியிருக்கிறாரென்றே உணர்கிறேன். ஏனெனில், நான் இன்னும் பயித்தியக்கார நிலையிலேயே இருப்பதாக அவருக்குக் கூறி 'உன்னை பிறர் பயித்தியக்காரன் என்று கூறும்வரை நீ உனது றப்பை ஜபித்துக் கொண்டிரு' என்பதாக ஹதீதில் வந்திருக்கிறது. நான் அவனது சன்மார்க்கத்திற்கு ஊழியம் செய்யும் விஷயத்தில் எனக்கு இம்மாதிரியான பட்டம் கிடைத்ததுபோலும். அதுதான் எனது முக்திக்குக் கிடைக்கக் கூடிய பெரிய சர்ட்டிபிகேட்டாய் இருக்கிறது. இந்த ஒரு சர்ட்டிபிகேட்டின் மூலம் இறைவன் என்னை மன்னித்து எனக்கு நஜாத்தைத் தந்தருளக்கூடும் என்று நான் அவருக்கு சமாதானம் கூறினேன்.

உலமாக்கள்மீது வீண் பழிகள்

ஒரு இஞ்சினைப் பூட்டவும், ரிப்பேர் செய்யவும், கழற்றவும் மெக்கானிக்குகள் தெரிந்திருக்கிறார்கள். அவர்கள் அந்த முறைய இஞ்ஜினீயர்களிடமிருந்தோ அல்லது புத்தகத்திலிருந்தோ கற்றிருக்கிறார்கள். இந்த புத்தகங்களில் சொல்லப்பட்ட முறை அல்லது இஞ்ஜினீயர்கள் கற்பிக்கும் முறை மிஷினைச் செய்தவர் சொல்லிக்கொடுத்ததாக இருந்தால், அவ

ரைத்தவிர வேறு யாருக்கும் அந்த முறையைக் கற்பிக்க உரிமையும் கிடையாது; அவ்விஷயம் தெரியவுமாட்டாது. இதுபோல மனித னுடைய அறிவை அளக்கும் கருவி மனிதனைச் சிருஷ்டித்தவனுக்குத்தான் தெரியும்; வேறு யாருக்கும் தெரியாது. அவனைத் தவிர்த்து மற்றவர்கள் ஏற்படுத்தி இருக்கும் அளவுக ளெல்லாம் தங்களுடைய யூகத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்டதே யல்லாமல் நிச்சய மாக-உறுதியாக அறிந்து விளங்கி ஏற்படுத்தி யவைகளல்ல. இதனைக் குறித்துத்தான் இறை வன் தனது திருமறையில், "வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்திருப்பதிலும், இரவும் பகலும் மாறிமாறி வருவதிலும் புத்தியுள்ளவர் களுக்கு நிச்சயமாகத் திருஷ்டாந்தமிருக்கிறது" என்று கூறியிருக்கிறான். ஆகவே, பூமியை யும் வானத்தையும் இரவு பகல்கள் வித்தியா சப்பட்டு வருவதையும் நோட்டமிட்டுப் பார்த் தால் அவைகளைச் சிருஷ்டித்தவன் ஒருவன் உளன் என்ற விஷயம் புத்தியுள்ளவர்களுக்குப் புலப்படும் என்பதை விளக்கி இருக்கிறான். நான் எனது பிரசங்கத்தில் இக்காலத்திலுள்ள நவநாகரீக மெல்லாம் முன்னேற்றமல்ல, மானிட சமூகத்தின் க்ஷீண தசையென்றே விபரமாகக் கூறி இருக்கிறேன். இக்காலத் தில் ஆங்கிலம் படிக்கிறவர்கள் தாவரசாஸ்திரம் தாது சாஸ்திரம், உடல்கூறு சாஸ்திரம், விஞ் ஞான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் என்று பற்பல சாஸ்திரங்களையும் படிக்கிறார்கள். ஆயி னும் அவர்கள் ஒரு அளவு சென்று அப்பால் திகைத்து ஒன்றும் தெரியவில்லை என்று நின்று விடுகின்றனர். ஆனால் முஹம்மதுர் ரஸூலுல் லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்க ளது பள்ளிக்கூடத்தில் பயிலும் மாணவர்கள் இவைகளை மேற்கண்டவாறு ஆராய்ந்து பார்த்து ஆண்டவன் ஒருவன்தான் இவைகளை இவ்வாறு நடத்துகிறவன் என்ற விஷயத்தை யுணர்ந்து கொள்ளுகிறார்கள். ஆகவே இந்த இடத்தில் அதிகம் அறிந்திருப்பவர்கள் யார்? புத்தியுள்ளவர்கள் யார்? என்ற விஷயத்தை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்! "ஆலிம்கள் நவீனக் கல்விபடிப்பது கூடாதென்கிறார்கள்" என்று இக்காலத்தில் ஆங்கிலம்படித்த வாலி பர்கள் குறைகூறுகிறார்கள். ஆலிம்கள் கல்வி கற்பதை ஒருநாளும் தடைசெய்வது கிடை யாது. ஆனால் இக்காலத்தில் ஆங்கிலம் படித்த வர்கள் ஓரளவுக்குச் சென்று தாங்கள் கல்வி ஆராச்சியின் எல்லையை அடைந்துவிட்டதாகக் கூறி அவ்விடத்திலேயே திகைத்து நின்று கொண்டு தங்களது யூகமான யோசனையால் விஷயத்தைக் கூறிவிடுவதைத் தான் தடை செய்கிறார்கள். உலமாக்கள் கூறுவதெல்லாம் "இன்னும் உமது அறிவு பூர்த்தியாகவில்லை அதிகமாக ஆராய்ச்சிசெய்" என்பதைத் தவிர வேறன்று. இப்படி ஆராய்ச்சி செய்து அறிந் தவர்களைத்தான் அல்லாஹு சுப்ஹான ஹுதஆலா "உலுல்அல்பாப்" (புத்தி யுடையவர்கள்) என்றுகூறி இவர்கள் யார் என்பதையும் நமக்கறிவித்திருக்கிறான். அதா வது "இவர்கள் அல்லாஹ்வை நிலையிலும் இருப்பிலும் ஜபிப்பார்கள். இன்னும் தங்களது படுக்கையிலிருந்து கொண்டு சிந்தனை செய் வார்கள்" என்று கூறி இருக்கிறான். அவர் கள்தான் தொழுகையாளிகள். இவர்கள் நின்று கொண்டும் உட்கார்ந்து கொண்டும் அவனை தியானிக்கின்றனர். இவர்கள் உண்மை விஷ யத்தை உணர்ந்து விட்டதால் இவ்வகிலமனைத் தையும் ஆட்டிவைக்கிற நாயனிடம் "எங்கள் நாயனே! இவைகளை நீ வீணுக்குப் படைக்க வில்லை" என்று கூறுகிறார்கள். எனவே, அவனை அவர்கள் உணர்ந்து கொண்டதால் அந்தப் பொருள்கள் எதற்காகப் படைக்கப்பட்டன என்ற விஷயம் தெரிந்துவிடுகிறது. ஆங்கிலம் படித்தவர்கள் இதனை யுணர்வதில்லை என்ற விஷயத்திற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். மஹ்மூத் கஜ்னவி இந்தியாவின்மீது படை யெடுத்து வந்து சோமநாத்கோவிலில் பிரவே சித்தபோது அங்குள்ள பிராமணர்கள் மஹ் மூத் கஜ்னவீ இடம்வந்து உங்களுக்கு வேண் டிய திரவியம் தருகிறோம்; விக்கிரகத்தை மட்டிலும் ஒன்றுஞ் செய்யாமல் விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கவர் "பிற்கால உலகத்தில் எனதுபெயர் 'விக்கிரகத்தை உடைப்பவன்" என்று விளங் குவதை விரும்புகிறேனே யன்றி 'விக்கிர கத்தைவிற்பவன்' என்றபெயரை விரும்ப வில்லை" என்று கூறி விக்கிரகத்தை உடைத் துத் தள்ளினார் என்று இந்திய சரித் திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. பிறகு, மஹ்மூது கஜ்னவி தனது சிப்பாய்களுக்கு வெகுமதி யளிப்பதற்காக இரத்தினங்களையும், முத்துக்களையும், சொர்ணங்களையும் ஒருவீட்டிற் குள் குவித்து வைத்துக்கொண்டு "இந்த வீட் டிற்குள்ளிருக்கும் வஸ்துக்களில் எதை எவர்

எடுக்கிறாரோ அது அவருக்குச் சொந்தம்'' என்றுகூறினர். எல்லோரும் தங்கள் தங்களுக்கு விருப்பமானதை ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு எடுத்தனர். ஆனால் அவருடைய அடிமையான 'இயாஸ்' என்பவன் மாத்திரம் ஒன்றையும் எடுக்கவில்லை. அம்பொழுது மஹ்மூதுகஜ்னவி அவனை நோக்கி, "என் இயாஸ் உனக்கு ஒன்றும் வேண்டாமா?'' என்று கூறினர். அதுபொழுது அவன் தனது கரத்தை மஹ்மூதுகஜ்னவியின் தோள்மீது வைத்து, "இந்த வீட்டிற்குள்ளிருப்பவைகளில் எதன்மீது எவர் கை வைக்கிறாரோ அது அவருக்குச் சொந்தம் என்று கூறினீர்கள். இதுபொழுது நான் தங்கள் மீது கைவைத்தேனுகையால் தாங்கள் எனக்குச் சொந்தமாகி விட்டீர்கள். இந்தப் பொருள்களனைத்தும் தங்களுக்குச் சொந்தமானதால் தங்கள் மூலமாக இவைகளடங்கலும் எனக்குச் சொந்தமாகிவிடுகிறது'' என்று கூறினன். எல்லோரும் அவனது புத்திசாலித் தனத்தை மெச்சினர். இதுபோல ஹஜ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களது பள்ளிக்கூடத்து மாணவர்கள் அல்லாஹுத ஆலாவை அடைந்து விடுவதால் அவனுக்குச் சொந்தமான ஏனைய எல்லாம் இவனுக்கு சித்தியாகிவிடுகிறது. ஆகவே, அவைகளில் நான் மேலே கூறிய சாஸ்திரங்கள் எல்லாம் அடங்கிவிட்டன. இதனைக் குறித்துத் தான் ஹஜ்றத் மீரானே பீர் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (றஹ்) அவர்கள் "நான் அல்லாஹ்வுடைய பட்டினங்களனைத்தையும் பார்த்தேன். அவைகள் எல்லாம் ஒரு கடுகு போல் தானிருக்கின்றன'' என்று கூறி இருக்கிறார்கள். ஒரு கடுகைத் தமது கையில் வைத்துக்கொண்டு தனது இஷ்டப்படி செய்ய முடியும் என்பதைப் போல் இப்பிரபஞ்ச மனைத்தையும் அல்லாஹுத ஆலா தான் ஆட்டி வைக்கிறானென்பது நன்கு புலனாகும்.

தாவர சாஸ்திர ஆராய்ச்சியின் நிலை

இப்பொழுது தாவர சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து தாவர வஸ்துக்களுக்கு உயிர் உண்டென்று தீர்மானித்துள்ளனர். கல்கத்தாவிலுள்ள டாக்டர்போஸ் இவ்வகையில் ஐரோப்பியர்களைவிட ஒருபடி முன்னேறினர். அவர் தாவர வஸ்துக்களுக்கு உயிரிருப்பதுடன், அவைகள் பேசுகின்றன; கிரகிக்கின்றன என்று தாவாச்செய்தார். இதனைக்கண்டு எல்லோரும் ஆச்சரியமுற்றனர். கருவிகளின் உதவியைக் கொண்டு அவர் இதனைநிரூபித்தார். இதர தாவரசாஸ்திரிகளும் ஆச்சரியமுற்றனர். ஆனால் இந்த சாஸ்திரிகள் யாவரும் ஒரு வரம்புவரை சென்று இதற்கு மேல் கொண்ட விஷயம் எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லையென திகைத்து நின்று விடுகின்றனர்.

சில சமயம் இவர்கள் ரூஹை (பிராணனைப்) பற்றிய விஷயத்திலும் இப்பிரபஞ்சத்தில் காணப்படும் இதர வஸ்துக்களைப்பற்றிய விஷயத்திலும் தங்களின் அறிவின் குதிரையை ஓட்டுகின்றனராயினும் ஒரு வரம்பில் போய் நின்றுகொண்டு, "இதற்குமேல் ஒரு ரகசியமிருக்கின்றது; அதை எங்களால் ஆராய்ச்சி செய்ய முடியவில்லை'' என்று கூறி விடுகின்றனர். இதுதான் இந்த சாஸ்திரிகளின் கலா யோக்கியதை யாகும். இப்போது சர்கார மதீனா அவர்களுடைய பள்ளிக்கூட படிப்பினையைப்பாருங்கள் "சகல வஸ்துக்களும் அல்லாஹுத ஆலாவைத் தஸ்பீஹ் செய்கின்றன'' என்று பெருமானார் (ஸல்.) அவர்கள்மீது வஹீ அறிவிக்கப்படுகிறது.

அதாவது, அவனை தூய்மையாக்கி வைக்கக் கூடியவார்த்தைகளைக்கொண்டு ஞாபகப்படுத்துகின்றன. இவ்வுண்மை மனு, ஜின், மலக்குஇவர்களின்விஷயத்தில் பகிரங்கமாக இருக்கின்றது. ஆடு, மாடுகள், வானம், பூமி, கல், காடு, தாவர வஸ்துக்கள் இவைகளின்விஷயத்தில் இக்கருத்து மிக மிக இரகசியமாக இருக்கின்றது. இதனைக்கண்டு ஸஹாபாக்கள் திகைக்கின்றனர். இந்த இரகசியத்தை எனது மௌலா சர்க்காரே மதீனா கிரியாம்சையில் காட்டுகிறார்கள்.

நாயகம் (ஸல்) அவர்களின் கிரியாம்சை

ஒரு நாள் நாயகம் (ஸல்) அவர்களின் தர்பார் கூடி யிருக்கின்றது. சின்னஞ் சிறு கற்களை எடுத்து நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடைய திருக்கரத்தில் வைத்து மூடிக்கொண்டு "இது என்ன பேசுகின்றது?'' என்று ஸஹாபாக்களுக்கு முன் கையை நீட்டுகின்றார்கள். எல்லோரும் காது கொடுத்து கேட்கின்றார்கள். அந்த சின்னஞ்சிறிய கற்களானது, "லாயிலாஹ இல்லல்லாஹு'' என்னும் திரு கலிமாவை மொழிகின்றன. எல்லோரும் ஆச்சரியமுறுகின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த திரு அத்தியாயத்தின் கருத்தை விளக்கு

வான்வேண்டி, கிரியாம்சையில் கற்களின் தஸ்பீஹைக் காதுக்குக் கேட்கும்படி காட்டினார்கள்.

இன்னும் சற்றுமுன்னேறுங்கள். மற்றொரு சம்பவத்தையும் கேளுங்கள்! சர்க்காரமதீனா அவர்கள் தங்களது மாண்புமிக்க பள்ளிவாசலில் குத்பா ஓதும்போது, சாய்ந்துகொள்வதற்காக வேண்டி சுவற்றில் வைத்துக் கட்டப்பட்டிருந்த காய்ந்துபோன ஈச்சமரத் துண்டொன்று இருந்தது. அதில் பெருமானார் (ஸல்) அவர்கள் சாய்ந்துகொண்டு உபன்னியாசம் புரிவார்கள். மெம்பர் தயார் செய்து வைக்கப்பட்ட பின், அந்தக் கட்டையை எடுத்து மஸ்ஜிதுக்குப்பின் பக்கத்தில் வைக்கப்பட்டது. உடனே அந்த கட்டையானது தாயைக் காணாப் பசுங்கன்று கதறுமாப்போல் அழத் தொடங்கிற்று. பெருமானார் அதன் சமீபத்தில் சென்று அக்கட்டையை தங்கள் மார்போடு அணைத்தார்கள். அழுகை ஓய்ந்தது. பார்த்தீர்களா? இதன்றோ பல்ஸபா? (தத்துவ சாஸ்திரம்) மரங்கள் பேசும் சக்தியை இந்த ஸஹீஹான ரிவாயத்தைக் கொண்டு உணர்வீர்களாக.

டாக்டர் போஸ் ஆயுதத்தின் உதவியைக் கொண்டு மரங்கள் பேசுவதையும் சிரிப்பதையும் இன்று கண்டு பிடித்திருக்கிறார். ஐரோப்பிய சாஸ்திரிகள் இப்பொழுதுதான் விளங்கிக் கொண்ட இந்த விஷயத்தை 1300-வருஷங்களுக்கு முன்னாலேயே பெருமானாரவர்கள் போதித்தும், தங்களுடைய அற்புதக்கருவியைக் கொண்டு ரூபித்தும் வெகு இலகுவில் காட்டிவிட்டார்கள். ஆனால், சாஸ்திரிகளின் ஆராய்ச்சிக்கும் சர்க்கார மதீனா அவர்களின் போதனைக்கும், மத்தியிலுள்ள வித்தியாசத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். டாக்டர் போஸ், "மரங்கள் பேசுகின்றன; அது என்ன பேசுகின்றனவென்பது எனக்கு விளங்கவில்லை" என்றார். மேலும் பேரீச்ச மரத்தைக் குறித்து அவர் குறிப்பிடுவதாவது:—

"மற்ற மரங்களின் பேச்சுக்கும், பேரீச்ச மரத்தின் பேச்சுக்கும் அதிக வித்தியாசம் காணப்படுகிறது. பேரீச்ச மரத்தின் பேச்சிலிருந்து அது தன் பகவானை ஸ்தோத்தரிப்பதாகவே தனக்கு நன்கு புலனாகின்றது" என வரைந்திருக்கின்றார்.

மதீனாவின் பள்ளிக்கூடப் படிப்பினையைக் கவனியுங்கள். பேரீச்ச மரத்தைக் குறித்து பெருமானார் (ஸல்.) அறிவித்திருப்பதாவது:—

"அது மானிடர்களுக்கு அதிக ஒப்பான மரமாகும். அது ரஹ்மானை அதிகமாக 'திக்ரு' செய்யும் மரமாகும்"

என்று கூறியிருக்கின்றார்கள். இந்த இரகசியத்தை இன்றைக்கு டாக்டர் போஸ் கண்டு பிடிக்கிறார். ஆனால் அவைகள் என்ன பேசுகிறதென்பது அவருக்கு விளங்கவில்லை. சர்காரமதீனா அவர்களோ, அவைகள் "தத்தமக்கு தகுதியான பேச்சுக்களைக்கொண்டு தனது எஜமானனை ஞாபகப்படுத்துகின்றது" என்ற இரகசியத்தை 1300-வருஷத்திற்கு முன்னாலே அறிவித்துவிட்டார்கள்

இதனால்தான், ஒருவர் அடியில் கண்டவிதம் உர்தூவில் கவிபாடினார்.

"எந்த பலாஸபர்களினாலும் அவிழ்க்க முடியாததும், எந்தத் தர்க்க சாஸ்திரிகளினாலும் தெளிவுபடுத்த முடியாததுமான ரகசியங்களை பாலைவனத்தில் சாதாரண துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு உலாவும் அந்தத் தீர்க்க தரிசி ஒரு சில சமிக்ஞையைக்கொண்டு விளங்க வைத்து விட்டார்"

இந்தியாவின் போலி

இங்கு நபி என நடித்த ஒருபோலியின் கதையை உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருவது உசிதமென நினைக்கின்றேன். ஒரு நாள் இவருக்கு இல்ஹாமானதாம். அந்த இல்ஹாமும் ஆங்கிலப் பாஷையில் ஏற்பட்டதாம். அவருக்கு ஆங்கிலம்தெரியாதாம். ஆங்கில வார்த்தைகள் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை ஒரு பிராமணப்பையனிடம் காட்டி அர்த்தம் கேட்டாராம். யாருக்கு இல்ஹாம் ஏற்படுகின்றதோ, அதன் கருத்து அவருக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை என்று தாவா செய்தார். அந்தப் பிராமணப் பையனுக்குத் தெரிந்து விட்டால் போதும்போலும்? இது, தன்னை நபி என்று தாவாச்செய்யும் போலியின் புகல் கூற்றாகும். அந்தப் போலி யார்? அவரே குலாம் அஹ்மத் காதியானி. இவருடைய தாவாக்கள் மீது லாகூர் முகம்மதலி ஆங்கிலத்தில் குர்ஆனை மொழிபெயர்த்தார். அந்த வியாக்கியானத்தில் குர்ஆனுடைய கருத்துக்கு விரோதமாக அநேக வார்த்தைகளைச் சேர்த்தார். இவருடைய நூலை 'தப்ஸீர குர்ஆன்' என்று சொல்வதைவிட 'தஹ்ரீபுல் குர்ஆன்' (அதாவது குர்ஆனை புரட்டுவது) என்று பெயர் வைப்பது மிக மிகப் பொருத்தமானதாகும்.

இப்பொழுது அசல் கருத்தின் பக்கல் வாருங்கள்! "எல்லா வஸ்துக்களும் தஸ்பீஹ் செய்கின்றன" என்று பெருமானாரவர்களுக்கு வஹீ வருகின்றது. அதனுடைய கருத்தை கிரியாம்சையில் விளக்குகின்றார்கள். இந்தப் போலி மிர்ஸா தனக்குத் தோன்றும் இல்ஹாம் தனக்கே விளங்க வேண்டியதில்லை என்கிறார். என்னே! இத் தன்மைகளின் வித்தியாசம்.

உலமாக்கள் கூறுவதென்ன?

உலமாக்கள், பிலாஸபி ஸைன்ஸ் முதலிய கலா ஞானங்களைப் படிக்கக்கூடாதென்று சொல்கின்றனரென ஒரு சாரார் கூறுகின்றனர். உலமாக்கள் எந்தப் படிப்பையும் படிக்கக்கூடாதென்று கூறுவதில்லை.

"அரை வைத்தியம் உயிருக்குச்சேதம், அரைப்படிப்பு ஈமானுக்கு ஆபத்து" என்பது ஒரு பழமொழி. இதைப்போல் மேற்படி ஞானங்களை அரைகுறையாகப் படிப்பதனால் தெய்வமே இல்லையென்ற நாத்திகக்கொள்கை வேரூன்றி விடுகின்றது. எனவே, "எந்தக் கலைகளைப் படிப்பினும் முற்றும் படித்து முன்னேறுங்கள்" என்று உலமாக்கள் கூறுகிறார்களேயன்றி அறவே படிக்கக்கூடாதென்று சொல்வதில்லை. எனவே கல்விக்கு யார் தடைக்கல்லாக நிற்கின்றார்களென்பதை உணருங்கள் என்று கூறியபின், நம் பெருமானவர்களை சகல துறைகளிலும் பின்பற்றி நடக்கவேண்டுமென்னும் விஷயமாய் சாங்கோபாங்கமாய் உபதேசித்தார்கள்.

சென்னை ஆண்டர்ஸன் தெரு

ஹிஸ் ஹோலினஸ் மௌலானா அவர்கள் பேசியதன் முக்கிய பாகம் வருமாறு:—

"நிச்சயமாக அல்லாஹ் தஆலா நீதி, இஹ்ஸான் இவைகளை ஏவுகின்றான்"

சகோதரர்களே! உலமாக்களே!! மானிடர் அல்லாஹுத ஆலாவின் வார்த்தைகளை எடுத்தோதுவதும், அதனை காதுகொடுத்துக் கேட்பதும், அதற்காக வேண்டி நித்திரை முதலிய சுகங்களை விட்டுவிடுவதும் அல்லாஹ் நம்மீது செய்திருக்கும் பாக்கியங்களாகும். இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஒரு முஸாபிர் (யாத்திரீகன்) தன் தேசத்தை விட்டு இதரதேசத்திற்குச் சென்றான். பணம் தேடுவதோ வேறு ஏதாவது காரியங்களை ஜெயிப்பதோ அவனுடைய யாத்திரைக்குக் காரணமாயிருந்தது. அவன் வந்தவிடத்தில் கண்ட நியமத்துகளைப்பார்த்து மிரண்டான்; சிற்றின்பங்களில் மூழ்கினான்; தன்னுடைய சொந்த ஊரை மறந்தான், தன்னுடையசினேகிதன் ஒருவன் தன் ஊரிலிருந்து இவனுடைய வழிகேடுகளையும் தவறான செயல்களையும் கடிதமூலம் அறிவுறுத்துகின்றான். இதனை உணர்ந்து அம்முஸாபிர் கவலைப்படுகின்றான். உங்களுக்கு விஷயத்தை எடுத்து விளக்குவான்வேண்டி உபமானமாக இதனைக் கூறினேன். இனி அசல் கருத்திற்கு வருவோம்.

சொந்த வீடு என்பது சுவர்க்கலோகமாகும். நமது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அவர்களின் பிராட்டியாரான ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் சுவர்க்கலோகத்தில் தான் இருந்தார்கள். அதன்பின் அல்லாஹுத ஆலாவின் இரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்காகவேண்டி - கொள்ளை கொள்வதற்காக வேண்டி - உகிற்கு வந்தார்கள். இங்குள்ள ஆசாபாசங்களையும் அழகிய நிஅமத்துகளையும் கண்டு மானிடர் மிரண்டார்கள்; சுயதேசத்தை மறந்துவிட்டார்கள். அதைப்பற்றி எவ்விதக் கவலையும் அவர்களுக் கிருக்கவில்லை. அல்லாஹுதஆலா தன் தூதர்களையனுப்பி ஞாபகமூட்டுகின்றான். கடிதங்களனுப்புகின்றான். அவைதான் வேதங்களாகும். அதனை ஒரு சிலர் படித்துக் கருத்தை யுணர்ந்தனர். சுதேசத்தை உணர்ந்து அதற்காவன செய்தார்கள்; சுவனபதியை யடைந்தார்கள். ஒரு சிலர் அவர்களின் கடிதத்தை உணரவில்லை. அக்கடிதங்களை படித்துப் பார்த்தும் விளங்கவில்லை என்று அழுதுகொண்டிருந்தனர். அவர்களும் ஜெயம்பெற்றனர். மற்றும் சிலர் அந்தக்கடிதத்தைப் படித்தார்களில்லை; சுதேசத்தை நினைத்தார்களில்லை; அவர்கள் வீழ்ச்சியடைந்தனர்.

ஒரு சம்பவம் கேளுங்கள்! ஒரு தடவை நான் கப்பலில் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கும்போது அக்கப்பலின் ஐரோப்பிய "டாலி கிளார்க்" என்னுடன் அடிக்கடி வந்து பேசிக்கொண்டிருந்தார். அதை சீப் ஆபீஸர் அடிக்கடி பார்த்துக்கொண்டு புன்முறுவல் பூத்துச் சென்று விடுவார்.

அநேக உபதேசங்களுக்குப் பின் டாலி கிளார்க் பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவி விட்

டார். சீப் ஆபீஸரோ நாஸ்திகர்; அவர் ஏளனமாய் 'கடவுள்' 'கடவுள்' என்றே சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே? அம்மாதிரியாக எதுவும் உண்டா என்று வினவினார். பொதுவாக மானிடர்களுக்கு 'வதனேஅஸலே' (சொந்த ஸ்தலத்தை) ஞாபகப்படுத்தினால் நினைவுவரும். இவருக்குப் பலவிதமாய் ஞாபகப்படுத்தியும் பிரயோசனப் படவில்லை. அவருக்கு ஒரு சம்பவத்தை ஞாபகமூட்டினேன். இன்ன கப்பல் புயலில் அகப்பட்டு மூழ்கிப்போகும்தருவாயில் இருந்ததே அதுபொழுது உங்களுடைய கவனம் எதிலிருந்து கொண்டிருந்தது என்று கேட்டேன். அவர் பலவிதமாக ஞாபகம் செய்தும் ஒன்றும் கைகூடவில்லை. கடைசியாக கடவுளுடைய ஞாபகத்தை நினைவுக்குக்கொண்டு வந்து அதைக்கொண்டுதான் ஜெயம்பெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்தோம்; அதன்பின் கஷ்டத்தை விட்டும் தப்பினோம் என்று கூறினார். இங்கு கவனியுங்கள்! சீப் ஆபீஸர் முரட்டுத்தனமாக கடவுளுடைய உஜூதை மறுக்கக் கூடியவராக இருப்பினும் அவருடைய கஷ்டகாலத்தில் அல்லாவுடைய உஜூதை ஒப்புக்கொண்டு அவனிடத்திலேயே பிரார்த்தனை புரிந்திருக்கிறார். அவருடைய பேச்சைக் கொண்டே அவர் அல்லாவுடைய உஜூதை ஒப்புக்கொண்டாரென்பது தெற்றென விளங்குகின்றது. மேலும் அவர் என்னதான் மறுத்துவிடினும், ஒரு சமயத்தில் "வதனே அஸல்" (சுயதேசத்தின்) நினைவு அவருக்கு வந்து விட்டதென்பதை ஞாபகத்தில் வையுங்கள்!

நான் ஆரம்பத்தில் ஓதிய திருவசனத்தின் பக்கல் திரும்புவோம். அல்லாஹுத ஆலா இன்ஸாப், (நீதி)யைக் கொண்டு நமக்கு ஏவல் புரிகிறான். நீதம் (இன்ஸாப்) என்றால் என்ன என்பதை ஆராயவேண்டும். ஷரஇல் (சன்மார்க்கத்தில்) இதற்கு என்ன கருத்து அமைத்திருக்கிறதென்றால், ஒவ்வொரு வஸ்துவையும் அதனுடைய ஸ்தானத்தில் வைப்பது இன்ஸாப். (நீதி). இதற்கு நேர்மாற்றமாய் வஸ்துக்களை அதற்குப் பொருத்தமற்ற இடங்களில் வைப்பது ஜுலும் (அநீதி) ஆகும். இதுதான் ஷரஇனுடைய பரிபாஷையின் கருத்தாகும். இதே கருத்தையே ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களும் கூறியிருக்கின்றார்கள். அதாவது, அல்லாஹ்வுக்கு அவனுக்குத் தகுதியானதை சேர்ப்பியுங்கள்! ஒரு அதிபதிக்கு அவனுக்குத் தகுதியானவற்றைச் சேர்ப்பியுங்கள்" என்பதாகும்.

விஷயம் இவ்வாறிருக்க, அதே மஸீஹ் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பின்பற்றிய ஐரோப்பியர்கள், விபசாரம் குற்றமற்றதென்று பிரசாரம் செய்ய முற்பட்டு விட்டனர். மேனாட்டு டாக்டர் ஒருவர் இந்த விஷயத்தில் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட முன்வந்து வெகு தந்திரமாக இதற்கு ஆரம்பத்தில் ஒரு உபமானம் வரைகின்றார். அதாவது,—

ஒரு மேஜை வைக்கப் பட்டிருக்கிறது. அதில் சாப்பாட்டிற்குவேண்டிய சகல சாமான்களும் பரத்தப்பட் டிருக்கின்றன. ஒரு பசியாளி வாயலில் வந்துநின்று வினவுகின்றான். அதுபொழுது அவனுக்கு பசியாற்றி வைக்காவிட்டால் அது எவ்வாறுகுற்றமாகுமோ அதே போன்று பெண்பிள்ளைகள் விஷயத்திலும் தனது அபிப்பிராயத்தை வெளியிடுகின்றார்.

அவருடைய ஆபாசக் கூற்றை இங்கு வெளியிட நான் பிரியப்படவில்லை; நீங்களே கருத்தை விளங்கிக் கொள்ளுங்கள். இதைத் தான் மேனாட்டினர் நாகரீகமென்கின்றனர். இன்னொரு சம்பவம் கேளுங்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் யான் ரயிலில் பிரயாணிக்கும்போது ஓர் ஐரோப்பியர் என்னுடன் கூட இருந்தார். அவர் இந்தியப் பெண்மணிகளை தூஷணையாகப் பேசினார். அதற்குப் பதிலாக, "உங்களுடைய பெண்களிடத்தில் சுத்தம், ஆடம்பரம், அலங்கரிப்பு இம்மாதிரியான சகல அம்சங்களுமிருக்கின்றன; ஆனால் அவர்களிடத்தில் ஒரு அம்சமில்லை; அது ஒன்றைக்கொண்டே இந்தியப் பெண்மணிகள் சிறப்படைகின்றனர்" என நான் கூறினேன். அது நாணம், மடம் இவைகளாகும். இவ்வாறு நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பூனா ஸ்டேஷன்வந்தது. அங்கு ஒரு பெண்மணி சீத்தாப்பழம் விற்றுக் கொண்டிருந்தாள். அவளுடைய புடவைகள் அசுத்தமாயும், அவயவங்கள்திறந்தும் இருந்தன. அப் பெண்ணைக் கூப்பிட்டு சீத்தாப்பழத்தைவிலைகேட்டுக்கொண்டிருக்கும்போது ஐரோப்பியரைக் கவனிக்கும்படியும் செய்திருந்தேன். விலைபேசப்பட்டபின் ஐரோப்பியருக்குக் காட்டுவான் வேண்டி, அப் பெண்ணின்முகத்தைப் பார்த்து சிரித்தேன். அப்பெண்மணி தன்னுடைய பார்வையையும் முகத்தையும் கீழே தாழ்த்திவிட்டாள்.

அதை அவ்வைரோப்பியருக்கு காட்டி இந்த வஸ்து அவர்களுடைய பெண்களிடத்திலில்லையாதென்பதை நிரூபித்துக் காட்டிவிட்டேன்.

இங்கு இஸ்லாத்தின் சட்டத்தை ஆராயுங்கள். விபசாரத்தை ஹராமாக்கிவிட்டது. மீறிச்செய்பவர்கள் கல்யாண முள்ளவர்களாக இருப்பார்களானால், அவர்களை கல்லாலடித்து கொல்லும்படி உத்திரவிடுகின்றது. கலியாண மில்லாதவர்களை நூறு சவுக்கடி அடிக்கும்படியும் கட்டளையிடுகின்றது. கர்ப்பம் ஒருவருக்குச் சொந்தமாக இருந்து வளர்வதானது சரியான முறையாகும். அதற்கு மாற்றமாய் பலருக்கு பாத்தியப்பட்டதாக ஆக்கிவிடுவது அநீதியாகும்.

ஒருதடவை ஹஜ்ரத் ஜுனைதபக்தாதி (ரஹ்) அவர்கள் பள்ளிவாசலில் உபதேசம் புரிந்துகொண்டிருந்தார்கள். அதுபொழுது ஒருவர், "நாங்களோ நேர்வழியைத்தெரிந்து மஸ்ஜிதுக்கு வந்துவிட்டோம்; எங்களுக்கு உபதேசம் அவசியமில்லை. வெளியில் ஜனங்கள் பலவாறாகக் கெட்டுத்திரிகின்றனர்; அவர்களிடம் சென்று உபதேசம் புரியுங்கள்" என்றார்.

அதன்படி ஹஜ்ரத் அவர்கள் ஒரு தோட்டத்திற்குச் சென்றார்கள். அங்கு சிலர் சாராயம் குடிப்பதற்காக தயார்செய்து கொண்டிருந்தனர். ஹஜ்ரத் அவர்களைக்கண்டவுடன் அவர்கள் சாராயத்தை எடுத்தொளித்தார்கள். ஹஜ்ரத் அவர்கள் அன்னாரிடம் வந்தபோது அவர்கள் "நாங்கள்தான் உலமாக்களைவிட்டு மிரண்டோடி இங்குவந்து விட்டோமே இங்குமா எங்களைத் துரத்திக்கொண்டு வந்துவிட்டீர்கள்" என்று ஏளனமாகப் பேசினார்கள். அதற்கு ஹஜ்ரத் அவர்கள், "மிரளவேண்டாம்; இதைவிட மஸ்தான ஒரு குடிப்பை உங்களுக்குத் தருகின்றேன்" என்றார்கள். உடனே அவர்கள் எல்லோரையும் உளுச் செய்யும்படி செய்து தாங்கள் இமாமாக நின்று தக்பீர் கட்டினார்கள்; தொழுகைமுடிந்தது. கடைசி ஸஜ்தாவில் ஹஜ்ரத் அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள். "ஏ! ஆண்டவா! இவர்களை உன்னுடைய வாசற்படியில் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன். நீ அவர்களை நேர்வழியின் பக்கல் திருப்பவேண்டியது உன்னைப் பொறுத்ததாகும்" என்றார்கள். அதன்பின் அந்த ஜனங்களுக்கு ஒருநிலை ஏற்பட்டது. தன்னை மறந்தவர்களாய் பேரின்ப மஸ்த்துப் பிடித்தவர்களாய் ஆகிவிட்டார்கள். உடனே தெளிவுபெற்று தவ்பா செய்து நல்லடியார்களானார்கள்.

எல்லா விஷயங்களுக்கும் ஒரு நிலைமை உண்டு. அதை யனுசரித்து நடப்பதுதான் நீதமாகும். அதைவிட்டு விஷயத்தை கூட்டியோ குறைத்தோ நடப்பதற்குத்தான் அநீதி என்று சொல்லப்படுகிறது.

மோட்டாரை உற்பத்திபண்ணியவன் அதை வைத்து அனுபவிக்க வேண்டிய முறைகளையும் எழுதிவிடுகின்றான். அதை யனுசரித்து நடத்தினால்தான் அதிகநாள் நின்றுழைக்கும்; அவ்வாறில்லாவிடில் அது கெட்டுப்போகும். இது போன்றே வாஜிபுல் உஜூதான அல்லாஹு தஆலா பிரபஞ்சங்களைப் படைத்து அவைகள் நடக்கவேண்டிய சட்ட திட்டங்களையும் ஏற்பாடு செய்து விடுகின்றான். அந்தச் சட்டம் சகல மானிடர்களுக்கும் பொதுவானதாக ஏற்படுகின்றது. வெள்ளையர்களானாலும் கருப்பர்களானாலும் அதில் ஒரே விதமாகக் கூட்டாகின்றனர். அதுதான் "ஷரஉ" என்னும் உறைக் கல்லாகும். இதனால்தான் அல்லாஹு தஆலா அருளிய கட்டளையைக் கொண்டு தீர்ப்பளிக்காதவர்கள் காபிர்களென்றும், அநியாயக்காரர்களென்றும் பாவிகளென்றும் மூன்று விதமாக அல்லாஹு தஆலா திருகுர்ஆனில் சொல்லியிருக்கின்றான். எல்லாச் சட்டங்களும் அல்லாஹு தஆலாவுடைய பொருத்தத்தை தேடக் கூடியதாக இருக்க வேண்டும்.

"துனியா (பிரபஞ்சம்) செத்த சவமாகும்; அதைத் தேடுபவர்கள் நாய்களாவர்" என ஹதீதில் வந்திருக்கின்றது. இதன் கருத்தென்ன? அல்லாவுடைய ஞாபகத்தை விட்டு அப்புறப்படுவது தான் துனியா (பிரபஞ்சம்) என்று தீர்மானித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தங்களுடைய குழந்தை ஹஸன் (ரலி) அவர்களுடன் பேசியவர்களாய் உலாவிக்கொண் டிருந்தார்கள். அதுசமயம் ஹஜ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் தகப்பனாரைப்பார்த்து, "பாவா! எங்கள் மீது உங்களுக்கு அன்புண்டா?" என்று கேட்டார்கள்.

ஹஸரத் அலி:—"ஆம், உண்டு."

ஹஸன் (ரலி.):—"எங்கள் தாயார்மீதும் எங்கள் நானா நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீதும் உங்களுக்குப் பிரியமுண்டா?" வெனத் தனித்

தனியாகக் கேட்டார்கள். அதற்கு அலீ அவர்கள் "ஆம்" என்று கூறினார்கள்.

ஹஸன்:—"அப்படியானால் அல்லாஹுத ஆலாவின் மீதும் பிரியமுண்டா?" என்றும் வினவினார்கள்.

ஹஸ்ரத் அலீ.—"ஆம்"

ஹஸன்:—"ஹிருதயம் ஒன்று, இரண்டா?"

ஹஸ்ரத் அலீ.—"ஒன்றுதான்."

ஹஸன்:—"அப்படியானால் இவ்வளவு அன்புகளையும் எப்படி ஒரு ஹிருதயத்தில் வைத்துக்கொள்ள முடியும்?"

ஹஸ்ரத் அலீ அவர்கள் பிள்ளையின் கேள்விக்கருத்தைத் தெரிந்துகொண்டு பதில்கொடுக்கத்துவங்கினார்கள். "ஏ! அருமைக் குழந்தாய்! எல்லா அன்பும் எல்லா ஆதரணையும் எல்லா நல்ல அமல்களும் அல்லாவுக்காகவே இருக்கும். உங்கள்மீது முஹப்பத் வைப்பதும், உங்கள் தாயார்மீதோ, அல்லது உங்கள் நானாமீதோ அன்புகொள்வதும் எல்லாம் அல்லாவுக்காகவே இருக்கும்.

இதைத் தெரிந்து கொண்டால், ஒரே இருதயத்தில் ஒரேவித அன்புதான் இருக்கமுடியும் என்பதை விளங்கிக்கொள்வாய்!" என அறிவித்தார்கள்.

இதுவரை திருகுர்ஆனில் சொல்லப்பட்ட "அதில்" (நீதம்) என்னும் வசனத்தைப் பொறுத்த விஷயங்களை விவரித்தேன். இனி அடுத்த வசனமான 'இஹ்ஸான்' என்னும் வார்த்தையை விவரிக்கப்புகின் பொழுது விடிந்துவிடும் (அப்படியானாலும் கேட்கத் தயார் என்று ஜனங்கள் கரகோஷம் செய்தனர்)

இஹ்ஸானைப் பொருத்து நபிகள் நாயகம்(ஸல்) அவர்களே விவரித்து இஹ்ஸான் என்பது உங்களுடைய ரப்பை நீங்கள் பார்ப்பது போல வணங்குவதாக இருக்கும் என்று அருள் செய்தார்கள்.

மானிடன் தன்னுடைய வதனை அஸலை (ஆதி ஸ்தானம்) நினைத்து அல்லாஹுத ஆலாவிடத்தில் போய்ச்சேரவேண்டிய வழிகளைத் தேடவேண்டும். சகல காரியங்களும் அல்லாஹுதஆலா ஒருவனுக்கே உரித்தானது; பிரபஞ்சமனைத்தும் அவனுடைய மஹாத்மியத்திற்கு முன்னால் ஒரு கடுகளவு பிரமாணமாகயிருக்கின்றது என்பதை உணரவேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அருள் செய்தார்கள்: "ஷரீஅத்தானது என்னுடைய சொற்களாகும், தரீகத்தானது என்னுடைய செயல்களாகும் ஹக்கீகத்தானது எனக்கு ஏற்படும் நிலைகளாகும்."

இதுவே என்னுடைய கடைசி உபதேசம். எல்லாருக்கும் அல்லாஹுத ஆலா நல்ல தவ்பீக்கை தந்தருள்வானாக.

புதுச்சேரி

மௌலானா அவர்கள் பிரசங்கத்தின் சாராம்சம்:—

சகோதரர்களே!

என்னை வரவேற்க அளவுகடந்த சிரமம் எடுத்துக்கொண்டீர்கள். வெயிலின் கொடூரத்தையும் தாங்கள் பொருட்படுத்தவில்லை. ஊர் முழுதையும் அலங்கரித்து விட்டீர்கள். எனக்காக நீங்கள் இவ்வளவு வேலை செய்திருக்கமுடியாது. உங்கள் மனதில் குடிகொண்டிருக்கும் அல்லாஹ், ரசூலுடைய அன்புதான் இந்த தோற்றத்தில் ததும்புகின்றது. அல்லாஹ் விடத்தில் அதன் நற்கூலி யடைவீர்கள்.

"இஸ்லாம் என்னும் வார்த்தைக்கு அடிபணிதல், அமைதி, சமாதானம் என்பது பொருளாகும். "எவனுடைய கையினாலும், வாயினாலும் மற்ற முஸ்லிம்கள் ஸலாமத்துப் பெற்றிருக்கின்றனரோ அவன்தான் முஸ்லிம்" என்று நபிகள்பிரான் (ஸல்) அருள் செய்திருக்கின்றார்கள்.

பெருமானாருக்குமுன் அரப்தேசம் தலைவரின்றி சீர்குலைந்து நின்றது. வலியவன் எளியவனை அடக்கியாள்வதும், முதலாளி சாமான்யரைப் பிழிவதும், நிறவேற்றுமையும் குலப்பிரிவினையும் தலைவிரித்தாடிற்று. நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள் இவ்வெல்லாத் தீவினைகளையும் அகற்றி எல்லா மக்களையும் ஒரே மேடையில் சேர்த்துவிட்டார்கள்.

இற்றைக்கு ஐரோப்பிய நாடுகளைப் பாருங்கள்; இடாலி அபிஸினியாவை விழுங்கிவிடப் பார்க்கின்றது; கருப்பர் ஆளக்கூடாதென்கின்றது. ஜெர்மனி மற்ற நாடுகளை விழுங்கப் பார்க்கின்றது. மற்ற நாடுகள் ஜெர்மனியை விழுங்கப் பார்க்கின்றன. இதனால் ஐரோப்பாவில் இல்லை, உலகமுழுவதிலும் சமாதானங் பங்கம் விளையும் தருவாயிலிருக்கிறது. சுருங்

கக் கூறுமிடத்து, நிறவேற்றுமையும், முதலாளித் தன்மையும் ஆங்கு தலைவிரித்தாடுகின்றன.

இந்தியாவின் நிலைமையைக் கவனியுங்கள்! ஹிந்துக்களின் கொள்கை, "பிராமணர் கடவுளுடைய முகத்தினின்றும், சூத்திரர் இடுப்பினின்றும், தீண்டாதார் காலினின்றும் ஜனித்திருப்பதாக கூறுகின்றனர். ஒருவருக்கொருவர் ஜாதி வித்தியாசம் கொண்டாடுகின்றனர். தீண்டாதார் எவ்வகையிலும் முன்னேற்றமடைய முடியாதென்பது அவர்களின் கொள்கை. இதனால் உலகில் சமாதான பங்கமேற்படுகிறது. இக்குறைகளை நிவர்த்திப்பான்வேண்டி, 1300-வருடங்களுக்கு முன்னரே நபிபெருமான் (ஸல்) அவர்கள் எல்லா மக்களும் ஒரே அந்தஸ்தை யுடையவர்கள்; பிறப்பில் எவ்வித வித்தியாசமில்லை என்னும் ஞானத்தை உலகுக்குப் போதித்தார்கள்.

கடவுளின் தன்மையிலும் ஜனங்கள் பல்வேறு அபிப்பிராயமுடையவர்களா யிருக்கின்றனர். கிறிஸ்துவர்கள் ஹஜரத் மஸீஹ் (அலை.) அவர்களை கடவுள் என மதிக்கின்றனர். யூதர்கள் 'உஜைர்' (அலை.) அவர்களை கடவுளுடன் கூட்டாக்குகின்றனர். ஹிந்துக்கள் பலரும் பலவேறுவிதமான தெய்வங்களைக் கொண்டாடுகின்றனர். இதனால் தெய்வங்களின் பெயரால் ஒருவருக்கொருவர் சண்டையிடுகின்றனர். உலகில் சமாதானம் நிலவவேண்டுமானால் எல்லாருக்கும் கடவுள் ஒருவரே. சகலத்தையும் அவரே சிருஷ்டித்துக் காப்பாற்றி வருகிறார் என்னும் ஞானம்உலகில் பரவவேண்டும். இதுதான் இஸ்லாத்தின்அடிப்படையான கொள்கையாகும்.

தீர்க்கதரிசிகள் பெயராலும் மக்கள் சண்டையிடுகின்றனர். யூதர்கள் கிறிஸ்தவர்களின் தீர்க்கதரிசியை குற்றம் சாட்டுகின்றனர். இதன்படியே மற்ற மதஸ்தினரும் தீர்க்கதரிசிகள் விஷயத்தில் அபிப்பிராயபேதப் படுகின்றனர். இஸ்லாமோ "கடவுளால் அனுப்பப்பட்ட எல்லாத் தீர்க்கதரிசிகளும் சத்தியவான்கள், கடவுளின் நல்லடியார்கள்" என போதிக்கின்றது.

மேலும் "சிருஷ்டிகள் யாவும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டவர்கள். அவர்கள் யாவரும் ஒரே குடும்பத்தினர் போலிருக்கின்றனர்" என்னும் ஞானத்தை இஸ்லாம் உலகுக்குப் போதித்து வருகிறது.

முஸ்லிம்கள் இந்த ஒற்றுமையை எந்த அளவுக்கு கையாண்டு வருகின்றனர் என நீங்கள் கேட்கலாம். இஸ்லாத்தின் மூலாதாரக்கொள்கையை எடுத்து போதித்து விட்டேன். இவ்வரிய கொள்கையை முற்காலத்தில் முஸ்லிம்கள் ஏகதேசத்தில் கையாண்டுவந்தனர். அதனால் அவர்களுக்கு அளவுகடந்த செல்வாக்கும், முன்னேற்றமும் ஏற்பட்டன. தற்கால முஸ்லிம்கள் இவைகளில் சில கொள்கையை கைநழுவவிட்டனர். அதனால் க்ஷீணதிசை யடைந்தனர். அவர்களுக்கும் இதே யோசனையைத் தான் நான் கூறிவருகிறேன்.

நெல்லிக்குப்பம்

மௌலானா அவர்கள் இஸ்லாம் பிரசாரம் என்ற மகுடத்தின் கீழ் "இஸ்லாமியப் பிரசாரம் மானிடக் கடமையை நிறைவேற்றுதலேயாகும்" என்ற கருத்தை வெகு தெளிவாக விளக்கிக் கூறியதன் சாராம்சமாவது:—

அன்பர்களே! சகோதரர்களே!!

ஒரு மனிதனோ, ஒரு கூட்டத்தினரோ, ஒரு சிலரோ, ஜலத்தில் மூழ்கி அவஸ்தைப்படுவதையோ, நெருப்பிலகப்பட்டுத் தவிப்பதையோ கண்ணால் காணும் மானிடன் அவர்கள் அகப்பட்டுள்ள அபாய சங்கடங்களை விட்டும் அவர்களைக் காப்பாற்றி கரை சேர்க்க முயற்சிக்க வேண்டுவது மானிடனின் கடமையாகுமென்பதை நீங்கள் நன்குணர்வீர்கள். அத்தன்மை போன்றே ஏனைய மானிடர்களைப்போன்று எவ்வித ஏற்றத்தாழ்வு வித்தியாசமுமில்லாமல் ஆண்டவனால் படைக்கப்பட்ட மானிடர்களாகிய ஒரு கூட்டத்தினரை ஏனைய மானிட கூட்டத்தினர் தீண்டாதார்கள், தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கருதி, அவர்களை மானிட சுதந்தரத்தையும், பாத்தியதையையும் அனுபவிக்க விடாமல் கேவலம் மிருகங்களிலும் தாழ்மையாகப் பாவித்துக்கொடுமையாக நடத்துவதால் அத்தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அநீதிக்குள்ளாகி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பவர்களையுயர்த்தி மானிடப் பாத்தியதைகளையும், உரிமைகளையும் ஏனைய வகுப்பினரைப் போன்றுச் சமமாக அனுபவிக்கும்படியும், சமத்துவமாக வாழும்படியும் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தைக்கொண்டே முஸ்லிம்கள் தீண்டாதார்களை இஸ்லாத்திற் சேர்க்க முயற்சிக்கின்றார்கள். இதில் எவ்வித அரசியல் நோக்கமோ, சூழ்ச்

சியோ, தந்திரமோ முஸ்லிம்கட்குக் கிடையாது.

அநேக நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள் இந்தியாவில் ஹிந்துக்களோடு கூடிக்குலாவி ஒருவருக்கொருவர் நட்புக்கொண்டு வாழ்ந்து வருவதன் பயனாக, இஸ்லாம் மார்க்கத்தில் எவ்வித சம்பந்தமுமில்லாத ஹிந்துக்களின் சடங்கு சாங்கியம் முதலிய சில பழக்க வழக்கங்கள் ஒரு சில, முஸ்லிம்களில் காணப்படுவதால், ஹிந்துக்கள் தீண்டாதார்களைக் கேவலமாக மதித்து சமத்துவமாக அவர்களோடு நடந்துகொள்ள மறுப்பதுபோன்று ஒரு சில முஸ்லிம்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின்னும் தீண்டாதார்களாயிருந்ததை யுத்தேசித்து அவர்களை சமத்துவமாக நடத்தப் பின்வாங்குகின்றனர். அவ்வாறு செய்வது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கே பெரும் தீங்கிழைப்பதாகும். எவரேனும் நவ் முஸ்லிம்கள் ஜாமிஆ மஸ்ஜிதுகளில் மற்ற முஸ்லிம்களைப்போல் சமத்துவமாக வந்து தொழுவதைத் தடை செய்வார்களாயின், அவ்வாறு தடை செய்பவர்கள் எவ்வித பரம்பரை முஸ்லிமாயினும் சரியே பேஷ் இமாமாயிருந்தாலும் சரியே மஸ்ஜித் மூத்தவல்லியாக யிருந்தாலும் சரியே அவர்கள் பெருங் குற்றவாளியாயும் ஆண்டவனால் லஅனத்துச் செய்யப்பட்டவர்களாயும் நாசத்திற்குப் பாத்தியப்பட்டவர்களாயுமாவார்கள் என்று ஆண்டவன் கட்டளையிட்டிருக்கிறான். ஆகையால் நவ் முஸ்லிம்கள் என்ன ஜாதியினராயினும் சரியே அவர்களை மார்க்க சமூக சகல விஷயத்திலும் நம்மோடு சமத்துவமாகப் பாவித்து நடத்தவேண்டும். அவ்வாறு நடத்துபவர்களே ஆண்டவனின் சிநேகிதர்களாவார்கள்.

எனக் குறிப்பிட்டு எல்லோரும் இவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டுமாகக் கோரித் தங்களது பிரசங்கத்தை முடித்தார்கள்.

அய்யம்பேட்டை

ஹிஸ் ஹோலினஸ் மௌலானா அவர்கள் அரபியிலும் ஆங்கிலத்திலும் அரைமணி நேரம் அழகிய சொற்பெருக்காற்றியபின் உருது பாஷையில் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

தாங்கள் என்னை இவ்வளவு குதூகலமாக வரவேற்று உபசரித்ததற்காக நான் மிகவும் நன்றியறிதலுடையவனாக இருக்கிறேன். அதற்குக் கைமாறாக நான் கடவுளைப் பிரார்த்தித்து தங்களுக்குத் துணைபுரிய வேண்டுவதேயாகும். என்னைப்பற்றி உபசாரப் பத்திரங்களில் அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. அவைகளை நான் ஒன்றும் செய்யவில்லை. நமது முன்னோர்கள் செய்தவைகளையே நானும் செய்துவருகிறேன். நீங்கள் என் வழிகளைப் பின்தொடர்ந்து நமது முன்னோர்களைப் பின்பற்றுங்கள்!

முஸ்லிம் அல்லாதாரில் பலர் என்னைப்பற்றி தவறான அபிப்பிராயம் கொண்டு, நான் இஸ்லாம் மதப் பிரசாரம் செய்து எல்லோரையும் முஸ்லிம்களாகச் செய்துவிடப்போவதாய் விஷமப் பிரசாரம் செய்துவருகின்றனர். அது தவறு. உலகத்திலுள்ள சகல மத ஜாதியாருக்கும் தொண்டாற்றுவதே என் கடமையெனக் கருதுகிறேன். எல்லா வகுப்பார்களும் கடவுளின் குடும்பம். கருத்தாவது, அவனுடைய சிருஷ்டியாகும். ஆகையால் பிராமணரோ அல்லது ஹரிஜனனோ அல்லது ஆப்பிரிக்கா தேசத்து நீக்ரோவோ ஆனாலும் அவருக்கு ஒரு சங்கடம் நேர்ந்தால் அதை என்னுடையதாக நினைத்து வருந்தி உதவி செய்வேன். அது என் கடமை.

ஆகையால், நான் மனித வர்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கே ஜப்பான் செல்லுகிறேன். அங்கே எனது கடமைகளைச் செய்வேன். உலகம் தற்போது யுத்தத்தை விரும்பவில்லை. நான் ஜப்பானியர்களைச் சண்டையிட வேண்டாமென்றும், சமாதானத்துடன் யுத்தத்தை நிறுத்தும்படியும் உபதேசம் செய்யப்போகிறேன். ஜப்பானுக்கு நான் கூறும் செய்தி அனாவசியமாக அடிக்கடி சண்டையிட்டு பலத்தைக் குறைத்துக்கொள்ளாது, சமாதானத்துடன் இருங்கள் என்று போதிப்பதே.

இந்நாளில் கல்வியின் மேன்மையை யுணராது, சினிமாக்களின் அழகையும், ஸ்திரீகளின் அழகையும் சிலாகித்துப் புகழ்ந்துவருகிறார்கள். கல்வியை அலட்சியம் செய்கின்றனர். தென்னாப்பிரிக்காவிலுள்ளவர்கள் இந்தியர்களை கல்வியறிவில்லாதவர்கள் எனக் கேவலமாகப் பேசுகின்றனர். வர்ணத்தில் மாத்திரம் சிறந்துள்ள அதாவது அழகு பொருந்திய அவர்கள் சென்னையில் எத்தனை பட்டதாரிகள் இருக்கின்றனரென்பதை தெரிந்துகொண்டால் ஏளனம் செய்யமாட்டார்கள். அவர்களது அழகு, பெருமையைதரக்கூடியதல்ல. ஒரு மனிதனை அவனுடைய அழகைக்கொண்டு மதிக்காமல் கல்வியினால்தான் மதிக்கவேண்டும். அழகுடனிருந்த ஹஸரத் யூஸுப் (அலை.) இராமர்முதலியவர்கள்

மிக்கசிரமப்பட்டனர். ஆனால் கல்வியினால் அச் சிரமத்தை விட்டும் நீங்கினர். எல்லோருக்கும் உயிர்நிலை போன்றவஸ்து கல்வியாகும். வெள் ளையர்கள் நம்மை ஆளுவது அவர்களுடைய பலத்தால் அல்ல, ஆனால் கல்வியறிவின் நுட் பத்தால்தான். 1000 இந்தியர்களுடன் யுத்தம் செய்யச்சொன்னால் 10000 வெள்ளையர்கள்கூட ஒன்றும் செய்யமுடியாது. இதை நான் ஐரோப் பாவிலேயே சொல்லி இருக்கிறேன். நமது தேசத்தார் கல்வியைத் தேடாது செல்வத்தைத் தேடுகின்றனர். கல்வி இல்லாத எந்த பணக் காரனும் கடைசியில் க்ஷீண கதியடைய நேரி டும். இந்த அய்யம்பேட்டை முஸ்லிம்கள் கல் வியை அசட்டை செய்துவருவதாகக் கேள்வி யுற்று மிகவும் வருந்துகிறேன். 20 ஆண்டு களுக்குமுன் மிக மிகக் கேவலமாகக் கருதப் பட்ட ஜப்பான் தேசத்தின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் உலகம் தற்போது நடுங்குகிறது. அவர்கள் தங்கள் கல்வியறிவினால் இயற்கை வஸ்துக்களைப்போல் செயற்கையில் செய்து காட்டுகின்றனர். உலகமெல்லாம் கல்வியின் சக்தியினால்தான் ஆளப்படுகிறது. இந்தியர்கள் கல்வி கற்பதன் மூலம் அடிமைத் தொழில் புரிய வேண்டுமென்று நினைக்கின்றனர். கல்வி யைக் கற்று அடிமைத்தொழில் புரிவது கேவல மாகும். ஆங்கிலக் கல்வியைக் கற்பதன் பயன் அடிமைத்தொழிலைப் புரியும்படி ஆக்கிவிட்டது. மார்க்கக் கல்வியைக் கற்றவர்களைக் கேவலமாக மதித்துவருகின்றனர். இப்படி கேவலம் செய் யப்படுவதால் மார்க்கக் கல்வி புறக்கணிக்கப் பட்டு வருகின்றது. எதிர்காலத்தைக் கவனித்து நமது இளைஞர்களுக்கு கல்வி யளிக்காவிட்டால் அவர்கள் நம்மை துரோகிகள் என மதிப்பார் கள். உலக க்ஷீண திசைக்குக் காரணம் போதிய கல்வி இன்மையேயாகும். கற்ற ஒரு சிலர் அடி மைத்தொழிலை விரும்புவதே போன்று மார்க் கச் சேவையை விரும்புவதில்லையென்று நான் பர்னாட்ஷாவிடம் கூறியுள்ளேன். மோட்ச சாவி தங்களிடம் இருப்பதாகக் கூறி ரோமன் கத்தோலிக்க பாதிரிமார்கள் கல்வியைத் தடை செய்து வருகின்றனர்.

இதர வகுப்பார்களுக்குக் கல்வி அளிப்பது தடைசெய்யப்பட்ட ஒருகாலத்தில், முஹம்மத் நபி (ஸல்.) தோன்றி கல்வியைப்பரப்பினார். இஸ் லாம் மதம்தான் ஆண்களுக்குப், பெண்களுக் கும் சம உரிமை யளித்து கல்வியைப் புகட்டி யது. இஸ்லாம் மதத்தில் ஜாதி வித்தியாசம் இல்லை. அம்மதத்தில் உயர்வு தாழ்வின்றி எல் லோரும் சமமாகக் கருதப்படுகின்றனர். இங்கு தீண்டாமை என்பது கிடையாது. யாரும் கேவலமாகக் கருதப்படுவதில்லை. கிறிஸ்துவப் பாதிரிமார்களுக்கு பாபத்தைத் தீர்க்க இடமே இல்லை. பாபத்தை மன்னிப்பது கடவுளுடைய செயலாகும். இஸ்லாம் மதத்தில் ஆண்டவனி டம் நேராக மன்னிப்புக்கேட்க இடமிருக்கிறது. நாம் கடைசி நபியை புகழ்வதுடன், எல்லா நபிகளையும் மரியாதையுடன் புகழ வேண்டும். ஏனென்றால், அவர்கள் கடவுளால் அனுப்பப் பட்டவர்கள். குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வி யையும் பொதுக் கல்வியையும் புகட்டுங்கள்! மாணவர்கள் கல்வி கற்க இசையவில்லையானால் அது கேவலாகும். பணக்காரர்கள் இங்குள்ள மதரஸாவை ஆதரிக்கவேண்டும். அநேக பள் ளிக்கூடங்களையும் இரவு பாடசாலைகளையும் ஏற் படுத்தி கல்வியைப் பரப்புங்கள். அரபி ஆங்கி லம் இவைகளைக் கற்றுக்கொள்ளும் மாணவர் கள் அகராதியைப் பிரயோசனப் படுத்திக் கொள்ளவேண்டும் என்று கூறி முடித்தார்கள்.

கூத்தாநல்லூர்

மௌலானா அவர்கள் பேசியதன் சாராம் சம்:—

மானிடன் அல்லாஹ்வுடைய வேலையைப் பார்ப்பது போற்றத்தக்கதே யாகும். அல் லாஹுதஆலா இவனைத் தன் வேலைக்கு ஏற் படுத்தி உதவிசெய்தது அதைவிட மிகப் பெரிதாகும். நான் வெளிநாடுகளில் சென்று இஸ்லாமிய ஊழியம்செய்பவன். உங்களுடைய அன்பானது என்னை இங்கு இழுத்துக்கொண்டு வந்து சேர்த்து விட்டது. முஹப்பத்தானது ஈமானின் முக்கியாம்சத்தில் உள்ளதாகும். இதனால்தான் பெருமானார் (ஸல்.) மூமினுடைய உள்ளத்தில் அவனுடைய தகப்பன், பிள்ளை சொத்து, மற்ற சகலவற்றைக் காட்டினும் நபி பெருமான் (ஸல்.) அவர்களுடைய அன்பு அதிக மாகயில்லாதவரை அவன் பக்கா மூமினாக ஆக மாட்டான்" என்று அருள்செய்தார்கள்.

இப்பிரபஞ்சம் எதற்காக படைக்கப்பட்டது என்னும் விஷயத்தில் உலகம் ஹைறானாக (திகைத்து) யிருக்கிறது. சாஸ்திரங்கள் இதனை தீவிரமாக விளக்கவில்லை. ஜர்தஷ்த்தியர், உல குக்கு ஒரு ஆதியுண்டு என்றுமட்டும் கூறு கின்றனர். பைபிளிலும்கூட இவ்விஷயம் நல்ல விதமாய் விளக்கமாக இல்லை.

எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் இதனைத் துலக்குகின்றூர்கள். ஹதீதே குத்ஸியில் அதாவது அல்லாஹ் தன்னைப்பற்றி நாயகம் அவர்கள் வாயால் அறிவிக்கும் ஹதீதில் கூறியிருப்பதாவது:—

"நான் (அல்லாஹ்) மறைந்த போக்கிஷமாக இருந்தேன். (அதுபோழ்து எந்த வஸ்துவும் இருக்கவில்லை) நான் அறியப்படுவதற்கு விரும்பினேன். அதனுல் சிருஷ்டிகளைப் படைத்தேன்."

கமாலையுடைய ஒவ்வொருவனும் தனது வித்தையை வெளிக் காட்டவே பிரியப்படுகிறுன். அதுபோல் சகல கமாலையும் சகல நன்மைகளையும் உடைத்தாய ஆதி ரஹ்மான் தன் கமாலியத்தைப் பலரும் அறிய வேண்டும் என்று நினைக்கிறுன். அதுபோது எந்தவஸ்துவும் இருக்கவில்லை. எனவே தன்னை அறிவதற்காக சிருஷ்டிகளைப் படைத்தான்.

இப்பிரபஞ்சம் அல்லாஹ்வுடைய கமால் வெளியாகும் ஸ்தலமாகயிருக்கிறது. மரங்களின் ஒவ்வொரு இலைகளும், அல்லாஹ்வின் மஃரிபத் என்னும் நுண்ணறிவைத் தொடக்கூடிய ஏடுகளாகயிருக்கின்றது. இவைகளைக் கொண்டு இதனைப் படைத்த ரஹ்மானைத் தெரிந்து கொள்கின்றேரம். ஓர் அழகிய கட்டடத்தைப் பார்க்கின்றேரம். அதனுல் அதைக் கட்டி வைத்த கொத்தன், தச்சன் முதலானேரின் கமால் வெளியாகின்றது. மானிடனில் சகல கமாலும் அமைக்கப்பட்டிருக்கிறது. வானலோகத்தில் உண்டான நக்ஷத்திரத்திற்குப் பகரமாய், இரண்டு கண்களும் ஜொலிக்கின்றன; ஆறுகள்போன்று இவனில் இரத்தங்கள் ஓடுகின்றன; இவைபோன்று எல்லாக் கமால்களும் மானிடனில் அமையப்பெற்றிருக்கின்றன. எனவே அல்லாஹ்வின் சகல கமால்களும் இன்ஸானில் வெளியாகின்றது.

எனது மௌலா ஸர்காரேமதீனு (ஸல்.) அவர்கள் பரிபூரண இன்ஸானுக யிருக்கின்றூர்கள். இதனுல் அவர்கள் "மல்ஹரே ஆதம்" என்று வர்ணிக்கப்படுகிறது. அதாவது, றஹ்மானின் சகல கமால்களும் அவர்களில் வெளியாயிருக்கின்றது.

இதனுல்தான் நபிகள் பிரான் (ஸல்.) பின் வருமாறு அருள் செய்திருக்கின்றூர்கள்:—

"நான் அல்லாஹ்வின் ஒளியில் நின்றுமுள்ளவன். மற்ற வஸ்துக்கள் யாவும் என்னுடைய ஒளியில் நின்றுமுள்ளதா யிருக்கும்"

கருத்தாவது, நபிகள்கோமான் (ஸல்.) அவர்களுடைய ஒளி அல்லாஹ்வின் ஏவல்கொண்டு ஆரம்பத்தில் இலங்கிற்று. மற்ற வஸ்துக்கள் யாவும் பெருமானுரின் ஒளியைக் கொண்டு இலங்கிற்று என்பதாகும்.

பிரபஞ்சத்தைப் படைப்பதற்கு மூலகாரணம் பெருமானுர் (ஸல்) அவர்களாகயிருக்கும். இதனுல்தான் இறுதி நபியான நபிகள்பிரான் அவர்களை ஒப்புக்கொள்ளும்படி முந்திய நபிமார்கள் எல்லோரிடத்திலும் அறுதிமானம் வாங்கப்பட்டதாக திருக்குர்ஆனில் அருளப்பட்டிருக்கிறது. எனவே நம்பிரான் அவர்கள் "நபிய்யுல் அன்பியா" நபிமார்களுக்கெல்லாம் ஸர்தாராக இருக்கின்றூர்கள்.

இதனுல்தான், "மூஸா (அலை) ஹயாத்தாகயிருந்தாலும், என்னைப் பின்பற்றுமலிருக்க முடியாது" என்று நபிகள்நாயகம் (ஸல்.) அருள் செய்தார்கள்.

இங்கு இன்னுமொரு விஷயத்தையும் ஞாபகத்தில் வையுங்கள்! இந்த ஹதீதில் மூஸா என்பதுமட்டும்தான் இருக்கின்றது. இதில் காதியானிகள் திருட்டுத்தனமாய் ஈஸாவென்னும் பதத்தையும் திணித்து, இதுபோழ்து ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹயாத்தாகயில்லை என்பதற்கு ஆதாரம்கூறித் திரிகின்றனர். இம்மாதிரி பொய் வாக்கியங்களைக் கூறித் திரிவது அவர்களின் சர்வசாதாரண குணமாகயிருந்து வருகின்றது.

அசல் விஷயத்தில் மீளுவோம். எம்பெருமானுர் அவர்களின் அழகைக் குறித்து நாமே புகழ்வது பிரமாதமானதல்ல. பகைவர்கள் போற்றுவதே மிக முக்கியமானதாகும். கிறிஸ்தவப் பாதிரிகள், "முஹம்மது நபி (ஸல்.) மிகவும் அழகு சௌந்தரியம் வாய்ந்தவர்களாகயிருந்தார்கள்; அதனுல் ஆரம்பத்தில் பெண்கள் அவருடைய பிரசாரத்தில் சேர்ந்தார்கள், அவர்களின் தூண்டுதலினுல் ஆண்கள் சேர்ந்தார்கள்" என்று கூறுகின்றனர். இக்கூற்றில் அவர்கள் உண்மையற்றவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. என்றுலும் அவர்கள் நபிபெருமானின் அழகு சௌந்தரியத்தை ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்பது நன்கு புலனுகின்றதன்றே?

உலகில் அழகை இரண்டுபாகம் செய்து ஒரு பாகத்தை யூசுப் (அலை.) அவர்களுக்கும் மற்ற பாதியை எல்லா சிருஷ்டிகளுக்கும் கொடுக்கப்

பட்டதாகக் கூறப்படுகிறது. அஃது யாருடைய அழகு என்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இமாம் "கஸ்ஸாலி" (றஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். "இந்த அழகைக் கொண்டு கருத்து அல்லாஹ்வுடைய அழகு என்று கூறமுடியாது. ஏனெனின், அதில் பாதி பிளவு ஏற்படமுடியாது. இதில் நபிகள் நாயகம் அவர்களுடைய அழகுதான் கருத்தாகும்."

அந்த நாயகம் அவர்கள் உங்கள் மீது அளவு கடந்த கருணையுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களைப் பொருத்து உங்களுள்ளத்தில் என்ன வைத்திருக்கின்றீர்கள் என்பதை கவனியுங்கள்! பெருமானார் (ஸல்.) அவர்களை மக்கத்துக் காபிர்கள் துன்புறுத்தினார்கள். தொழுகும் போது தலையில் ஒட்டகை சாணியைப் போட்டார்கள்; தலையில் மண்ணைவாரிப்போட்டார்கள்; பெருமானார் ஒன்றுக்கும் "பத்துஆ" (சாபம்) செய்யவில்லை. அவர்களுக்கு நேர்வழி காட்டும்படி துஆசெய்தார்கள். ஒருநாள் இராப் பொழுதின் தொழுகையில் அடியில் காணும் ஆயத்தை ஓதினார்கள்.

"அவர்களை (ஜனங்களை) வேதனை செய்வாயானால் அவர்கள் உன்னுடைய அடியார்களாக இருக்கிறார்கள். அவர்களைப் பொருத்தருள்வாயானால் நிச்சயமாக நீ சீரும் சிறப்பும் உடையவனா யிருக்கிறாய்" (அல்குர்ஆன்)

ஸஜ்தாவில் இத்திரு வசனங்களை ஓதி ஜனங்களுக்காக மன்றாடினார்கள். உடனே ஜிப்ரயீல் (அலை,) வஹீ கொண்டுவந்திறங்கினார்கள்.

"(ஏ நபியே) அவர்களுக்கு மத்தியில் நீர் இருக்கும் வரை அவர்களை அல்லாஹ் வேதனை செய்பவனாயில்லை."

இவ்வாறு உம்மத்துக்கள் மீது அளவுகடந்த கருணைக் கடலான நபி அவர்களுக்கு அல்லும் பகலும் அநவரதமும் ஸலவாத்தும், சலாமும் சமர்ப்பியுங்கள்.

இப்பிரபஞ்சம், இறைவனை அறியும் கண்ணாடியாக யிருக்கிறது. ஒவ்வொரு வஸ்துவும் அல்லாஹ் ஒருவனென்று சாட்சியம் கூறா நிற்கின்றது. பெண் ஒருத்தி தன் கையை கண்ணாடியில் காட்டினாள். அதைப்பார்த்து ஒரு மனிதன் காதல் கொண்டான். அவள் தன்னையே காட்டுவதாக அழைத்தாள். இந்த பைத்தியக்கார காதலன் அவள் பக்கல் திரும்பினானில்லை. உங்களுக்கு உவமானங்கள் கொடுக்கிறேன். அல்லாஹ்வின் விஷயத்தில் நீங்கள் ஜாக்கிரதையாக விளங்கவேண்டும். அவன் ஒப்புவமையை விட்டுந் துய்யவன்.

உலகம் அல்லாஹ்வை அறியும் கண்ணாடியாக யிருக்கிறதென்றோம். ஒவ்வொரு வஸ்துவிலும் சிற்சில கமால்கள் தோன்றுகின்றன. அல்லாஹ் தன்னையே காட்டுவதாக அழைக்கின்றான். மானிடர் முகம் திருப்பிக்கொள்கின்றனர். அதாவது நபி பெருமான் அறிவிக்கின்றார்கள்:—

"உங்கள் றப்பை நீங்கள் பார்க்கிறதுபோல் வணங்குங்கள். அவனைப்பார்க்க உங்களால் முடியவில்லையானால், அவன் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் உணருங்கள்." அல்லாஹ்வை அறிய ஆசிப்பவர்கள் இந்த "இக்லாஸ்" என்னும் ஞானத்தை உணர்ந்து வணங்கவேண்டும். அதிலும் தொழுகைதான் முக்கியமான வழி. அதைத்தான் பெருமானார் இந்த ஹதீதில் வற்புறுத்துகின்றார்கள். தொழுகை மூலமாகத் தான் அகக்கண் திறக்கப்பட வேண்டும். விஷயம் இவ்வாறிருக்க, ஜாஹிலான ஸூபிகள் "நீயும் ஆண்டவன்; நானும் ஆண்டவன்; பிரபஞ்சமே ஆண்டவனாகயிருக்க யார் யாரை வணங்குவது" என்று கூறுகின்றனர். ஈதெல்லாம் இவர்களின் மௌடீகமேயன்றி வேறல்ல. ஆரம்பத்தில் ஓதிய திருவசனத்தின் கருத்தை உணருங்கள்.

"(ஏ நபியே) உன் றப்பின்மீது ஆணையாக அவர்களுக்கிடையில் (மூமின்களுக்கிடையில்) தகராறான விஷயங்களில் உம்மை மத்தியஸ்தராக ஏற்படுத்திக் கொள்ளாதவரை அவர்கள் ஈமான்கொண்டவர்களாக ஆகமாட்டார்கள். பின்னர் நீர் செய்யும் தீர்ப்பில் அவர்களுக்கு எவ்விதமான கிலேசமு மிருக்கக் கூடாது. (அல் குர்ஆன்.)

முஸ்லிம்கள், சந்தேகப்பட்டவோ, தகராறுபட்டவோ விஷயங்களில் நபிபெருமானின் அறிவிப்புகளை ஆராய்ந்து அதன்படியே ஒழுக வேண்டும். எல்லா விஷயங்களிலும் நபி பெருமானாரைப் பின்பற்றுவதுதான் சரியான உறைக்கல்லாகும். இவைகளை நன்குணராத ஸூபிகள் "தஸவ்வுப்" வேறு, குர்ஆன் ஹதீதுகளின் கருத்துக்கள் வேறு" என பிரஸ்தாபிக்கின்றனர். இதுவும் அவர்களின் அறியாமையேயாகும்.

ஹஜ்ரத் அலீறலியல்லாஹு அன்ஹு அவர்கள், "எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இல்மின் அளவுக்கு 'ஸூரயே பாத்திஹா'வின் விரித்துரை எழுதத் துணிவேணுகில் 100-ஒட்டகங்கள் சுமக்கும்படியான நிறையுள்ள கித்தாபுகள் எழுதி விடுவேன்." என்று கூறியுள்ளார்கள்.

திருக்குர்ஆன் அளவு கடந்த இரகசியங்கள் அடங்கிய பொக்கிஷம் என்பதை உணருங்கள்! அன்பு எனும் முஹப்பத்துக்கு ஓர் உவமானம் கூறுகிறேன்: ஓர் காந்தத்தை நடுமத்தியில் வைத்து விடுங்கள். அதை சுற்றிலும் இரும்புத் துண்டுகளை வையுங்கள். இந்த இரும்புத் துண்டுகளை காந்தம் இழுத்துக்கொண்டு நிற்கின்றது. இதுபோல இப்பிரபஞ்சத்தின் ஒவ்வொரு வஸ்துக்களும் அல்லாஹ்வின் பக்கல் முகம்திருப்பி நிற்கின்றது. காந்தம் இரும்புத் துண்டுகளை இழுப்பதுபோல் வாஜிபுல் உஜூதும் (அல்லாஹ்) மானிட கோடிகளை தன்பக்கல் இழுக்கின்றது. சிற்சில தடைகளானது மானிடனை பரவசப்படுத்துவதைத் தடுத்து விடுகின்றது. அத்தடைகளை இதோ விபரிக்கின்றேன்.

மௌலானு ஜலாலுத்தீன் ரூமி அவர்கள் கூறியிருப்பதாவது:—

"மானிடனின் ஹிருதயம் துருவற்ற பரிசுத்த கண்ணுடியைப் போலிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் அந்த நூருனியைப் பெற்றுக்கொள்வான். அதாவது, ஹிருதயம் களங்கமற்றதாக ஆய்விடின், அல்லாஹ்வின்ஒளியை எவ்வித ஒப்புவமையும், மட்டுத்திட்டமுமில்லாமல் பெற்றுக்கொள்வான் என்பதாகும். மானிடன் உச்சஸ்தானம் அடைவதை தடுக்கக்கூடியவைகளில் அவனது மனே இச்சைதான் பிரதானமானதாகும். இதனல்தான் பாயஜீதுல் புஸ்த்தாமீ (றஹ்.) அவர்கள் "என்னுடைய நப்ஸே! மனேஇச்சையை விட்டுவிடு அப்பொழுதுதான் உச்சஸ்தானத்தை யடைவாய்" எனக் கூறியிருக்கிருர்கள். அல்லாஹ்தஆலா திருக்குர்ஆனில் அருள் செய்திருக்கிறுன்.

தன் மனே இச்சையை தன்னுடைய மஃபூதாக (ஆண்டவனுக) ஆக்கிக்கொண்டவர்களைப் பார்த்திருக்கிறீர ?

(ஹதீத்) உலகில் வணங்கப்படும் கடவுள்களில் மனிதனுடைய மனே இச்சை மிக மிகப் பெரிதானதாக யிருக்கியது."

எனவே, மனிதன் மனே இச்சையைத் துறந்து அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்காதவரை அவன் அல்லாஹ்வின் மஅரிபத்தென்னும் ஒளியைப் பெற்றுக் கொள்ளமாட்டான்.

சில ஜாஹில் சூபிகள் "அல்லாஹ் தஆலாவின் உஜூது இன்சானின் உஜூதுடன் சேர்ந்து விட்டது" என்கின்றனர். அல்லாஹ்வின் உள்ளமை மட்டுத் திட்டத்தில் வரக்கூடியதன்று. ஜாஹில் ஸூபிகள் கூறுகிறபடி அல்லாஹ்வின் உஜூது இன்ஸானுடன் சேர்ந்துவிட்டால் அது மட்டுப்பட்டுப் போய்விடுமன்றே? ஈதெல்லாம் சன்மார்க்கத்திற்கு விரோதமான விஷயங்களாகும். திருக்குர்ஆனில், "நாம் (அல்லாஹ்) உங்களின் கழுத்து நரம்பைவிட முடுகியிருக்கிறேம்" எனக் கூறியிருக்கின்றுன். இதன் கருத்து "குர்பிய்யத்"எனும் சாமீப, சாயுச்சியமாகும்.

சூரியன் தன் ஒளியை வீசுகிறது, அதைக் கொண்டு உலகம் இலங்குகின்றது. சூரியன் வேறு, ஒளி வேறு என்பது பிரத்தியக்ஷம். இப்பிரபஞ்சம் அல்லாஹ்வுடைய "மல்ஹர்" அதாலது அவனுடைய ஹிக்மத்தும், குத்ரத்தும் வெளியாகும் ஸ்தலமாயிருக்கிறது. இந்நிலைமையில் அல்லாஹ்வையும், மல்ஹரையும் ஒன்றென்று கூறுவது மடத்தனமேயன்றி வேறென்ன?

நஸாராக்கள் ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களையும் அல்லாஹ்வுடன் மஃபூதாகச்சேர்த்து விட்டார்கள். இதனல் அவர்கள் வழிகெட்டுப் போய்விட்டனர். ஆகவே, அவர்களின் கொள்கையைப் பின்பற்ற வேண்டாமென்று 'பூஸ்ரி' இமாம் கூறியிருக்கின்றுர்கள்.

முஸ்லிம்கள் ஓதும் கலிமாவில் "அப்துஹூ வறசூலுஹூ" என்று ஓதுகின்றனர். நபிகள் நாயகத்தை அல்லாஹ்வின் அடிமை, தூதர் என்று நிர்ணயிக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறேம். மேலும் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களுக்கு ஏற்பட்ட மர்த்தபா—பதவிகளில் மிஅராஜானது மிக மிக மேலானதாகும். அதுதான் உச்சஸ்தானமுமாகும். அந்த ஸ்தானத்தைக் குறித்து அறிவிக்கும் ஆயத்தில், அந்த ஸ்தானம், இரு வில்லின் வளைவுக்கு மத்தியில் எவ்வளவு முடுகுதலிருக்கின்றதோ அதைவிட முடுகுதலாக யிருந்ததென அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இச்சமயத்தில் 'நம் அடியாரளவில் வஹி அறிவித்தோம்' என அல்லாஹ் பகர்ந்துள்ளான். இவ்வளவு உச்சஸ்தானத்தை அடைந்த நம் பெருமானுரை

அடிமை என்று வர்ணித்துள்ளான். அடிமைக்கும், எஜமானனுக்கும் அளவுகடந்த வித்தியாசம் உண்டென்பதை உணரவேண்டும். ஜாஹில் சூபிகள் இவைகளை நன்குணராமல் ஜனங்களை வழிகெடுக்கின்றனர்.

பொதுவாகக் கூறுமிடத்து, மானிடன் நபி பெருமானாரைப் பின்பற்றி தன் எஜமானனை வணங்கி வரவேண்டும். அதன் பிறகுதான் அவன் நல்ல அந்தஸ்தை அடைகிறான். நம்முடைய நிலைமைகளை சீர்தூக்கிப் பாருங்கள்! வைகறைப் பொழுதில் மனிதன் தூங்குகிறான்; அதுபொழ்து முஅத்தின் (அஸ்ஸலாத்து கைரும் மினந்நவ்ம்) தூக்கத்தைவிட தொழுவது நன்மை என்று தொழுகைக்கு அழைக்கிறார். இவன் தூங்குவானாகில் இவன் அல்லாஹ் றசூலுக்கு வழிப்பட்டானா தன் இச்சைக்கு வழிப்பட்டானா? கூறுங்கள்.

நப்ஸுடைய கெட்ட குணங்களை நீக்கி அல்லாஹ்வின் அருள் பெறுவான்வேண்டி நோன்பு நோற்கும்படி அல்லாஹ் அருள் செய்கின்றான். அதற்கு மாற்றமாய் மனோ இச்சைக்கு வழிப்பட்டு அந்த நோன்பை நோற்காமல் இவன் விடுகிறான்.

ஏழைகளை மேன்மைப்படுத்துவான் வேண்டியும் எல்லோருக்கும் சமத்துவம் அளிப்பான் வேண்டியும் சீமான்கள் ஏழைகளுக்கு ஜக்காத் விகிதத்தை அளிக்கும்படி அல்லாஹ் உத்திரவிடுகிறான். இவனுடைய நப்ஸாகிறது, அரும்பாடுபட்டுத்தேடிய பணத்தை வந்தவன்,போனவனுக்கெல்லாம் இலவசமாக கொடுப்பதா? என்று தடுக்கின்றது. அதற்கு வழிப்பட்டு ஜக்காத் கொடுக்காமல் பாவியாகிவிடுகிறான். அல்லாஹ்வின்மீது இவனுக்கு முஹப்பத்துஇருக்குமாயின் அவன் உத்தரவுக்கு மாறு செய்ய மாட்டான். "பர்வானஹ்" வென்னும் அந்துப் பூச்சிகள் விளக்கின்மீது ஏற்பட்ட முஹப்பத்தின் காரணத்தால் அதில் விழுந்து மாண்டு போகின்றன.

ஹஜ்ஜுக்கு உத்தரவிடப்படுகிறது. நல்லடியார்கள் பரிசுத்த பூமியை நோக்கிப் புறப்பட்டு விடுகின்றனர். முதன்முதலாக கட்டப்பட்ட தேவாலயத்தை சுற்றி சுற்றி "தவாப்" செய்கின்றனர். அல்லாஹ் அளவில் ஆஷிக்கானவர்கள் எவ்வாறு தன்னலமற்று பயித்தியம் பிடித்தவர்கள்போல் காணப்படுகின்றனரோ அஃதே தோற்றத்தில் அரபாத் மைதானத்தில் காணப்படுகின்றனர். நப்ஸுக்கு வழிப்பட்டவர்கள் கஷ்டத்தையும் பணச் செலவையும் கருதி ஹஜ்ஜை விட்டுவிடுகின்றனர். "மனோ இச்சைக்கு வழிபடுவதுதான் சகல கெடுதல்களுக்கும் காரணம்" என்பதை உணர்வீர்களாக. (ஹதீது) எவனுக்கு சீமான்தனம் ஏற்பட்டு அவன் ஹஜ்ஜுக்கடமையை நிறைவேற்றவில்லையோ அவன் யஹூதி நஸாராவாகமரிப்பான்" என பெருமான் (ஸல்) அவர்கள் அருள்செய்திருக்கின்றார்கள்.

இங்கு அல்லாஹ்வுடைய சட்டதிட்டங்களையும், நப்ஸுடைய சட்டங்களையும் ஒத்திட்டு பார்க்கப்படுகிறது. உணர்ச்சி பெருவீர்களாக!

அல்லாஹ்தஆலா விபசாரத்தை விலக்குகிறான். விபசாரம் செய்பவனைவிட்டு ஈமான் அகன்றுவிடுகிறது இருகைவிரல்களும் கோர்த்திருந்து பிரிவதுபோல் என்று நம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அருளியிருக்கிறார்கள். விஷயம் இவ்வாறிருக்க, மனிதனது நப்ஸின் இச்சையானது விபசாரத்தைத் தூண்டுகிறது, அவன் எதற்கு வழிப்படுகிறான் என்பதை நோட்டமிடவேண்டும்.

வார்த்தை பேசுவதின் ஒழுங்கை கவனியுங்கள்! "பொய் சொல்பவர்களின் மீது அல்லாஹ்வின் முனிவு உண்டாகும்" என அல்லாஹ் கூறுகிறான். நமக்கோவென்றால், பொய் சொல்லாமல் வியாபாரமே நடக்காது, வக்கீல் தொழிலும் நடக்காது என்கின்றோம். இதில் யாருக்கு வழிப்பட்டு விட்டோம், நோட்டமிடுங்கள்!

தற்கால முஸ்லிம்களின் நிலை எப்படியிருக்கிறதெனின், இஸ்லாமிய சகோதரத்துவத்தையே ஒரு பக்கல் ஒதுக்கிவிட்டு அண்ணன், தம்பி, மாமன், மச்சான் இவர்களுக்கிடையும் சண்டைகளை கிளப்புகின்றனர். நான் பெரியவன் என்னும் அகங்காரத்தை உபய வாதிகளும் உபயோகிக்கின்றனர். அல்லாஹ்த ஆலா கூறுகின்றான்: "பெருமையானது என்னுடைய பரிவட்டமாயிருக்கும். வலுப்பம் என்பது என்னுடைய உடுமானமாகும். எவன் அதில் எனக்குப் போட்டிபோடுபவன்" என்பதே. அதாவது, பெருமை யடிப்பவன் அல்லாஹ்வின் உரிமையில் தலையிடுகிறான் என்பதாகும்.

இன்னுமொரு வகையாக இவ்விஷயத்தை விளக்குகிறேன். மானிடன் இரண்டு வகையான தத்துவங்களைக்கொண்டு பிணைக்கப்பட்டிருக்கிறான். 'நப்ஸே அம்மாரா'வானது அவனை

எப்பொழுதும் கெட்ட வேலைகளைச் செய்யத் தூண்டுகின்றது. மற்றொரு தத்துவம் "நப்ஸெ லவ்வாமா." இஃது எப்பொழுதும் அவனுக்கு நற்போதனை செய்கின்றது; அல்லாஹ்வின் சந்நிதானத்தையும், அவனை சந்திக்க வேண்டுமென்பதையும் ஞாபகமூட்டுகிறது. அம்மாராவுக்கு வழிப்பட்டவன் தோல்வியுற்றான், லவ்வாமா வுக்கு வழிபட்டவன் வெற்றி பெற்றான்.

பிறக்கும் பிள்ளைகள் அடங்கலும் சன்மார்க்கத்திலேயே பிறக்க வைக்கப்படுகின்றன. அவைகளின் தாய் தந்தையர்கள் தான் அவைகளை நஸாராக்களாகவும், யஹூதிகளாகவும், விக்ரஹ ஆராதனைக்காரர்களாகவும் ஆக்கிவிடுகின்றனர்" என்று நபிகணாயகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மனிதனின் ஹிருதயம் ஆதியில் பரிசுத்தமாக யிருந்து இடைகாலங்களில் கெட்டுப் போகின்றது. அந்த ஹிருதயக் கண்ணாடியைத் தீட்டி சுத்திசெய்து விடுவீர்களாயின் நிச்சயமாய் அல்லாஹ்வின் நூரை (ஒளியை)ப் பெற்றுக்கொள்வீர்கள்; சரியான மஅரிபத்தும் கிடைக்கும்.

வியாதியஸ்தன் வைத்தியரிடம் செல்கிறான். அவர் சொற்படி பத்தியத்தை அனுஷ்டித்தால் சுகமடைகிறான். இல்லையாயின் நஷ்ட மடைகிறான். எம்பெருமானார் "தபீபே அஃஜம்" எனும் பெரிய வைத்திய நிபுணராக யிருக்கிறார்கள். உம்மத்துக்கள் அவர்கள் சொற்படிக்கு நடக்க வேண்டும். அவர்கள் கூற்றுப்படியே பத்தியம் அனுஷ்டிக்கவேண்டும்.

அல்லாஹ் திருவுளமாகிறான்:—அல்லாஹ்வின்மீது உங்களுக்கு பிரீதி இருக்குமாயின், என்னை (நாயகத்தை) பின்பற்றிக்கொள்ளுங்கள். அப்படியாயின் அல்லாஹ் உங்கள்மீது அன்புவைக்கிறான். (குர்ஆன்.)

எக்காரணத்தைக் கொண்டும் நபிகள் (ஸல்.) அவர்களின் முந்தாணியை கைவிட்டுவிடாதீர்கள். நபிபெருமான் அவர்களை சகல காரியங்களிலும் பின்பற்றி நடக்காதவரை இகபர அபிவிருத்திகளை எவரும் அடைய முடியாது.

இதுதான் நல் அமல்களாகும். என்னுடைய கடைசி நஸீஹத்தும் அதுவேயாகும்.

பிறகு துஆ ஓதியபின் சபை இனிது முற்றுப் பெற்றது.

நாகூர் கௌதிய்யா சங்கம்

மௌலானா அவர்கள் பேசியதின் சாராம்சமாவது:—

கனவான்களே! உலமாக்களே!

"இந்த ஊர் மிகவும் சிறப்பு வாய்ந்த ஊராகும். பிரக்யாதி பெற்ற 'குத்பு' ஹஸரத் ஷாகுல் ஹமீது கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஜ் அவர்கள் நேர் வழிக்கு தீபம் ஏற்றிய இடமாகும். இந்த இடத்திற்கு யான் வர நேர்ந்ததைப்பற்றி மிக மிக சந்தோஷப்படுகிறேன். தாங்களெல்லீரும் இவ்வளவு ஆரவாரம் செய்வதைப் பார்த்தால் வலீ அவர்களிடத்திலும் என் சேவை ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகவே நினைக்கிறேன். முற்காலத்தில் வலிமார்களுக்கு வரவேற்பும் உபசார பத்திரமும் கிடையாது. அவர்கள் தன்னந்தனியே அல்லாஹ்வுக்காக வென்றே வெகு சிரமத்துடன் பல தேசங்களுக்கும் சென்று சன்மார்க்கத்தைப் பரவச் செய்தனர்.

"காஜாபந்தயெநவாஜ்" முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்.) அவர்கள் தங்கள் குருநாதரின் சமிக்கையால் இந்துஸ்தானம் வந்து அல்லாஹ்வுடைய கலிமாவை உயர்த்தினார்கள். அவர்களுக்கு ஆரம்பத்தில் மனிதரின் உபகாரமில்லாதுபோயினும் அல்லாஹ் அவர்களுடைய காரியத்திற்கு உதவி புரிந்ததால் அக்காரியத்தில் ஹஸ்ரத் அவர்கள் வெற்றிபெற்றார்கள். ஜாவா தேசத்திலும் மஹல்ல தீவிலும் முரோக்கோ தேசத்தைச் சேர்ந்த இரு முஸ்லிம்கள் வந்து சேருகின்றனர். தனித்தனியே பிரசாரஞ் செய்கின்றனர். அவ்விரு தேசங்களும் சிறிதுகாலத்தில் இஸ்லாம் மயமாக மாறிவிடுகிறது. எனக்கு கொடுக்கப்பட்ட அட்ரஸில் என்னைப்பற்றி அளவு கடந்து புகழ்ந்திருக்கிறீர்கள். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவைகட்கு என்னை இலக்காக அல்லாஹ் ஆக்கிவைப்பானாகவும். ஹஸ்ரத் காஜா முஈனுத்தீன் (ரஹ்.) ஓர் பாலவனத்திலிருக்கிறார்கள். காஜா உஸ்மான் அவர்கள் இஸ்லாமியப் பிரசாரம் புரியும்படி உத்திரவு செய்கிறார்கள். முதல் முதலான லாஹூர் வந்து அடி வைக்கிறார்கள். ஹஸ்ரத் தாதா கஞ்சபக்ஷ் அவர்களுடைய சன்னிதியில் 40 நாள் தங்கி இருக்கின்றார்கள். அதன் பின் அஜ்மீர் ஷரீப் வந்து சேர்ந்து ஆற்றங்கரையில் தங்கினார்கள். உளூச் செய்வதற்குக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. பின்னர் அல்லாஹ்வின் உதவி

உண்டாகின்றது. அதுபொழுது தாழ்த்தப்பட்டோரை உயர்த்தப்படல் வேண்டும் என்னும் அஸரீரி பிறக்கின்றது. அத்துறையில் இஸ்லாம் ஜ்வொலிக்கத் துவங்குகிறது. முதல் முதலாக ஒடுக்கப்பட்டவர்களுக்கு உபகாரம் புரிகின்றார்கள். அன்னோர் ஹஸ்ரத் அவர்களைப் பின்பற்றி பரிசுத்த இஸ்லாத்தில் சேருகின்றனர். இதுதான் அவர்களின் வேலைத்திட்டமாக இருந்தது.

பார்ப்பனர் தீண்டாதாரை ஒடுக்கப் பார்க்கின்றனர்; இஸ்லாம் அவர்களை அணைத்துக் கொள்ளுகிறது. இஸ்லாத்தின் விரோதிகள் "இஸ்லாம் வாளால் பரத்தப்பட்டது" என்று கூறுகின்றனர். இது உண்மையல்லவாயினும் ஓர் புலவர் இது ஓர்வகையில் உண்மைதான் என்கின்றார். அதாவது, அந்த வாள் இரும்பு வாள் அன்று. முஹப்பத்—அன்பு என்னும் வாளாகும். இரும்பு வாள் ஒரு வஸ்த்துவை இரண்டாக ஆக்கிவிடும். அன்பு என்னும் வாளானது இரண்டு அல்லது பல வஸ்த்துக்களை ஒன்றாகச் சேர்த்துவிடும் என்றார் புலவர்.

ஓர் உதாரணம் காட்டுகின்றேன். குத்பநாகூரீ அவர்களுடைய சன்னிதானத்தைப் பாருங்கள்! அவண் இராஜர், சுதேசி விதேசி, எளியவர் வலியவர், பார்ப்பனர் பறையர், தாசன் நீசன், சிதேவி மூதேவி, ஹிந்துக்கள் கிறிஸ்தவர் யாவரும் வந்து தலைவணங்குகின்றனர். குத்பு அவர்களின் அன்பல்லவா இவ்வாறு பலரையும் ஒன்று சேர்த்துவிட்டது. சுருங்கக் கூறுமிடத்து வலிமார்களின் அன்பு உலகத்தை கிரகித்துக்கொண்டிருக்கிறது எனலாம். "தீண்டாதார்களை கரையேற்றுங்கள்" என்று புலம்பி நின்ற வலிமார்கள் இன்றைக்கு எங்கே?

நான் ஊரைவிட்டுப் புறப்பட்டு இரண்டு மாதங்களாகின்றன. வரும்போது டாக்டர் அம்பெத்கரைக்கண்டு பேசினேன். அவர் இதுபொழுது வேண்டிநிற்பது சட்டதிட்டங்களன்று. அவர் வேண்டிநிற்பது தாழ்த்தப்பட்ட தனது சமூகத்தை ஆதரித்து சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அளித்து அந்த சமூகத்தை உயர்த்தும் சமுதாயத்தை தேடிநிற்கின்றார். எனவே, அதேவழியில் நடந்து அவர்களுடன் ஒற்றுமையுங்கள். உலமாக்கள் இஸ்லாமியப் பிரசாரம் செய்யவில்லை என்று குறைகூறுவது சகஜமாக இருந்துவருகிறது ஆனால் அம்மாதிரியானபிரசாரம் இதுபொழுது அவசியமில்லை. இதுபொழுது வேண்டப்படுவதென்னவெனின், பொதுஜனங்கள் தீண்டாதாரையும் எளியோரையும் அன்புடன் வரவேற்கவேண்டும். நான் நாளன்று சிங்கை பிரயாணமாக இருக்கிறேன். எனது கடாசி உபதேசம் என்னவெனின், கௌதிய்யாவின் மெம்பர்களும் ஏனைய முஸ்லிம்களும் அன்பைக் கொண்டே பிரசாரம் புரிய வேண்டுமென்பதே யாகும்.

வியாபாரத்திற்காக அன்னியநாடு சென்று திரும்பிவந்து நாகூர் ஷரீபில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் வாலிபர்கள் தெருத் தெருவாகச்சென்று தீண்டாதாரையும் எளியோரையும் விசாரிக்க வேண்டும். நாகூர் வாலிபர்களென்ன? எல்லோரும் ஆளுக்கொரு கூடையை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று அரிசியோ, ரொட்டியோ, மாவோ காசோ எது கிடைத்தாலும் அவைகளை சேமியுங்கள்; எளியோருக்கும் தீண்டாதாருக்கும் கொடுத்து ஆதரியுங்கள்; இதனால் அவர்களிடையே தானே அன்பு பரவிவிடும். இம்மாதரி சீமான்கள் பிச்சை எடுப்பது கேவலமான விஷயமன்று. ஆனால் எளியவரென்று சொல்லிக்கொண்டு ஒரு சிலர் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இஸ்லாம் சுவால் செய்வதை வெறுக்கின்றது. மூன்று நாளைக்கு அன்னம் ஆகாரம் எதுவும் கிடைக்காவிடின் அதுபொழுது சுவால்செய்யலாம். இல்லையெனின் சுவால்ஹறாம். இவைகளையெல்லாம் பிச்சைஎடுக்க முற்பட்டிருப்பவர் கவனியாமல் நடந்துகொள்ளுவது மிகமிக கேவலமாக இருந்துவருகிறது.

இது பிரசாரம் புரியும் நேரமன்று. காரியத்தை கிரியாம்சையில் செய்து காட்டவேண்டிய காலமாகும். நான் யாரையும் முஸ்லிம் ஆகிவிடு என்று கூறுவது பழக்கமில்லை. இஸ்லாத்தின் உயர்ந்த தத்துவங்களை எடுத்துக் காண்பிப்பேன். அவர்களாகவே முன்வருவார்கள். இனி எல்லா முஸ்லிம்களும் விழித்து வேலைசெய்ய வேண்டும். இன்னமும் முஸ்லிம்கள் ஆழ்ந்த நித்திரையிலிருப்பார்களாயின் எதிர்காலம் பயங்கரமாகிவிடும்.

மதன்மோகன மாளவியாவும், காந்திஜியும் ஹரிஜனங்கள் விஷயத்தில் அனுதாபம் காட்டி வருகிறார்கள். ஆனால் இது அவர்களின் பொலிட்டிகல் விளையாட்டாகும். நம்முடைய பிரசாரம் பரிசுத்தமானதாகும். தீண்டாதார்க

ளும் அல்லாஹ்வின் படைப்பினங்களிலுள்ளவர்கள்தான்; அவர்களை தாழ்ந்த நிலையில்வைத்திருக்க அல்லாவுக்கும் பொருத்தமில்லை; அதற்காகவே நாம் பாடுபடுகிறோம்.

(இப்பிரசங்கத்தினிறுதியில் ஓர் ஹிந்து இஸ்லாத்தைத் தழுவினார்) நம்முடைய சமத்துவத்தை கிரியாம்சையில் காட்டுவோம், இவர் இஸ்லாத்தைதழுவிவிட்டார். இவர் குடித்து மீதமுள்ள தண்ணீரை இதோ நான் குடிக்கிறேன். இம்மாதிரியான சமத்துவத்தை நம்முன்னோர்கள் ஏகதேசத்தில் அனுஷ்டித்து வந்ததின் பயனை இஸ்லாம் மின்சாரம்போல் பரவிற்று. மாளவிய்யா சுத்தி செய்ய பஞ்சவ்வியம் (கோமயம், கோமூத்திரம், தயிர், நெய், பால் கலக்கப்பட்டது) புகட்டுகின்றார். இஸ்லாத்தின் சுத்தி கலிமா சொல்வதாகும். அதைக்கொண்டு அவர்களுக்கு எல்லா பாத்தியதைகளும் உண்டாய்விடுகின்றன. என்னுடைய வேலைத்திட்டத்தை குத்ப நாகூரீ அவர்கள் தர்பாரில் சமர்ப்பித்துவிட்டேன். வாலிபர்கள் அதனை நிறைவேற்றத் தயாராக இருக்கின்றார்களா? வாலிபர்கள் எல்லோரும் தய்யார், தய்யார் என்று கூறி கையை உயர்த்தினார்கள்.

ஓ வாலிபர்களே!

உங்கள்கையை என்முன்னால் நீட்டியதாக மதிக்கவேண்டாம். அல்லாஹ், ரஸூலுக்குமுன்னால் நீட்டியதாக மதித்து வேலைத்திட்டத்தில் இறங்குங்கள் என்று கூறி முடித்தார்கள்.

காரைக்கால்.

நூருல் இஸ்லாம் பிராத்திபத்துல் காதரிய்யா சங்கவிழாவில் மௌலானா அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய சொற்பெருக்கின் சாரம்ஸம் வருமாறு:—

கனவான்களே!

எனக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தீர்கள். நான் உங்களுடன் எந்த பாஷையில் வார்த்தையாடுவதென்பது ஓர் பிரச்சினையாக நிற்கிறது. ஆங்கிலத்தில் பேசினால் உங்களிலனேகர் அதனை அறியமாட்டீர்கள், எனக்கோ தமிழ்தெரியாது. நான் ஜாவா சென்றிருந்தபோது என்னுடைய உர்தூ பிரசங்கத்தை தமிழ்நாட்டாருக்காக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதனைக் கண்ட ஓர் அறபி நீங்கள் யாவரும் இந்திய மக்களாச்சுதே. உங்களுக்கு மத்தியில் பொதுப் பாஷை ஒன்று கிடையாதாவென்று வினவினார். இதற்கு வருத்தத்துடன் ஜவாப்கொடுக்க நேர்ந்தது. ஒரு தேசத்தவருக்கு பொதுபாஷையொன்று இருக்கவேண்டிய அவசியத்தை நீங்களும் மறுக்கமாட்டீர்கள். ஆலோசனை செய்யுங்கள். அப்படியான பொதுப்பாஷையாக தமிழை ஏற்படுத்தலாமென்று கருதுவீர்களாயின் எனக்கும் சொல்லிவிடுங்கள், நானும் அதைக் கற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் தமிழை தாய்பாஷையாகக் கொண்டவர்கள் கம்மியாக இருப்பதால் இந்த முடிவுக்கு வரமாட்டீர்கள். உர்தூவை பொது பாஷையாக்கலாமென்னும் முடிவுக்கு வந்தீர்களானால் உடனே அதனை எல்லோரும் கற்றுக்கொள்ள முயற்சியுங்கள். அப்போதுதான் எல்லா முஸ்லிம்களும் நேர்முகமாய் ஒருவருக்கொருவர் வார்த்தையாடலாம்; அதனால் கல்வி முன்னேற்றமடையலாம்; ஒருவரின் மனோ உணர்ச்சி எழுச்சியை மற்றவர் நேர்முகமாய் உணரலாம். இதுபோன்ற இன்னும் அனேக நன்மைகள் உண்டாகும்.

உர்தூ பாஷை ஏற்பட்ட சரித்திரத்தை விவரிக்கிறேன். ஷாஹ்ஜஹான் சக்கரவர்த்தி காலத்தில் அவருடைய சேனையில் பலபாஷைகள் புழங்கப்பட்டது. அவர் எல்லோரும் பேசும் பாஷையொன்று ஏற்படுத்தக் கருதினார். இதற்காக ஒவ்வொரு வகுப்பினின்றும் சிலரை பொருக்கி எடுத்து ஒரு இடத்தில் சேர்த்துவைத்தார். அவர்கள் தங்கள் தங்கள் பாஷையைப் பேசினர். இந்த எல்லா பாஷைகளும் ஒன்றோடொன்று கலந்து ஓரற்புத பாஷை உண்டாயிற்று. அதுதான் உர்தூபாஷையாகும். அது ஷாஹ்ஜஹான் சக்கரவர்த்தியால் உண்டாக்கப்பட்டதால்தான் "உர்தேமுஅல்லா" மேன்மைதங்கிய உர்தூ என்று வழங்கலாயிற்று. அறபிக்கற்றுக்கொள்ள முடியாதவர்கள் குறைந்தபக்ஷம் உர்தூவையேனும் கற்றுக்கொண்டால் மார்க்கத்தையும் அறிந்துகொள்ளும் பாக்கியமேற்படும். மார்க்கக்கிரந்தங்களிலனேகம் உர்தூவில் மொழிபெயர்க்கப்பட்டுப்போயுளது.

இஸ்லாம் என்பது அடிபணிதல், தலைசாய்த்தல், கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடத்தல், நப்ஸை அல்லாஹ்விடத்தில் விற்றுவிடுதல் என்பது கருத்தாகும். ஹுக்ம்-கட்டளையிடுவது அல்லாஹ்வுக்குச் சொந்தமானதாகும் என்றும், நிச்சயமாக அல்லாஹ், மூமினானவர்களிடமிருந்து அவர்களின் சரீரத்தையும், முதல்களை

டத்தில் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவர்கள் வெற்றிபெற்றவர்கள்; "அம்மாரா"வுக்கு வழிபட்டவர்கள் தோல்வியுற்றவர்களாகிருர்கள். ஆகவே, இந்த போராட்டத்தில் பூரண வெற்றி பெற்றவர்களுக்குத்தான் வலிமார்கள் என்று சொல்லப்படும்.

இன்னுமொரு உவமானம் கூறுகின்றேன்:— வியாதிஸ்தன் கண்டதையெல்லாம் தின்பதற்கு விரும்புகிருன். முக்கியமாய் அவனுடைய பத்தியத்தை முறிக்கக்கூடிய வஸ்த்துக்கள்மீது பேராசை யுண்டாகிறது. ஹக்கீம் சாஹிப் இன்னதை உண், இன்னதை உண்ணுதே என சட்டமியற்றிவிடுகிருர். இவனுடைய பேராசை "அம்மாரா"வாகும். ஹக்கீம் என்பது "லவ்வாமா"வாகும். நப்ஸலவ்வாமாவின் சொற்படி பத்தியம் காப்பானுயின் பூரண சுகமடைகிருன். இல்லையெனின் கெடுதியில் மடிந்துவிடுகிருன்.

இதில் மற்ருெரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். வியாதிஸ்தன் பத்தியம் காப்பது அவசியமாக இருப்பதுபோல் சரீரத்துக்குத் தோதுமையான ஆகாரம் கொடுத்து வளரச்செய்வது ஆவசியமேயாகும். எனவே "ரூஹானி" வியாதிஸ்தர் பாவங்கள் செய்யாமல் பத்தியம் காப்பதுபோல் ரூஹுக்கு அல்லாஹ்வுடைய "திக்று"வைக் கொண்டு உண ஊட்டி சுகஜீவியாகவும் திடசாலியாகவும் ஆக்கவேண்டும். இந்த நிலையை அடைந்தவர்கள் ரூஹானி பயில்வானுகை ஆய்விடுகின்றனர். இவர்கள்தான் அல்லாஹ்வுடைய அவ்லியாக்கள்.

இதனுல்தான் அல்லாஹ்தஆலா, "அல்லாவுடைய திக்ரை (பெயரை ஜபித்து ஞாபக மூட்டுவது)க் கொண்டு ஹிருதயங்கள் திருப்தி அடைகின்றன" எனக் கூறுகின்ருன். அதாவது, மேலே நான் கூறி வந்தவாறு மனிதன் ஆரம்ப நிலையில் அல்லாஹ்வை ஞாபகிப்பதும், அவன் கட்டளைப்படி நடப்பதும் கஷ்டமாய்த் தோன்றினும் முக்தி நிலைமை அடையும் சமயத்தில் நற்காரியங்கள் செய்வது அவர்களுக்கு சந்தோஷமாகவும் இன்பமாகவும் தோன்றுகிறது. இந்த நிலைமையை யடைந்த நப்ஸுக்கு நப்ஸுல் 'முத்மயின்னு' — சாந்தியடைந்த நப்ஸு என்றுபெயர்.

இந்த நிலைமையைப்பற்றி அல்லாஹ்தஆலா, "ஏ! திருப்தியடைந்த நப்ஸே! நீ உன்னுடைய ரக்ஷகனளவில் அவனுடைய பொருத்தத்தையும் பெற்று அவனுடைய நன்கொடையைக் கொண்டு நீயும் பொருந்தி மீளுவாயாக" என அருள் செய்தான். திருப்திபெறும் நிலைமைதான் மனிதன் அடையும் உச்சஸ்தானமாகும். நான் ஆரம்பத்தில் ஓதிக்காட்டிய ஆயத்தில் இந்த நிலைக்குத்தான் பயம், துக்கமற்ற நிலை என அல்லாஹ் கூறியுள்ளான். எனவே, இந்த நிலைமையை அடைந்தவர்கள்தான் அவ்லியாக்கள் என அல்லாஹ்வே கூறியுள்ளான்.

நான் நாளை இந்தியாவைவிட்டு வெளிநாடு செல்லப்போகிறேன். என்னுடைய கடைசி உபதேசம் என்னவெனின், எல்லோரும் நற்கிரியைகளைச் செய்வதில் முனைந்து செல்லுங்கள். அமல் செய்வதுதான் பிரதான காரியமாகும். அவ்லியாக்கள் இதைத்தான் கிரியாம்சையில் செய்து காட்டினுர்கள்.

எம்பெருமானுர் சர்க்கார மதீனு வள்ளல் ரஸுல் அவர்கள் ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்களை நோக்கி, "ஓ என்னுடைய ஈரல் கொழுந்தே! நீ நல்ல அமல்செய்து கொள்ளுவாயாக. மறுமையில் நீ யாருடைய மகள் என்னும் கேள்வி பிறக்காது. என்ன அமல் செய்துவந்தாய் என்னும் கேள்விதான் ஏற்படும்" எனக்கூறினுர்கள்.

ஆகவே மானிடன் நல்ல அமல்செய்து பாபமற்றவனுக ஆகவேண்டியது மிகமிக அவசியமாகும்.

பினங் டவுன் ஹால்

மஹாஜன சபையின் சார்பாக டவுன் ஹாலில் மாபெரும் மகாநாடு நடைபெற்றது. மௌலானு அவர்கள் "இஸ்லாம்" என்ற விஷயம்பற்றி, சுமார் ஒரு மணி நேரம் என்றுஞ் செவியுருதனவும், கேட்டிராதனவுமாகிய பான்மையில் எம்மதத் தாக்குதல்களு மின்றி, இஸ்லாம் என்னும் நன் மதக்கொள்கைகளை, திருக்குர்ஆன் ஆயத்துகளிலிருந்து வெகு அழகாக, ஆங்கில நாவன்மையில் எடுத்துரைத்தார்கள். இஸ்லாம் மார்க்கத்தின், நீதி நேர்மை என்பவைகளை நபி (ஸல்.) நாயகம் அவர்களின் சரித்திரங்கொண்டும், அவர்களது பேரனுராகிய ஹஸன் (ரலி.) அவர்களின் ஜீவியத்தைக்கொண்டும் விளக்குகையில், மார்க்கத்தின் உண்மை நோக்கம் ஆண்டவன்மீது அன்புவைத்தல் எனவும், ஆண்டவனின் சிருஷ்டிகள்மீது அன்பு வைத்தல் எனவும் விவரித்தார்கள்.

ஆண்டவனுடைய கட்டளைகளை உலகிற்கு தூதுவர்கள் கொண்டுவந்தனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மீது இறக்கி வைக்கப்பட்ட குர் ஆனில் அக்கட்டளைகள் யாவும் ஒருங்கே அமைந்திருக்கிறது. இவ்வேதம் ஆண்டவனுக்கு இஷ்டமானவை எச்செயல், வெறுப்பானவை எச்செயல், என்பதை நன்கு விவரித்துக் காட்டுகின்றது. ஆண்டவன் இத்தகைய அரும் பெரும் மார்க்கத்தை உலகிற்கு அளித்துள்ளதற்கு உலகினர் ஆண்டவன்பால் அன்புகொண்டு, அவனே ஏகதேவன் எனவணக்கம் புரியக் கடமைப்பட்டிருப்பதுடன், அவன் சிருஷ்டியின்பால் அன்பு கொள்ளவும் வேண்டும். மனிதன் இவைகளை விடுத்து, தனது ஐம் புலன்களின் அடிமையாகி, அதை வளர்ப்பதில் தன்னலம் கொண்டவனாகின் அவனைவிட வேறு துர்ப்பாக்கியனை காணவும் வேண்டுமோ? ஆண்டவனின் சிருஷ்டியின் அழகு, நமது கண்களையும் மனதையும் கவர்ந்து நம்மை தன்னலத்தில் அடிமைப்படுத்திக் கொள்வதை விடுத்து, ஆண்டவன்பால் அன்புசெலுத்தி அவன்செயல்களை அறிந்து அவைகளுக்கு அவனை வழுத்தி, பாக்கியங்களைப்பெறும் சத்திய மார்க்கத்திற்கு வழிப்படுவதே முஸ்லிம்களின் கடமையாகும். ஆண்டவனின் அன்பைப் பெறுங்கள்! என திருக்குர்ஆன் எடுத்து ஓதுகின்றது. இஸ்லாம், ஏகதெய்வக் கொள்கையையே வற்புறுத்துகிறது என்று பலமேற்கோள்களுடன் சொற்பொழிவு ஆற்றி அமர, இவ்வாங்கில சொற்பெருக்கின் சுருக்கத்தை பினங்கு அற்புதானந்தர் தமிழில் எடுத்துரைத்தார்.

அங்கு விஜயம் செய்திருந்த முஸ்லிம்களும் ஏனையர்களும், மௌலானா அவர்கள் உருதூ பாஷையில் சிறிய சொற்பொழிவு அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ள, தமது அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது தாம் தன் தாய்நாடுவிட்டுள்ள இந்த 45 நாளாக, தினம் 4-5 பிரசங்க விகிதத்தில் சொற்பெருக்காற்ற நேரிட்டதெனவும், இவை ஆண்டவனின் தொண்டென தாம் ஆற்றியதினால் அதன் அசௌகரியங்களைத்தான் கவனிக்காதிருக்கவே கடமைப்பட்டு வந்த பிரகாரம், இச்சமயமும் உர்தூ பாஷையை அறிந்துள்ள மக்கட்களின் விளக்கத்திற்கென சில சிறு விஷயங்களை எடுத்துக் கூறுவதாக முன்வந்து ஒரு அழகிய இனிய சொற்பொழிவாற்றி, இஸ்லாத்தின் சிறப்பை விளக்கிக்காட்டினார்கள். ஏராளமான கூட்டம் நகரமண்டபத்தில் இருக்க இடமின்றி இருபுறமும் நின்று செவிசாய்க்கலாயிற்று.

கோலாலம்பூர்

(தென்னிந்திய பள்ளி)

இங்கு இந்திய முஸ்லிம் சங்க சார்பில் ஓர் மகாநாடு நடைபெற்றது. அது சமயம் மௌலானா அவர்கள் உர்தூவில் பேசியதின் சாரம்ஸமாவது:—

தலைவரவர்களே, உலமாக்களே, சகோதரர்களே!

நான் ரஜூலா கப்பலில் சிங்கைக்கு நேரே போகவேண்டியவன் கப்பல் சுணக்கத்தால் பினங்கில் இரங்கி, அவ்விடமிருந்து இன்று இவ்விடம் வந்தேன். இன்னும் சில மணி நேரமே தங்களிடையே இருப்பேன். இன்று இரவு 10-மணி மெயில் டிரெயினில் சிங்கைபோய், அவ்விடத்திலிருந்து ஹாங்காங்கு, ஜப்பான் முதலிய இடங்களுக்குப் போய், குளிர்காலம் மழைகாலம் வருவதற்கு முன் திரும்பி மறுபடியும் இங்குவந்து சிலநாள் தங்க முடியும்.

சகோதரர்களே!

நாமெல்லாரும் சொர்க்கலோகத்தை கிரயம் பெற்று நம்மை அல்லாவிடத்தில் விற்றுவிட்டோம். மறுபடியும் நம்மை நம்மிடமே அமானிதமாகக் கொடுத்து இதைக்காப்பாற்றி தன்னிடம் மீண்டும் ஒப்படைக்கும்படி அல்லாஹ் ஏவியிருக்கிறான். எப்படியெனில், ஓர் வஸ்துவை பணம்கொடுத்து வாங்கின பிறகு அதை வாங்கின வியாபாரி இடத்தில் அமானிதமாக வைத்து, தாங்கள் மறுபடி வந்து கேட்கும் சமயம், அதை திரும்பவும் கொடுத்துவிடுகிறார். அந்த அமானிதமான சொத்து அந்தக் கடைக்காரனுக்கு சொந்தமாகாது. ஹஜ்ரத் ஹம்ஸா (ரலி) யல்லாஹு அன்ஹு அவர்கள் தான் காபிருகவும் பால்யமாகவும் இருக்கும்போது யுத்த உடையுடன் கேடயம் வாள் முதலியது தாங்கி மருகி மருகி தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு எதிரியைத் தாக்குவார்கள். அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய விருத்தாப்பிய காலத்தில் சரியான உடையில்லாமலும் உடைந்த வாளை ஏந்திக்கொண்டும் ஆவேசத்துடன் போரின்முன்னணி செல்லு

வதைக் கண்ட மற்ற எதிரியில் ஒருவன், "ஓ ஹம்ஸாவே! இவ்விருத்தாப்பிய காலத்தில் ஆவேசத்துடன் உயிருக்கும் பயப்படாமல் முன்அணி செல்லும் காரணம்யாது" என்றார். அதற்கு ஹம்ஸா (ரலி.) "இது வரையில் இந்த உடலையும் உயிரையும் எனக்கு சொந்தமென்றிருந்தேன். ஆனால் எங்கள் நாயகம் (ஸல்.) அவர்களைக்கொண்டு, "லாஇலாஹ இல்லல்லாஹு" என்று சொன்னதும், இந்த உடலும் உயிரும் எனக்கு சொந்தமில்லாது போயிற்று. இது அல்லாஹ்வுடைய அமானிதம் என்று தெரிந்திருக்கிறேன். நான் நேரான பாதையில் போகையில் என்னைக் காப்பாற்றக் கூடியவன் அல்லாஹ்வே தவிர வேறொருவருமில்லை. என்னால் ஆவது ஒன்றுமில்லை" என்றார்கள். இந்த அப்துல் அலீம் ஒரு சமயம், ஆப்கன் சகோதரர்களையும் பஞ்சாபி சகோதரர்களையும், கூவி மதத்திற்காக வாளை எடுத்து உயிரைப் பலிகொடுக்கத் தயாராவென கேட்டால், உடனே ஆப்கன் பஞ்சாபிகள் நமது மௌல்வி சொல்லுக்குப் பகறமில்லை என உடனே வருவார்கள். ஏ ஆப்கன் பஞ்சாபி சகோதரர்களே! தாங்கள் இப்படி செய்வீர்களா? அப்படியே செய்வோம்-தயார்-தயார் என்று மறுமொழி செய்தார்கள். (இந்துஸ்தானியில்) மீண்டும் நமது மதராஸ் சகோதரர்களே தாங்களும் வாளெடுத்து ஜிஹாத் செய்யத் தயாராக மற்ற சமூகத்தினரைப்போல் வருவீர்களா என கேட்டார்கள். உடனே மதராஸ் சமூக முஸ்லிம்களும், நாமும் தயார்-தயார் என்று வாக்குறுதி செய்தனர்.

இஸ்லாத்திற்கு தங்கள் உயிரை அர்ப்பணம் செய்கிறேன் என்று என்னிடம் இப்போது வாக்குறுதி கூறிய சகோதரர்களே! தங்களில் எத்தனைபேர் பணக்காரர் இருக்கிறீர்கள். அவர்கள் ஏன் ஹஜ்ஜுக்குப்போகக்கூடாது. இதுவும் ஒரு ஜிஹாதுதான். வெள்ளிக்கிழமை "ஹைய்ய அலஸ்ஸலாத்" என்று பிலால் கூப்பிட கூப்பிட தாங்கள் வியாபாரம் செய்கிறீர்கள். தங்களுக்கும் செட்டிவர்த்தகர்களுக்கும் உள்ள வித்தியாசம் யாது? எனக்கு நேரமில்லை. இல்லையேல் நான் சிறு பிள்ளைகளை சேகரித்துக்கொண்டு வெள்ளிக்கிழமை தோறும் ஒவ்வொரு கடை முன்பும் கூட்டம் போட்டு வரும்படி செய்வேன். சங்கீதம் நம்மை இழுக்கிறது. உலகத்தில் காணப்படும் பொருள்கள் நம்மைக் கவர்ந்து அல்லாஹ்வுடைய பாதையில் விடாமல் தடுக்கிறது. உலகத்தில் மூழ்கி, அல்லாஹ்விடத்தில் வாக்குறுதி செய்து வந்ததை மறந்து, பொடுபோக்குத்தனமாய் நடக்கிறீர்கள்.

இந்த அப்துல் அலீம் தங்களிடம் பணங்காசு தேடி வரவில்லை. அல்லாஹ்வுடைய கட்டளையைச் சொல்லி தங்களுக்கு நேரான பாதை காண்பிக்க வந்தவன். இந்த ஊரிலும் மற்ற ஊரிலும் உள்ள பணக்காரர்கள் என்னை, நல்ல பாம்பு எங்கே கொட்டி விடுகிறதோ என்று பயந்து சிலர் (தனவந்தர்கள்) இவ்விடம் வராமலுமிருக்கலாம். நான் அல்லாஹ்வுடைய கலாமை பகிரங்கமாக சொல்லத்துணிந்தவன். தாங்கள் உயிரையே இஸ்லாத்திற்கு அர்ப்பணம் செய்யத் துணிந்தவர்கள், முஸ்லிம்களில் பிளவு இல்லாமலும் ஒற்றுமையுடனுமிருக்கவும் முயற்சிப்பீர்களாக. கபன்துணி செலவுக்காகவும், நவ்முஸ்லிம்களின் செலவுக்காகவும் நபர் 25 காசுக்காக சங்கத்தார்களை ஒன்பது தடவை அலைய விடுவது சரியல்ல. நம் ஈமானைக் காப்பாற்றி நன் நடக்கையில் ஆக்கிவைக்க, அல்லாவை மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

கோலாலம்பூர் - (டவுன் ஹால்)

இங்கு மௌலானா அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதன் சாரம்ஸமாவது:—

தலைவர் அவர்களே! சபையோர்களே!

சில மணி நேரத்தில் "இஸ்லாமும் அதின் சிறப்பும்" என்ற ஓர் கடமையை விரித்துரைத்துவிட்டு, நான் மெயில் டிரெயினில் சிங்கைக்குப்போவேன். ஜப்பானுக்கு குளிர் காலம் வரும்முன் போய் திரும்பவேண்டும்.

நமது நாயகம் (ஸல்.) அவர்கள் முஸ்லிம் அல்லாத மற்ற சமூகத்தினர்களின் பேரிலும் அன்பாக இருந்து தங்களது 40-வயது வரையில் பொய் என்பதே தெரியாதவரும் பேசாதவராகவுமிருந்து, தாங்கள் ஏதோ தெய்வ தெரிசனம் பெற்றதாகச் சொன்னார்கள். அதுவரையில் கல்வியே கற்றுணராதவர்கள் தெய்வ தெரிசன விபரம் எங்கள் குருஆன் என்னும் வேதத்திலிருக்கிறது என்று கூறினார்கள். அல்லாஹ் ஆதிமுதல் எத்தனையோ தூதர்களை அனுப்பி ஜனங்களுக்கு உபதேசம் செய்யும்படி செய்தான். பல ஆண்டுகளாக பல போதகர்கள் வந்து சொல்லிப்போனார்கள். அதுபோல கடைசியாக நமது தீர்க்கதரிசி நாயகம் (ஸல்.)

வந்தார்கள். அவர்கள் கொண்டுவந்த குர்ஆன் ஷரீபில் சகல தீர்க்கதரிசினங்களும் காணப்படுகிறது. மேல்நாட்டார் விஞ்ஞான முறையில் கண்டதாகவோ கண்டுபிடிக்கப்பட்டதாகவோ சொல்லும் சகலதும், 1300 வருஷங்களுக்கு முன்னே, நம் மக்கா தீர்க்கதரிசி சொல்லிமுடித்திருக்கிறார்கள். இஸ்லாம் சமத்துவம் சகோதாரத்துவத்தை போதிக்கிறது. ஒரே பள்ளிவாசலில் அரசர் முதல் ஆண்டி வரையில் ஒரே நிலையாகவும் வரிசை கிரமமாகவும் நின்று தொழுகிறார்கள். கொள்வினை கொடுப்பனையும் உண்பனை தின்பனையும் எல்லாம் ஒன்றாகும். ஜாதிபேதம் வேற்றுமை கிடையாது. தோட்டி வேலை முதல் தொண்டமான் வேலையும் ஓர் முஸ்லிம் செய்யலாம். பரையரென்று சொல்லும் கீழ்வகுப்பாரும் இஸ்லாத்தில் வந்தால் அம்மதம் ஏந்துகொள்ளும். இஸ்லாத்திற்கும் அல்லாஹ்வுக்குமிடையில் திரை கிடையாது. அடியான் அல்லாவுடன் நேர்நேராக சம்பாஷிக்க வழிகளிலிருக்கின்றது. இஸ்லாம் எம்மதத்தவரையும் அன்போடு கொண்டாடி போற்றும். அறபி நாட்டு பெரிய தீர்க்கதரிசி, கொடுமை வாய்ந்த வங்காபர்களான அறபிகளிடையே மிக மிக அன்பு காட்டி, தங்களின் அன்பின் வாளினால் இஸ்லாத்தை உலகம் முழுதும் பரத்தினார்கள். பலாத்காரமாக இஸ்லாத்தை இரும்பு வாளினால் பரத்தியதாக சொல்லுகிறார்கள். இது உண்மையானால் இம்மலாயா, ஜாவா, போர்னியோ தீவுகளில் இஸ்லாம் எப்படிப் பிறந்தது. இதனால் மதீனா தீர்க்கதரிசியின் அன்பின் வாளால் இஸ்லாம் இன்று உலகத்தில் மிளிர்ந்து பெருகி வருவது சகலரும் அறிந்த விஷயம். எனவே எம்மதஸ்தர்களாயினும் அவர்களை நாம் இஸ்லாத்தில் அன்போடு சேர்த்துக் கொள்ளுகிறோம் என பேசி முடித்தார்கள்.

கிள்ளான்

டவுன் பள்ளியில் மௌலானா அவர்கள் உர்தூவில் பேசியதின் சாராம்சமாவது :—

அருமைச் சகோதரர்களே!

நீங்கள் எல்லா வஸ்துவைக் காட்டிலும் ஆண்டவனுடைய முஹப்பத்தை மிகுதமாக்கிக் கொள்ளுங்கள். அப்படி மிகுத மாக்கிக் கொள்ளுவது உங்களுடைய ஈமான் மிகுதமாகிறதற்கும் நிரப்பமாகிறதற்கும் காரணமாகிறது. நீங்கள் எந்தக் காரியம் செய்தாலும் ஆகிறத்துக்குப் பிரயோஜனப்படும்படியாகவும் அல்லாஹ்வுக்காகவும் செய்துகொள்ளுங்கள். உதாரணமாக, தற்போது நீங்கள் செய்யும் வியாபாரத்தில் ஹாலாலான ரிஜ்கை நிய்யத்துச் செய்து, ஷை ஹாலாலான சம்பாத்தியத்தைக் கொண்டு, நீங்கள் புசித்து அதனால் உண்டாகும் உடம்புடைய பலத்தைக்கொண்டு, ஆண்டவனை வணங்கவேண்டுமென்ற நிய்யத்தைக் கொண்டு வியாபாரம் செய்தீர்களே யானால், அந்த வியாபாரம் அல்லாஹ்வுக்காகவும் ஆகிறதுக்காகவும் ஆகிவிடுகிறது. மேலே குறிப்பிட்டபடி நிய்யத்து செய்ததற்கு அடையாளமாகிறது, வியாபாரம் செய்துகொண்டிருக்கும்போது தொழுகைக்கு வாருங்களென்று கூப்பிடும் மோதின் அதான் கொண்டு கூப்பிட்டுவிடும் பக்ஷத்தில் பராமுகமாய் இருப்பீர்களானால், நீங்கள் ஆண்டவனுக்காக வியாபாரம் செய்த கூட்டத்தில் சேரமாட்டீர்கள். இன்னும் உங்களுடைய பிள்ளை உங்களிடம் ஏதாவதொரு வஸ்துவை அதாவது காசையோ, துணியையோ, வேறு மற்ற வஸ்துக்களையோ கேட்டால் உங்களுடைய பிள்ளையின் பேரில் உண்டான முஹப்பத்தினால், ஷை வஸ்துவைக் கொடுத்து சந்தோஷமாக்கி வைக்கிறீர்கள். அதைப்போல் உங்களிடம் ஒருபக்கீரோ, மிஸ்கீனோ, யாதொரு வஸ்துவைக் கேட்டால், போ போ என்றுசொல்வீர்களானால், நீங்கள் ஆண்டவனுடைய முஹப்பத்தைக் கொண்டவர்களாக ஆகமாட்டீர்கள். நேரம் ரொம்ப நெறுக்கமாயிருப்பதால், இன்ஷா அல்லாஹ் நான் சிங்கப்பூர்போய் அவ்விடம் 15-நாள் தங்கி விட்டு ஜப்பான் போய் அவ்விடம் 3-மாதம் சென்று திரும்பும்போது, ஆபியத்தாயும் சிஹ்ஹத்தாயும், சலாமத்தாயும் இருந்தால், மறுமுறை உங்களைச் சந்திக்கிறேன் என்று, தங்களுடைய முத்துப்போல் கோத்த, உபந்நியாசத்தை முடித்தார்கள். பின்னால் குதூகலத்துடனும் ஆரவாரத்துடனும் சுல்தானுல் உலமா மௌலானா அவர்களுக்கு முஸாஹபா கொடுத்ததின் பின், கிள்ளான் டவுன் பள்ளி பேஷ் இமாம் மவுல்வி, முஹம்மது தாஹிர் சாயபு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வந்திருந்த ஜனங்களுக்கு விளக்கிக்காட்டப்பட்டது. கடைசியாக துஆ ஓதி முடிந்ததும், புதிதாகக் கட்டப்பட்டிருக்கும், சுல்தான் பள்ளியை பார்வையிட்டு கனம் ரூ. இ. மு. கம்பெனி ஆபிசுக்கும் விஜயம் செய்து, பிறகு கோலாலம்

பூர்க்கு மோட்டாரில் 3½-மணிக்கு பிரயாண மாகிவிட்டார்கள்.

சிங்கப்பூர்

(ஸவுத் பிரிட்ஜ் ரோடு ஜாமிஆ மஸ்ஜித்)

இவ்வூர் தென்னிந்திய முஸ்லிம் லீக்கின் ஆதரவில் ஸவுத் பிரிட்ஜ் ரோடு ஜாமிஆ மஸ்ஜிதில் கூடிய மாபெரும் கூட்டத்தில் கனம் மௌலானா அவர்கள் உர்தூவில் அரிய சொற்பெருக்காற்றினார்கள். இப் பிரசங்கம் தமிழிலும் மலாய் பாஷையிலும் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது. அதன் சாராம்சமாவது :—

அன்புமிக்க முஸ்லிம் நேயர்களே !

முஸ்லிம் என்ற ஹோதாவில், அல்லாஹு தஆலாவின் மகிமை தங்கிய சாந்தி மார்க்கத்தை சிறப்பிப்பான் வேண்டியும், நமது நபிகள் திலகம் முகம்மது (ஸல்.) அவர்கள்மூலம் வெளிபடுத்தப்பட்ட சட்ட முறைகளை பிரகடனப் படுத்துவதற்காகவுமே இங்கு யாவரும் குழுமியிருக்கின்றோம்.

அல்லாஹ் தபாரக்க வதஆலா தனதடியார்களில் முஸ்லிம்களுக்கே தனிப்பட்ட பெருமையளித்திருப்பதாக "சகல இன்ஸான்களிலிருந்தும் முஸ்லிம்களையே மிக்க மேன்மையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது" (அல்குர்ஆன்) என நவின்றிருக்கிறான்.

இஸ்லாமானது எத்தகைய முன்னேற்றமான வழிகளை மக்களுக்கு போதித்துக் கொண்டிருக்கிற தென்பதின் விபரத்தை ஒருவாறு உங்களுக்கு விளக்கிக் காண்பிக்கவே நான் இங்குவர நேரிட்டது.

உதாரணமாக, தற்கால அரசாங்கங்களிடையே தங்களின் படை பலத்துக்கு தக்கவாறு வீரர்களை நியமித்து பற்பல துறைகளில் ஒவ்வொரு பிரிவினைக்குத் தக்க தலைவர்களையும் ஏற்படுத்தி, அவ்வரசாங்கங்களுக்கு எதிரிடையான சந்தர்ப்பங்கள் நிகழ்வரும்போது அவ்வீரர்கள் உண்மையுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டுமென்பதாக சத்தியப் பிரமாணம் பெற்றதின் பிறகே, அன்னாருக்கு தக்க உத்தியோகங்கள் அளிக்கப்பெற்று அரசாங்கங்களின் அவசியத்திற்கெல்லாம் அப்படை வீரர்கள் உண்மையுடனேயே நடந்துகொண்டும் வருவது தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் வழக்க முறையாகும். அஃதே போன்று இஸ்லாம் என்ற அரசாங்கத்தில், அங்கம்பெற விரும்பும் பிரதி மனிதனும், முகம்மது நபி அவர்களை ஏகபோகத் தலைவராக ஏற்று அன்னாரின் அடிச்சுவட்டை பின்பற்றுவதாகவும், கைபராபர நாயகனையே வணங்குவதாகவும், சத்தியப்பிரமாணம் செய்தபிறகு தான், அன்னவரையும், முஸ்லிம் பிரதிநிதியாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்படிக்கொத்த ஒவ்வொரு இன்ஸானும் படைகளுக்குச் செல்லும் சிப்பாய்களின் தீரத்தைப் போன்று அல்லாஹ்வின் பாதையில் தன்னை தியாகம்செய்ய காத்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இஸ்லாமிய சரித்திரத்திலே உஹத் யுத்தத்தின் சம்பவம் முக்கியமானதொரு விஷயமாகும். அத்தருணத்தில் சஹாபாக்களின் கூட்டத்திலுள்ள ஒரு வாலிபருக்கு கலியாணத்தினிமித்தம் தேதி குறிப்பிடப்பட்டு அவ்வாறே விவாகமும் முடிவுற்றது. அன்றிரவே இவ்விளங்காதவர்களிருவர்களும் ஆனந்தசாகரத்தில் மூழ்கியிருக்குங்கால், உஹத் யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு பெருந்தோல்வி ஏற்பட்டுவிட்டதாகவும், முகம்மது நபி ஷகீதாகிவிட்டதாகவும், வதந்தி உலாவுவது இவர்களின் காதுக்கு எட்டியவுடன், அவ்விருவரும் சொல்லொணாத்துயரமுற்று தடுமாறிநிற்கும்தருணத்தில், புத்தப்புதிய மணப்பெண்ணான அவ்விள நங்கையர்க்கரசியார் எமது நாயகரே! சண்டைக்களத்திலிருந்து கிடைக்கப்பெறும் செய்தி நம்மை திடுக்கிடச்செய்கிறது ; ஆதலால் தாங்கள் ஆயுதபாணிகளுடன் உடனே அங்கு சென்று நமது சகோதரர்களின் நிலைமையையும், முகம்மது நபி (ஸல்.) அவர்களின் உண்மை விபரத்தையும் அறிந்துவாருங்கள், என மிக முகமலர்ச்சியுடன் தனதுநாயகனை வழியனுப்பி வைத்தார். அதே யுத்தத்தில்தான், நபிநாயகம் அவர்களுக்கு மலையடிவாரத்தில் ஏற்பட்ட சருகுகளின் நிமித்தமாகவும், எதிரிகளின் சன்னபின்னமான அம்புகளின் காயங்களாலும் ஏற்பட்ட சங்கடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான மருத்துவமும் செய்யுங்கால் பெருமானார் நபிகள் திலகம் அவர்கள் வானத்தைப் பார்த்தவர்களாகவே அண்ணாந்திருப்பதைக் கண்ட சஹாபிகள், யா நபியே! யாது காரணம் பற்றி தாங்கள் வானத்தையே கூர்ந்து பார்க்க நேரிடுகிற தென்றதின் விபரத்தை வினவியபொழுது, சத்தியநாதர் அவர்கள், எனது ஆருயிரனைய அன்பர்—நேற்று நிக்காஹ்முடித்த

புத்தப்புதிய மணவாளர் இந்த யுத்தத்தில் ஷகீதாகிவிட்டார். அன்னவரை வானவர்கள் மேலுலகுக்குத் தூக்கிச் சென்று, அன்னாரின் முழுக்கு நிவர்த்திக்கு கொண்டு வந்து நீரைக் கொண்டு குளிப்பாட்டிக்கொண்டிருப்பதை தாங்கள் கவனித்துக்கொண்டிருப்பதாகக் கூறிய உண்மை சம்பவத்தை நாமெல்லோரும் யுண்ணிப் பார்ப்போமாக! நம்மைப்பற்றியும் நமக் கிடப்பட்டிருக்கும் கட்டளைகளைப்பற்றியும் சிந்திப்போமாக.

அன்பீர்! மேலே கூறப்பட்டதே போன்ற அரிய சந்தர்ப்ப நிகழ்ச்சி யொன்று நம்மிடையே தற்போது தேவைப்படாவிடினும், ஒவ்வொருவரின் சொந்த நலத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் முக்கிய கடமைகளிலொன்றான ஐங்கால வணக்க நெறியை நம்மில் எத்தனையோ லக்ஷக்கணக்கானவர்கள் நிறைவேற்றத் தவறியவர்களாய், பொருள் திரட்டும் நோக்குடனேயே காலங் கடத்துவதைக் குறித்து எவ்வாறு வருந்தாதிருக்க முடியும்.?

அவ்விதமே பொருள் திரட்டும் சிறிய பெரிய தனவந்தர்களெல்லாம் அல்லாஹ்வின் கட்டளையை மேற்கொண்டு அவ்விதிப்படிக்கு கொடுக்கவேண்டிய ஜக்காத்தை சரியான முறையில் வினியோகம் செய்பவர்களாவு மில்லை. தற்கால இஸ்லாமிய உலகிலே, இஸ்லாமிய வரம்புக்குட்பட்ட தனவந்தர்களால்—கடமையாளர்களால்நிறைவேற்றப்படஜகாத்தை வேண்டிய சரியான முறையில் வினியோகிக்கத் துணிவார்களானல், தரித்தப்பட்ட இஸ்லாமிய ஏழை சோதர ரொருவரையும் கண்டுகொள்வது அறிதாகிவிடும். இஃது இக்காலக் கடமையாளர்களால் செய்யப்பட்டு வரும் பெரும் அநீதியுமாகும்.

உதாரணமாக, இஸ்லாமிய பிரசாரத்திற்கென நாயகம் (ஸல்.) அவர்களால் உதவி கோரப்பட்டகாலை அநேக ஸஹாபிகளால் பெரும் பொருள்களெல்லாம் தானம் செய்யப்பட்டதுடன் உமர் கத்தாப் (ரலி.) அவர்கள் தங்களின் குடும்பச் சொத்தின் பெரும்பாகத்தை தானம் செய்ததோடு சிலவற்றை தங்களின் குடும்பச் செலவிற்கு வைத்துக் கொண்டார்கள். ஆனல் செய்யதினு அபூபக்ர் சித்தீக் (ரலி.) அவர்களோ, தங்களின் முழுச்சொத்தில், தங்களின் மேல்முடிக்கு அணிந்திருந்த ஒரு கம்பளித் துணியைத் தவிர்த்து வேறு யாதொன்று மில்லாமல் எல்லாவற்றையும் "பைத்துல் மால்" நிதிக்கு தானம் செய்யத் துணிந்த சம்பவத்தை ஒருவாறு நிதானித்துப் பாருங்கள்!

அத்தகைய மேலான பொருளுதவி யொன்றையும் நாம் எதிர்பார்க்காவிடினும், தற்கால நிலைக்கேற்ப நிர்வகிக்கப்பட்டு வரும் மிஷனரி சொஸைட்டிகள், மதச்சேவை சபாக்களுக்கும் சொற்ப மாதாந்த வருட சந்தாக்களைக்கூட சரிவர செலுத்தி முடிக்காமல், பெரும்பாலோர் காலங்கடத்தி வருவதைக் கண்டு நாம் எப்படி வருந்தாதிருக்க முடியும்? ஒரு சில சொற்ப சந்தாத் தொகையைக் கூட ஆண்டவனின் பாதையில் இஸ்லாமியப் பிரசாரத்திற்கென உதவியளிக்கத் தயங்கும் நம்மில் சிலர், உலக வாழ்வுகளெல்லாம் தங்களுக்கே சொந்தமென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ்வுக்காகவும், அவனின் உண்மைத் தூதர் முகம்மது நபி அவர்களின் நேர்மையான பிரசாரத்திற்காகவும் ஒரு சில சிறுந்தொகையையுங்கூட தானமளிக்கத் தயங்கும் கடமையாளர்கள் அக்கால அஸஹாபிகளின் உண்மை தியாகத்தை சிறிதே சிந்தித்துப் பார்க்கட்டும். தங்கடமையை யுணர்ந்து நடந்துவரும் பூமான்களே மறு உலக சீமான்களாவார்கள்.

தோழர்களே! இத்துடன் எனது பிரசங்கம் முடிவடைகிறதாயினும், கடைசியாக ஒரு முக்கிய விஷயத்தை உங்களெல்லோருக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தற்கால நிலையிலே நமது இஸ்லாமிய இயக்கத்தின் க்ஷீணதசையான தருணத்தை ஒவ்வொருவரும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். சமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரமென்னும் நம் சன்மார்க்க கொள்கைகள் யாவராலும் அநுஷ்டித்துக் காட்டப்படவேண்டும். நமது மதப் பிரசாரத்துக்காகவும், மிக மிக பிற்போக்கடைந்திருக்கும் நமது முஸ்லிம் சமூகத்தின் சீர்திருத்தத்திற்காகவும், மத சம்பந்தப்பட்ட காரியங்களில் அவசியத்திற்கேற்றபடி ஈடுபட்டுழைக்கும் வாலண்டியர்—தொண்டர்படைகள் நிறுவி, அப்பிரசாரங்கள் மூலம், ஏழை சகோதரர்களுக்கு சமத்துவ வசதி அளித்து நமதியக்கப் பிரகடனத்தைத் தீர்த்து அந்த வேலைசெய்வதற்காக வேண்டிய பிரயத்தனங் கொள்ளவேண்டும். அத்தகைய பிரசாரக் கோஷ்டியாரையே தற்கால இஸ்லாம் வேண்டி நிற்கிறது. இச்

சாரணப் படைகளினாலேயே நமது இஸ்லாமிய இயக்க வேலைகளில் அநேகம் ஆரம்பிக்கப்பட வேண்டிருப்பதால், எல்லாம் வல்ல அல்லாஹ்த ஆலா, நமது மேலான நல்லெண்ணத்தை நிறைவேற்றித் தர ஒருங்கு பிரார்த்திப்போமாக! ஆமீன்.

குறிப்பு:—கனம் மௌலானா அவர்களது வருகையை வெகு குறியகாலத்தில் தெரிந்து கொண்டு மிக்க ஆடம்பரத்தோடு வரவேற்க ஏற்பாடுசெய்து மௌலானா அவர்கள் கப்பலில் பிரயாணஞ் செய்து வரும்போதே வயர்லஸ் மூலம் அனுமதிகோரி உத்திரவுபெற்று தக்க முறையில் வரவேற்று உபசரித்து பொது ஜனங்கள் பயன்பெறுவதற்கு உதவியாக விருந்த பினங் முஸ்லிம் மகாஜன சபா உத்தியோகஸ்தர்களுக்கும், கோலாலம்பூர் முஸ்லிம் சங்க உத்தியோகஸ்தர்களுக்கும் மௌலானா அவர்கள் நம் தென்னாடு வருவதற்கு காரணஸ்தராக விருந்த கிள்ளான் நண்பர் கோ. அ. பகீர் முகம்மது சாஹிப் அவர்களுக்கும், சிங்கை மலாயா முஸ்லிம் மிஷனரி சொசைட்டியாருக்கும், தென்னிந்திய முஸ்லிம் லீக் அங்கத்தினர்களுக்கும் மௌலானா அவர்களின் அருஞ்சேவைகளை யுணர்ந்து தங்கள் வியாபார ஸ்தலமான சைகோனுக்கு விஜயஞ்செய்யுமாறு அழைத்த ஜனாப் அல்ஹாஜ் J. M. முகம்மது இஸ்மாயில் ருவுத்தர் அவர்களுக்கும் மிக மிக நன்றி செலுத்துகின்றோர்.

யவ்முந்நபீ.

யவ்முந்நபீ என்பது எம்பெருமானார் நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களுக்காக ஒதுக்கிவைக்கப்படும் தினமாகும். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் உலகத்துக்குச் செய்துள்ள நன்மைகள் அளவிடப்பாலதன்று. பெருமானார் அவர்கள் அவதரிக்குங் காலை உலகமுழுதும் சீர்கேடடைந்து அஞ்ஞான இருள் சூழ்ந்திருந்தது. அதற்கு முன்னால் சென்றுபோயிருந்த தீர்க்கதரிசிகளின் மார்க்கங்கள் யாவும் அழிந்துபோயிருந்தது. உலகத்தின் சகல மக்களையும் நேர்வழியின் பக்கல் சேர்ப்பான்வேண்டி ரஸூலேகரீம் (ஸல்.) அவர்களை அனுப்பி அவர்கள் மூலமாய் இறுதி வேதமான குர்ஆன்ஷரீபையும் அருளினன். அதில் இனியில்லாவண்ணம் சகல சட்டதிட்டங்களையும் சகல உபதேசங்களையும் அறிவித்துவிட்டான். நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் அந்த குர்ஆனின் கட்டளைகளை கிரியாம்சையில் அனுஷ்டித்துக் காட்டும் நமூனவாக இருந்தார்கள். அந்த மஹானின் ஜீவியத்தை உணர்வதினால் இஸ்லாத்தை உணர்வதாகுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவர்களுடைய ஜீவியக் குறிப்புகளை வெளியிட்டு மக்களின் மனதில் பதியும்படி செய்வது முக்கியமான சேவையாகும். இதனை உத்தேசித்தே பொதுவாய் பற்பல சமயங்களிலும் குறிப்பாய் பெருமானார் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் திருஜனனம்புரிந்த ரபீஉல் அவ்வல் மாதத்திலும் ரஸூலேகரீம் (ஸல்.) அவர்களுடைய ஸீரத்தை உபதேசிப்பதும் புத்தகங்கள், பிரசுரங்கள் மூலம் வெளியிட்டு வருவதும் தொன்றுதொட்டு வழக்கமாக இருந்து வருகிறது. அல்லாஹ்தஆலா, நபிகள் நாயகம் அவர்களுடைய பெயர் நாமத்தை பிரபல்யப்படுத்துவேன் என கூறியிருந்ததற்கேற்ப இச்சேவை அதிமுன்னேற்றமடைந்து கொண்டு வருகின்றது.

இவ்விஷயத்தை லாகூர் அகில உலக ஸீரத் கமிட்டியார் ஒரு இபக்கமூலமாய்த் தோற்றுவித்தனர். அது இற்றைக்கு எட்டாண்டுகளாகிறது. இந்த இயக்கத்தின் நோக்கம் நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் பிறந்ததினமான ரபீஉல் அவ்வல்மீ 12-ந்தேதியை நபிபெருமானார் (ஸல்.) அவர்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட வேண்டும். அதனை "யவ்முந்நபீ" நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குச் சொந்தமான தினம் என்றழைக்கப்பட வேண்டும். அன்றையதினம் உலகத்திலுள்ள சகல முஸ்லிம்களும் எல்லா வேலைகளையும்நிருத்தி பெருநாளாகக் கொண்டாடவேண்டும். அன்று நபிபெரு

மானுரின் நற்குணம் நன்னடக்கை முதலியவை கள் மக்களிடம் பரவுதற்கு ஒவ்வொருவரும் முயலவேண்டும். ஒவ்வொரு ஊர்களிலும் அன்று மகாநாடுகள் கூட்டி. ஸீரத் பிரசங்கத்தை படித்துக்காட்டுவதோடு அறிஞர்கள் உபன்னியாசம் செய்யும்படியும் ஏற்பாடுசெய்ய வேண்டும்.

லாகூர் ஸீரத் கமிட்டியார் இன்னேக்கத்தில் வெகுதூரம் முன்னேறிவிட்டார்கள். இதே முறையில் யவ்முன்நபி விழா அறப், ஷாம் ரூம், மிஸர், பெர்ஷியா, ஆப்கனிஸ்தான் முதலிய எல்லா ஊர்களிலும் நடைபெறுவதற்கு வேண்டியபிரசாரம்செய்யப்பட்டு வெற்றி பெற்றுவிட்டது. இதுபொழுது உலகம்முழுவதிலும் இதே முறையில் யவ்முந்நபி விழா அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்றே சொல்லலாம்.அதிகாரம்பெற்ற மன்னர்களில் பலர் நபிபெருமானர் (ஸல்.) அவர்களின் ஸீரத்தைப் பிரகடனப்படுத்தி வருகின்றனர். ஸீரத் பிரசங்கம் 22-பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல லக்ஷக்கணக்கான காப்பிகள் வினியோகிக்கப்பட்டு வருகிறது. இத்துறையில் தமிழ்மாகாணத்தின் வேலையை நம் சங்கம் பொறுப்பேற்று சேவை புரிந்து வருகிறது. ஸீரத் பிரசங்கத்தை நம் தமிழ் ஜில்லாவாசிகளும், சிலோன், ரெங்கூன், பினங், சிங்கப்பூர், மலாபா, கொச்சின்ஸைன் முதலியதேசங்களில் வசிக்கும் நம் முஸ்லிம்களும் பல்லாயிரக்கணக்கில்வாங்கி வினியோகிப்பதற்கு நம் சங்கம் தக்க ஏற்பாடு செய்து வருகிறது.

அதற்கேற்ப இவ்வாண்டிலும் மௌலானு அப்துஸ் ஸலாம் சாஹிப் நத்வி அவர்களின் பிரசங்கம் மொழிபெயர்க்கப்பட்டு தயாராகி வருகிறது. நண்பர்கள் முற்கூட்டியே ஆடர்கள் செய்து தருவித்து வினியோகிக்கச் செய்வார்களாக. அதிலும் முக்கியமாய் இதுசமயம் ஹரிஜனங்கள் இஸ்லாத்தின் உண்மையைத் தேடி நிற்பதால் அவர்கள் மனதிலும் ஹுஜூர் அவர்களின் மாட்சியை பதியச் செய்வான் வேண்டி ஏராளமான காப்பியை வாங்கி அவர்களிடமும் வினியோகிக்கச் செய்வார்களாக. இஷா அத்தே இஸ்லாம் செய்வதற்கு இதுவே தக்கசமயமும் முறையுமாகும். ஆகவே, நண்பர்கள் முற்கூட்டியே ஆடர்செய்து தேவையான பிரதிகளைப்பெற்று வினியோகித்து அதனுலேற்படும் நற்பயனைப் பெற்றுக்கொள்ளுவார்களாக. அனேக நண்பர்கள் போதியகாலத்தில் ஆடர்செய்யாது வெகு குறுகிய காலத்தில் ஆடர்செய்வது கொண்டு அனுப்பிவைக்க முடியாது நாமும் வருந்துவதுடன் அவர்களும் வருத்தப்பட நேரிடுகிறது. கவனித்து சீக்கிரம் ஆடர்செய்யுமாறு கோருகிறோம்.

காதியானி "பித்ஞ"

சோதரர் !

மகுடத்தில்குறிப்பிட்ட விஷயம் புதிதன்று. இதனை எல்லா முஸ்லிம்களும் நன்கறிவர். குறிப்பாய் ஹி. இ. ஸை. இ. வாசகர்கள் தெள்ளத் தெளிய படித்த விஷயமேயாகும். இக்கொள்ளை நோய் நந்தமிழ்நாட்டையும் வெகுவாய் பாதித்திருந்தது. இவண் பிரசாரம் செய்த ஒருவர் கூலிக்கு மாவிடித்துவந்தது உலகப்பிரசித்தமே. நம்சங்கத்தின் விடாமுயற்சியாலும், ஹிஸ்புல்லாஹ்க்களின் அருமையான உழைப்பாலும், கொடைவள்ளல்களின் பேருபகாரத்தாலும், மஹத்தான நடவடிக்கையாலும் இத் தீய கொள்கை தமிழ்நாட்டைவிட்டு வெருட்டப்பட்டு போயிற்று. எனவே ஹிஸ்புல்லாக்கள் இவ்வழிகேடு மீண்டும்வந்து நுழையாமல் கண்காணித்துவருவதோடு வேலைத்திட்டத்தில் இஷா அத்தல் இஸ்லாம், பிரசாரவேலையையும் முக்கியாம்சமாகக் கொண்டு சேவைசெய்து வருகின்றனர். அல்லாஹ் இக்காரியாதிகள் செவ்வனே நடைபெற அருள்பாலிப்பானுக.

ஆனல் காதியானிகள் சமயம்பார்த்து வேறு வகையில் தங்கள் மாயவலையை வீசவும்கூடும். அதுவிஷயத்திலும் அதிக ஜாக்கிரதையாக கவனித்து வரவேண்டியதவசியம். அதன் அறிகுறியும் தோன்ருமலில்லை. லாகூர் காதியானிகளின் பிரசாரர்கள் மறைந்திருந்து பிரசாரம்

செய்துவருவதாக நம்பத்தக்கவிடத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. இந்த வழிகேடர்களின் வலேயில் சிக்காமல் முஸ்லிம்கள் விழித்துக்கொள்வதோடு எங்கேனும் தலே கிளப்புவார்களாயின் அவர்களே அம்பலத்துக்கிழுத்துவிட முயலுவார்களாக.

வடநாட்டில் காதியானிய்யத் அஹ்ரூர்களால் அகற்றப்பட்டது. மிர்ஜாவின் மகனுரின் முயற்சியால் அமீருஷ் ஷரீஅத் அதாவுல்லா ஷாஹ் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் அமீர் அவர்களுக்கு ஏற்பட்ட வெற்றியால் காதியாக் கோட்டையில் அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. அநேகர் தௌபாச் செய்து இஸ்லாத்தில் சேர்ந்தனர். மிர்ஸாயிகள் முஸ்லிம்களே முபாஹலா (மார்க்க சத்தியம்) வுக்கு அழைத்தனர். முஸ்லிம்கள் முன்வந்துவிட்டதைக் காதியானிகள் கண்டு பயந்து ஓடிங்கினர். காதியானியத்தின் உற்பத்திப் பீடமான காதியான் நகர் புதைகுழிக்குப் போய் அடைக்கலம் புகும்காலம் நெறுங்கிவிட்டது. இன்னும் அஹ்ரூர்கள் மும்முரமாய் வேலே செய்து வருகின்றனர். அல்லாஹ் இவர்களின் சேவைக்கு உதவிபுரிய வேண்டும்.

இதுபொழுது கவிச்சக்ரவர்த்தி "அல்லாமா" ஸர் முகம்மது இக்பால் அவர்களின் சேவையைப் புகழாமலிருக்க முடியவில்லே. சமீபத்தில் காதியானியத்தின் கெடுதல்களே விபரித்து பல கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். அதனுல் ஆங்கிலம் கற்ற வகுப்பாரின் கண் திறந்துவிட்டது. இதுவரை முல்லாக்கள் தான் காதியானியத்தை மறுப்பதாக நினைத்திருந்தனர். "அல்லாமா இக்பால்" அவர்களின் வியாசத்தால் "காதியானியத்" உலக முழுவதும் மறுக்கப்படும்-வெறுக்கப்படும் விஷயம் என்பது தெளிவாய்விட்டது. மேலும் லாஹுர் அஞ்சுமன் ஹிமாயத்துல் இஸ்லாம் சொசைட்டியில் காதியானிகளில் சிலர் புகுந்துகொண்டு கிடந்தனர். பொது ஜனங்களின் கிளர்ச்சியாலும் அல்லாமா இக்பால் அவர்களின் முயற்சியாலும் அவர்கள் நீக்கப்பட்டுப் போயினர்.

லாஹுர் காதியானி பாதிரி முகம்மது அலியின் பார்ட்டியார் மிர்ஸாவை நபி என்று ஒப்புக்கொள்ளவில்லே எனப் பிதற்றிவந்தனர். குர்தாஸ்ப்பூர் கேஸ் அதையும் தெளிவுபடுத்திவிட்டது. இவர்களும் மிர்ஸா பஷீரின் மூத்தண்ணுக்கள்தான் என்று எல்லோருக்கும் தெளிவாகிவிட்டது. இது காதியானிய்யத்துக்கு சாவுகாலம் என்று தீர்மானிப்பது பொருத்தமற்றதென்று கூற முடியாது.

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன?

இஸ்லாமிய உலகின் மகா நூலாசிரியர் என்றும், கவிச்சிரேஷ்டரென்றும் கீர்த்திபெற்றவரும், தேசசஞ்சாரியும், (ஸீரியா) ஷாம் தேசபேரறிஞரும், முஸ்லிம் உலகத்தின் முக்கிய தலேவர்களில் ஒருவரும், பிரபல பிரசங்கியுமான அமீர்ஷக்கேப் அர்ஸலான் அவர்களால் இவ்வியாசம் எழுதப்பட்டது. இவ்வியாசத்தைப்பற்றி மௌலானு இஹ்ஸான் ஸாமீ ஹக்கீபே கூறி இருக்கும் விபரமே இதற்குத்தக்க மதிப்புரையாக இருப்பதால் அதனே மட்டிலும் ஈண்டு குறிப்பிட்டுவிட்டு அசல் வியாசத்தை எழுதுவாம். மௌலானு இஹ்ஸான் கூறி இருப்பதாவது:—

"கீழ்நாடு, மேனுடுகளில் தேசசஞ்சாரங்கள் செய்தபின்னர் உலகமுஸ்லிம்களுக்கு அவர்களுடைய எல்லா இரகசியங்களேயும் வெளிப்படுத்தி அவர்களேச் சீர்திருத்துவதற்குத் தூண்டும்படியான ஒருநூல் எழுதவேண்டுமென்ற பேரவா எனக்கேற்பட்டிருந்தது. இவ்விதச் சந்தர்ப்பத்தில் அல்லாமா அமீர்ஷக்கேப் அர்ஸலான் அவர்களுடைய இந்த நூல் வியாசம் என்றமுறையில் எனதுபார்வைக்கு வந்தது. ஆகவே, நான் இதுசம்மந்தமாக வேறுநூல் சுயமே எழுதவேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன். இஸ்லாமிய உலகத்தின் நிலேமையைப்பற்றி இதனேப்பார்க்கினும் சிறந்த முறையில் எழுதப்பட்ட வேறுநூல் எதையும் பார்த்ததில்லே. இச்சிறந்த கட்டுரைகளே எழுத நேர்ந்ததற்கான காரணமும் ஆச்சரியமானதாகவே இருக்கிறது. ஜாவாவிலுள்ள ஒரு

சுல்த்தானிடம் ஷெய்குல் இஸ்லாம் பதவி வகித்துவரும் பெரியார் மௌலவீ முஹம்மது பஸ்யூனி இம்ரான் சாகிப் என்பவர் அல்லாமா முஹம்மது ரஷீத் ரிஜா சாகிப் (மிஸ்று அல்மனர் எடிட்டர்) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி "முஸ்லிம்கள் லௌகீகம் வைதீகம் ஆகிய இரண்டிலும் க்ஷீணித்திருப்பதற்குக் காரணம் என்ன? வென்பதைப் பற்றியும், உலகமெங்குமுள்ள முஸ்லிம்கள் கேவலமானநிலைமையில் இருப்பதாகக் காணப்படுவதற்கான காரணமென்ன? வென்பதைப்பற்றியும் "அல்மனர்" பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதும்படி அல்லாமா அமீர் ஷக்கேப் அர்ஸலான் அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்" என்று கூறி இருந்தார். அல்லாமா ரஷீத் ரிஜா அவர்கள் இக் கடிதத்தை அமீர் ஷக்கேப் அர்ஸலான் அவர்களுக்கு அனுப்பிவைத்தார். அமீருல்பயான் ஷக்கேப் அர்ஸலான் அவர்கள் அதுபோது ஸ்பெயின், உந்துலுஸ், மொரோக்கோ முதலிய தேசங்களில் சுற்றுப் பிரயாணஞ்செய்துகொண்டிருந்ததாலும் அவருடைய இருதயம் முஸ்லிம்களின் க்ஷீணதசையைக் கண்டு உருகிக்கொண்டிருந்தபடியாலும் இது கடிதத்தைக் கண்டவுடன் அவருடைய உருக்கமான உணர்ச்சியானது எழுதுகோல் வழியாக உருகி ஓடவாரம்பித்தது. அதன்பலனாக இவ்வியாசம் உலக மக்கள் முன் வந்திருக்கிறது. நமது தமிழ் முஸ்லிம்களின் நன்மையையுத்தேசித்து அதனை யாம் பிரசுரம் செய்கிறோம். அன்பர்கள் ஊன்றிக் கவனித்து தங்களுக்குள் சீர்திருத்தம் செய்துகொள்ள முன்வருவார்களாக. ஆமீன். (ப. ர்.)

வீழ்ச்சிக்கு முதற்காரணம்

முஸ்லிம்கள் க்ஷீணதிசையிலிருப்பதும் பல ஹீனமடைந்துவிட்டதும் ஜாவா, மலாயா நாடுகளில் மாத்திரமில்லை. கீழ் நாடு மேல் நாடு என்ற வித்தியாசமில்லாமல் உலகம் முழுவதிலும் பொதுவாக நிறைந்துள்ள ஒரு விஷயமாகும். ஆனால், ஒரு தேசத்தில் முஸ்லிம்கள் அபாயகரமான நிலைமையில் இருக்கிறார்கள் என்றால், மற்றொரு தேசத்தில் அதனைப் பார்க்கினும் கொஞ்சம் குறைவான நிலைமையில் இருக்கிறார்கள் என்று கூறலாம். ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கு மிடையிலுள்ள முஸ்லிம்களில் கூடுதல், குறைவு என்பதில்தான் வித்தியாசமிருக்கிறதேயன்றி க்ஷீணிப்பு, தாழ்ந்த நிலை என்ற விஷயத்தில் வித்தியாசமில்லை. சுருங்கக் கூறுமிடத்து, இந்த நூற்றாண்டிலுள்ள முஸ்லிம்களின் லௌகீகம், வைதீகம் ஆகிய சகல விஷயங்களும் திருப்திகரமான ஸ்திதியில் இல்லை என்று கூறலாம். சிற்சில இடங்களைத் தவிர பாக்கியுள்ள எல்லா தேசங்களிலும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார் ஆகிய இரு வர்க்கத்தாரையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது முஸ்லிம் அல்லாதாருக்குச் சமமான நிலைமையில் முஸ்லிம்கள் இல்லாமலிருந்து வருகிறார்கள் என்ற விஷயம் மிகவும் தெளிவாகத் தெரியவரும். போஸ்னியா, ருசியா, ஆதர்பீஜான், சீனா முதலிய தேசங்களில் வாழும் முஸ்லிம்கள் அங்குள்ள இதரர்களைப் பார்க்கினும் மிகவும் உயர்ந்த நிலைமையிலேயே மகாயுத்தத்திற்கு முன்னிருந்தனர். இத்தேசங்களைத் தவிர பாக்கியுள்ள தேசங்களில் வாழும் முஸ்லிம்களின் நிலைமை மிகவும் மோசமான ஸ்திதியில் இருந்துவருகிறது என்பதிற் சந்தேகமில்லை.

ஆனால், தற்போது இஸ்லாமிய உலகில் ஒரு விதமான விழிப்பேற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதனைப் பரங்கியர்களும் உணர்ந்து பயந்து நடுங்குகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும், இவ்விழிப்பானது ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள ஜனங்களுக்குச் சரிசமத்துவமாக முஸ்லிம்களை இன்னமும் முன்னேற்றி விடவில்லை. இப்பொழுது நமக்கு முஸ்லிம்களின் க்ஷீணதிசை வெளியாகிவிட்டது. ஆகவே, எந்தக்காரணங்களால் முஸ்லிம்கள் உலகில் ஆயிரம்வருஷகாலம் தலைமைத்தனம் வகித்துவந்தனர், எந்தக்காரணங்களால் அவர்கள் கீழ்நாட்டிலிருந்து மேனாடுவரை கேவலமான நிலைமையில் இருக்கின்றனர் என்ற விஷயங்களைச் சிந்தித்துப்பார்ப்பதவசியமாகும். எனவே, முஸ்லிம்களின் க்ஷீணதிசைக்குரிய காரணங்களைப்பற்றிக்கூறுமுன் அவர்கள் முன்னேற்றமடைந்ததற்குரிய காரணங்கள் யாவை? என்பதைப் பற்றி முதலில் கவனிப்பாம்.

முஸ்லிம்களின் முன்னேற்றம்.

முஸ்லிம்கள் சென்றகாலத்தில் முன்னேற்றமடைந்திருந்ததற்கு உண்மையான காரணம் இஸ்லாம்மதம் வெளியானதுதான். இஸ்லாம் மதம்தான் அறபிதேசத்திலுள்ள பற்பலகோத்திரக்காரர்களையும் ஒரேசமூகத்தாராக்கிற்று.

அவர்களது காட்டுமிராண்டியான ஜீவியத்தை நாகரீகமாக்கிற்று. வன்னெஞ்சர்களை இளகிய மனமுள்ளவர்களாக்கிற்று. விக்கிரக ஆராதனைக்காரர்களை ஏகநாயனின்முன் தலைவணங்கும்படிச்செய்தது. சுருங்கச்சொல்லுமிடத்து அவர்களுடைய பழைய ஆன்மாக்களை எடுத்துக்கொண்டு அவைகளுக்குப்பதிலாக புதிய ஆன்மாக்களை உண்டாக்கிவிட்டது. ஆகவே, அவர்களுக்கு புதியசக்தியை யுண்டாக்கிவிட்டது. அதன்பலனாக அவர்கள் கண்ணியமாகவும், கௌரவமாகவும், கல்வி, வித்தை, செல்வம் ஆகியவைகளில் மிகவும் உச்சஸ்தானத்தை அடைந்தவர்களாகவும்ஆகிவிட்டனர். அறபியர்கள் 50-வருஷகாலத்திற்குள் பாதியுலகைவெற்றிக்கொண்டுவிட்டார்கள். ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்களது கிலாபத்தாட்சியின் பிற்பகுதியிலும், ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களது கிலாபத் ஆட்சிகாலத்திலும் அறபியர்கள் பிளவுபட்டு ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கொள்ளா திருந்திருப்பராயின் முஸ்லிம்கள் நிச்சயமாக உலகம் முழுவதையும் ஜெயித்திருப்பர்.

முஸ்லிம்களின் 50-அல்லது 70-வருஷத்திய அரியவேலைகளில் ஹஜ்றத்அலீ (றலி.)யினுடையவும் அமீர்முஆவியா (றலி)வினுடையவும் யுத்தங்களும், பனீஉமய்யாக்களுக்கும் ஹஸ்ரத் இப்னுஸுபைர் (றலி) அவர்களுக்கும் நடைபெற்ற பயங்கரயுத்தங்களும் அதிக நஷ்டம் விளைவித்தன.

இஸ்லாம் தோன்றியதற்குப் பிறகு அறபியர்களின் வெற்றிகள், நற்குணங்கள், ஒழுக்கங்கள்முதலியவைகள் சம்மந்தமாக சரித்திரப் புத்தகங்களில் கூறப்பட்டவைகள் மிகவும் சரியானவைகளேயாகும். இவைகளைப்பற்றிய அறிகுறிகள் இப்பொழுதும் காணப்படுகின்றன. இதுசம்மந்தமாக "அறபியர்களின் நாகரீகமானது இவ்வுலகில் மிகவும் பழமையானது. எழுதுவதும்படிப்பதும்கூட இவர்கள்மூலமாகவே இவ்வுலகில் ஆரம்பமாயிற்றென்றுங் கூறலாம். ஆனால், அவர்களது நாகரீகமும், அரியகாரியங்களும் அறபி எல்லைப்புறங்களுக்குள்ளாகவே அடங்கி இருந்தன என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. இஸ்லாத்திற்கு முன் ஒருகாலத்தில் பாரஸியர்கள் யமன், அம்மான், ஹீரா ஆகிய மாகாணங்களிலும், அபிசினியர் யமனிலும், உரோமர்கள் ஹிஜாஸின் எல்லைப்புறங்கள், ஷாம்தேசம் ஆகியவைகளின்மீதும் ஆட்சிபுரிந்தனர் என்பதும் உண்மை. மேலும், இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அறபியர்கள் சகலவிஷயத்திலும் பூரண சுயேச்சையுள்ளவர்களாக இருந்ததுமில்லை. தூரதேசங்களில் கீர்த்திபெற்றிருக்கவுமில்லை. உலகச்சரித்திரத்தில் ஆளும்ஜாதியினரில் சேர்க்கப்பட்டிருக்கவு மில்லை. ஆனால், இஸ்லாம்மதம் தோன்றியபிறகு, ஹஜ்றத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பொருட்டால் எல்லா நாகரீகங்களும் நிகழ்ந்தன. உலகமும் அறபியர்களை ஒப்புக்கொண்டு விட்டது.

வாருங்கள்! முஸ்லிம்களின் உயர்வுக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருந்தவைகள் யாவை என்பதைக் கவனிப்போம். உலகத்தை அவர்கள் ஜெயித்து கண்ணியம் மரியாதை ஆகியவைகளின் உயர்ந்த அந்தஸ்தை அவர்கள் அடைந்ததற்குக் காரணம் என்னவென்பதைச் சிந்திப்போம். முஸ்லிம்களிடம் அக்காலத்திலிருந்த வெற்றிக்குரிய லக்ஷணங்கள் இப்பொழுதுமிருக்கின்றனவா என்று பார்ப்போம். நான் முஸ்லிமாக இருக்கிறேன் என்று வாயளவில் மாத்திரம் கூறினால் போதுமானது, கிரியாம்சையில் ஒன்றும் செய்யவேண்டியதில்லை; வாயினால் கூறிவிடுவது ஒன்றிற்காக நான் அவர்களுக்குக் கண்ணியத்தையும் சிறப்பையும் தந்துவிடுவேன் என்று அல்லாஹுத ஆலா கூறவில்லை. அவன் அப்படிக் கூறி இருந்தால் "மேலும், அல்லாஹ்வுக்கும், அவனது றஸூலுக்கும், மூமின்களுக்கும்தான் கண்ணியமிருக்கிறது" என்று திருமறையில் கூறப்பட்ட வாக்கியத்தின்பேரில் ஆக்ஷேபனை செய்யலாம். ஆனால், அல்லாஹுதஆலா அவ்விதம் வாக்குறுதி செய்யவுமில்லை, வாக்குறுதி செய்துவிட்டு அதிலிருந்து மாறிவிடவுமில்லை. திருகுர்ஆனின் கட்டளைகள் மாறிவிடவுமில்லை. ஆனால், முஸ்லிம்கள்தான் மாறிவிட்டனர். இதனைக் குறித்து இறைவன் தனது திருமறையில் "ஒரு சமூகத்தார் தங்களது மனத்தை மாற்றிக்கொள்ளாமலிருக்கும் வரை அந்தச் சமூகத்தாருக்குள்ள நிலைமையை நிச்சயமாக அல்லாஹ் மாற்றிவிட மாட்டான்" என்று நமக்கு எச்சரிக்கை செய்திருக்கிறான். ஆகவே, இறைவன் இவ்வெச்சரிக்கை செய்த பிறகு முஸ்லிம்களைத் தாழ்த்தாம லிருப்பானாயின் அதுதான் மிகவும் ஆச்சரியமானதும், அவனது நீதி நியாயத்திற்கு மாறானதுமான காரிய

மாகும். எவ்விதமான முயற்சியும் பிரயத்தனமும் இல்லாமலே ஒருவருர்கு உதவி செய்வதாக இருக்கும்பக்ஷத்தில் அவனது றஸூல் நாயகம் ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் யுத்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டிருக்காது. புறக்காரணங்களெதுவு மில்லாமலே அவர்களுக்கு உதவி புரிந்து வெற்றியளித்திருப்பான். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா?

உங்களிடமுள்ள ஐவேஜில் அல்லாஹுத ஆலாவுக்கு நூறுபங்கு இருப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த நூறு பங்கில் நீங்கள் மிகவும் வருத்தத்துடன் வேண்டாவெறுப்பாக ஒன்று அல்லது இரண்டு பங்கைத்தான் அவனது பாதையில் செலவு செய்கின்றீர்கள். உங்களது மூதாதையர் 100 பங்கையுமோ அல்லது 70, 80 பங்குகளையோ செலவு செய்திருக்கின்றனர். இவ்வித நிலைமையில் உங்களுடைய மூதாதையருக்கு எவ்வளவு கண்ணியமும் சிறப்பும் இருந்ததோ அவ்வளவு கண்ணியமும் சிறப்பும் உங்களுக்கும் இருக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்க முடியுமா? இவ்வாறு சமத்துவமான கண்ணியம் உங்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது என்பதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அப்படி அவன் செய்வது அவனது நீதிக்கும் இயற்கைச் சட்டத்திற்கும் விரோதமானது. அவன் முஸ்லிம்களுடன் இப்படிச் செய்வதாக வாக்குத் தத்தம் அளிக்கவே இல்லை. அவன் கூறிய வாக்குத்தத்தம் வருமாறு:—

"நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளிடமிருந்து அவர்களுடைய உயிர்களையும் பொருள்களையும் அவர்களுக்குச் சொர்க்கமிருக்கிறது என்பதற்கு (அதாவது) அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்யவேண்டும் என்பதற்குப் பதிலாக விலைக்கு வாங்கிக்கொண்டான். ஆகவே அவர்களும் வெட்டவேண்டும் வெட்டப்படவும் வேண்டும். இதன் பேரில் அல்லாஹ்வின் உண்மையான வாக்குறுதி தௌறாத், இன்ஜீல், குர்ஆன் ஆகியவைகளிலிருக்கிறது. எனவே, எவர் அல்லாஹ்வில் நின்றுமுள்ள இவ்வாக்குறுதியைப் பூர்த்தி செய்கிறாரோ அவர் நீங்கள் செய்திருக்கிற இந்த பைஅத்தைக்கொண்டு சுபச்செய்தியடையட்டும். இன்னும் இதுதான் மகத்தான பாக்கியம்."

முஸ்லிம்கள் இந்த வாக்குறுதியின்படி இதில் சொல்லப்பட்ட லக்ஷணங்களின்படி பூரணமாக இருக்கிறார்களா? இப்பொழுதுள்ள முஸ்லிம்களிடம் சங்கைவான்களான ஸஹாபிகளின் உதாரணங்களிருக்கின்றனவா? ஸஹாபிகள் ஷஹீதாகுவதற்காகத் தாங்களாகவே மரணத்தைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அவர்களிலுள்ள குதிரைவீரர்கள் காபர்களின்மீது பாய்ந்து தாக்கும்போது "நாங்கள் சுவர்க்கத்தின் நல்வாடையை முகர்ந்துகொண்டிருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டிருந்தனர். அவர்களது கைகளை அசைக்கச் சக்திஇருக்கும்வரையில் அவர்கள் யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். இறுதியாக அவர்கள் ஷஹீதாகுவார்களாயின் அவர்களது திருநாவிலிருந்து "இன்றுதான் சந்தோஷதினம்" என்ற வார்த்தைகள் வெளியாகிக்கொண்டிருந்தன. ஷஹீதாகவேண்டும் என்ற இப்பேராசையுடன் அவர்கள் யுத்தம்செய்தும் ஷஹீதாகாமல் வீடுதிரும்பவேண்டியதேற்பட்டால் மிகவும் துக்கமடைந்தவர்களாகவே தங்கள் ஜனங்களிடம் திரும்பவருவது அவர்களது வழக்கமாக இருந்துகொண்டிருந்தது.

முஸ்லிம்களும் பரங்கியர்களும். *

முஸ்லிம்கள் உயிரையும் பொருளையும் தியாகம் செய்யவேண்டுமென்று திருகுர்ஆன் கூறுகிறது. ஆனால், இன்றைய முஸ்லிம்களினுடைய இருதயத்தில் இவர்களுடைய மூதாதையரின் இருதயத்திலுள்ள முஹப்பத் இல்லை. இதிலும் மிக வருந்தத்தக்க விஷயம் என்னவெனில் இஸ்லாத்திற்கு விரோதியானவர்கள் இஸ்லாமியக் கட்டளைகளைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், திரு குர்ஆனிலிருந்து அவர்கள் பின்பற்றும் கட்டளைகள் அவர்களுடைய வேதத்தில் இல்லை. உயிர்பொருள் ஆகியவைகளைத் தியாகம் செய்யவேண்டும் என்ற இதே கட்டளையைப் பாருங்கள். ஐரோப்பியர்கள் மகாயுத்தத்தில் தங்களுடைய அந்தஸ்தையும் பாத்தியதைகளையும் காப்பாற்றிக்கொள்வதற்காகச் செய்த தியாகங்கள் மனித புத்திக்குப் புறம்பானவைகளாக இருக்கின்றன. ஜெர்மனியர்கள் மகாயுத்தத்தில் 20 லக்ஷம் வாலிபா

---

*மேனாட்டு கிறிஸ்தவர், பிரஞ்சு, ஜெர்மனி, ருஷியா, பிரிட்டிஷ், இதாலி முதலியவர்களுக்கு பொதுப்படையாக கூறுமிடத்து பரங்கியர் எனக் கூறப்படுகிறது.

களை உயிர்த்தியாகம் செய்வித்திருக்கிறார்கள். பிரஞ்சுக்காரர்கள் 24 லக்ஷம், ஆங்கிலேயர்கள் 6 லக்ஷம், இத்தாலியர்கள் 407 ஆயிரம் வாலிபர்களின் உயிர்களைத் தியாகம் செய்தார்கள். உயிர்த்தியாகத்தை மட்டிலும் பார்க்க வேண்டாம். பொருள் தியாகத்தையும் கவனியுங்கள். ஆங்கிலேயர்கள் 300 கோடி பவுன், பிரஞ்சுக்காரர்கள் 200 கோடி பவுன், ஜெர்மனியர்கள் 300 கோடி பவுன், இத்தாலியர்கள் 50 கோடி பவுன் செலவு செய்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் செலவு செய்ததற்குக் கணக்கில்லை. அவர்கள் செய்த அபரிமிதமான தொகையின் காரணமாக அந்த தேசம் முழுவதிலும் பஞ்சமேற்பட்டு அதன் மூலமாக போல்ஷிவிக் இயக்கம் பிறந்தது.

முஸ்லிம்களிலுள்ள எந்த தேசத்தார் இவ்வளவு அதிகமான தியாகத்தைச் செய்திருக்கிறார்கள்? என்பதை எனக்கறிவியுங்கள். கிறிஸ்துவர்கள் தங்களது உயிர்களையும் பொருள்களையும் கணக்கில்லாமல் தங்கள் சமூகத்தாருக்காகவும் தேசத்திற்காகவும் அற்பணம் செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவு தியாகத்திற்குப் பிறகு அவர்களுக்கு அல்லாஹுதஆலா இந்த கௌரவத்தையும் செல்வத்தையும், அதிகாரத்தையும் அளித்து முஸ்லிம்களுக்கு இவைகளில்லாமற் செய்தான் என்றால் இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் ஒன்றுமில்லை.

முஸ்லிம்கள் ஏழைகள், அவர்களிடம் இவ்வளவு திரவியம் எங்கே இருக்கிறது என்று சொல்லலாம். நாம் முஸ்லிம்களிடம் அதிகமாக ஒன்றையும் கேட்கவில்லை. அவர்களது சக்திக்குத்தக்கவாறு கிறிஸ்துவர்களின் விகிதாசாரப்படி கொடுக்கவேண்டும் என்றே கூறுகிறோம்.

கிறிஸ்துவர்களில் சிலர் தங்களது சமூகப் பொக்கிஷத்தில் சரிபாதியை மகாயுத்தத்தில் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால், முஸ்லிம்களில் எவரும் தங்களது சமூகத்தினுடைய அல்லது தனிப்பட்ட அந்தஸ்தினுடைய அளவிற்கு உயிராலும் பொருளாலும் இவ்வளவு தியாகத்தைச் செய்யவில்லை. துருக்கியர்கள் கிரேக்கரை எதிர்த்துத் தங்களது உயிர்களையும் பொருள்களையும் கணக்கில்லாமல் அற்பணம் செய்தபோது எவ்வளவு மகத்தான வெற்றியை அடைந்தனர், எவருடைய நினைப்பிலுங் கூட வரமுடியாத அவ்வளவு பெரிய தோல்வியைக் கிரேக்கர்களுக்குத் துருக்கியர் அளித்தனர். ஐரோப்பியர் துருக்கியர்களை கேவலமானவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் ஆக்கவிரும்பினர். ஆனால், அவர்கள் மறுபடியும் சுதந்திரவான்களாகிவிட்டனர். துருக்கியரின் இந்த வெற்றி இலவசமாகவந்துவிடவில்லை என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் உணரவேண்டும். துருக்கியரில் சிலர் தங்களுடைய செல்வத்தில் மூன்றிலொருபாகத்தை, வேறு சிலர் சரிபகுதியை யுத்தத்திற்காகக் கொடுத்துதவினர்.

எனவே, முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தின் கட்டளைகளின்படி நடந்து, தங்கள் மூதாதையரின் அடிச்சுவட்டைப் பின்பற்றினால் அல்லது குறைந்த பக்ஷம் ஐரோப்பியர்களைப் போலேனும் சரியான விதத்தில் நடந்துகொள்வார்களாயின் அவர்களுடைய கிரியைகளுக்குத்தக்க பலன் அவசியம் கிடைக்கத் தான் செய்யும். ஆனால், இன்றைய முஸ்லிம்களிற் பெரும்பாலர் தங்கள் இச்சையுடன் விளையாடிக்கொண்டிருக்கின்றனர்.

சுத்த வீரர்களுக்குடைய காரியம் செய்யாமலும், தியாகம் செய்யாமலும், மரணத்தில் விழாமலும், உயிரையும் பொருளையும் அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணம் செய்யாமலும் இலவசமாக அல்லாஹ்வின் உதவியும் தௌபீக்கும் கிடைக்க வேண்டுமென்று கோருகின்றனர். ஆனால், அல்லாஹ்த ஆலா தனது திருமறையில் "அல்லாஹ்வுக்கு நீங்கள் உதவி செய்வீர்களாயின் அவன் உங்களுக்கு உதவி புரிவான். இன்னும் உங்கள் கால்களை ஸ்திரம் செய்துவைப்பான்" என்று கூறி இருக்கிறான்.

துஆச்செய்வதுமட்டிலும் போதாது.

அல்லாஹுதஆலாவுக்கு நம்மிடம் தேவை ஒன்றுமில்லை. அல்லாஹுவுக்கு உதவிசெய்தல் என்பதற்கு அவன் நமக்கு ஏவிய கட்டளைகளின்படி நடப்பது என்பதுதான் கருத்து. ஆனால், அன்னோ!! முஸ்லிம்கள் தங்களது மார்க்கக்கட்டளைகள் அனைவற்றையும் முதுகுக்குப் பின்னால்போட்டுவிட்டு நாவினால்மாத்திரம் தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்வதனாலேயே தங்களுக்கு கண்ணியமும் பெருமையும் கிடைத்துவிடவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்.)

0834

சந்தா நேயர்கட்கு!

அன்பீர் !

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1935-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பிவைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருஷத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள் நிகழும் 1936-ம் ஆண்டுக்குரிய சந்தா ரூபாயை முன்பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மதுஷரீப் சாஹிப் அவர்கள்,

(208, ஸிலிங்கி ரோட்) இடமும்

பினங், மலாக்கா & மலாய் நாட்டு வாசிகள்

ஜனாப் K. A. பகீர் முகம்மது சாஹிப்,

(P. O. Box No. 60, கிள்ளான்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குதெருவு, கோழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

"யவ்முந் நபி"

திருநபி திருதினக் கொண்டாட்டம்

சத்தியத்தூதர், உத்தமகுணசீலர் 'முஹம்மது நபி' (ஸல்.) அவர்கள் உலகின்கண் தோன்றி, மானிட வர்க்கத்துக்குச் செய்துள்ள பேருபகாரங்களையும், அவைகளினுல் மானிடர் அடைந்துள்ள நன்மைகளையும் நம்மவரும் இதரர்களும் தெரிந்து கொள்ளுவதற்கும், அதனை மக்களிடையே பரத்துவதற்கும் ரபீஉல் அவ்வல் 12-ந் திகதி ஏற்ற தினமாகும். அத்தினம் இவ்வாண்டில் 3-6-36 புதன்கிழமை வருகிறது. அன்றைய தினத்தில் ஒவ்வொரு இடங்களிலும் மாபெரும்மகா நாடுகள் கூட்டி, நபிகள் திலகம் (ஸல்) அவர்களது வாழ்க்கைச் சரிதை, ஹிதோபதேசம் முதலியவைகளை மக்களுக்கு விளக்குவதுடன் உங்கள்" ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டிருக்கும் ஸீரத் பிரசங்க நூலை வாசித்துக காட்டி ஏராளமான பிரதிகளை வினியோகிக்கவேண்டும். பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது மகத்துவம் உலகமெங்கும் மிளிர்ந்திலங்க வேண்டுமென்பதைக் கருதி அகில உலக ஸீரத் கமிட்டியார் அபார முயற்சி செய்துவருகிறார்களென்பது உலகமறிந்த விஷயம். அன்றையதினம் ஒரே பிரசங்கம் உலகமுழுவதிலும் படிக்கப்படவேண்டுமென்பதே அவர்களின் நோக்கமாகும். எனவே, அவர்கள் இவ்வாண்டின் மீலாத்ஷரீப் விழாவிற்கென்றே, தயாரித்துள்ள பிரசங்கத்தை நம் சங்கம் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கின்றது. அன்று பிரசங்கிப்பதற்கும், வினியோகிப்பதற்காகவுமென்றே தயாரிக்கப்பட்டிருக்கும் இப்பிரதிகளின் கிரயம் மிகச்சொற்பமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இவைகளை வாங்கி பயன் பெறுவீர்களாக.

100 பிரதிகளுக்கு குறையாது ஆர்டர் செய்பவர்களின் பெயர்களை அதன் அட்டையில் பிரசுரித்துக் கொடுக்கப்படும்.

போஸ்டேஜ் அதிகமாவதால் நண்பர்கள் தங்களுக்குத்தேவையுள்ள பிரதிகளுக்குள்ள கிரயத்தை அனுப்பிவைத்து சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனை தெரிவித்தால் அனுப்பிவைப்பதற்குச் சௌகரியமாகவிருக்கு

1000	பிரதிகள்	...	ரூ.	25—0—0
500	ஷை	...	ரூ.	13—0—0
250	ஷை	...	ரூ.	7—0—0
100	ஷை	...	ரூ.	3—0—0

தபால் சார்ஜ் வேறு

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதரா

தமிழ்நாடு உலகை ... சென்னை-600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.